# வாழிய காதலி

## அமுதா கணேசன்

## 1

"அம்மா... நான் போய்விட்டு வந்துவிடுகிறேன்."

அன்பு கிளம்பிவிட்டான். அவன் கையில் ஒரு மெல்லிய கோப்பு.

"எல்லாம் கவனமாக எடுத்துக்கொண்டாயா?" காமாட்சி ...க்கறையாகக் கேட்டாள்.

"எடுத்துக்கொண்டேன்" என்று கையிலிருந்த கோப்பை சற்றுத் ...ரக்கிக் காட்டினான், அன்பு.

"நிதானமாகப் பதில் சொல். அவசரம் வேண்டாம். அவநம்பிக்கையும் ...வண்டாம்." காமாட்சி அறிவுரை கூறினாள்.

"சரியம்மா" என்று சொல்லிவிட்டு அன்பு நகர்ந்தான்.

கூடத்தில் சுந்தரம் செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்தார்.

"போய் வந்துவிடுகிறேன், அப்பா" அவர் பக்கம் பார்வையைத் திருப்பி ...சால்லிக்கொண்டே அன்பு நடந்தான்.

"இன்று நல்ல நாள்தானா?" சுந்தரம் கேட்டார்.

"அவர்கள் கூப்பிடும் நாளில்தானே இவன் போகமுடியும்?" ...ின்னேயே வந்த காமாட்சி மகனுக்காகப் பதில் கூறினாள்.

"நேரமாவது பார்த்தாயா? இன்றைக்கு என்ன கிழமை... திங்கள்..." ...ந்தரம் ராகு காலத்தை நினைவுபடுத்த முயன்றார்.

"அவர்கள் வரச்சொல்லுகிற நேரத்தில்தானே இவன் போகமுடியும்?" ...ன்ற காமாட்சி, "நேரமாகிறது. நீ கிளம்பு" என்று மகனை ...விரைவுபடுத்தினாள்.

"படி இறங்கும்போது சகுனம் பார்த்துப் போ" சுந்தரம் பார்வையை



செய்தித்தாளில் பதித்தார்.

"இந்தக் காலத்தில் எந்தப் பெண்ணும் மொட்டை போட்டுக் கொள்ளுவது இல்லை" சொல்லிக்கொண்டே காமாட்சி மகனைத் தொடர்ந்தாள்.

"மொட்டை வராவிட்டாலும், முட்டை வரும் அல்லவா?" பார்வையை நகர்த்தாமலே சுந்தரம் சொன்னார்.

இதற்குள் அன்பு படி இறங்கிவிட்டான். "வருகிறேன். அம்மா."

அன்பு இளமை பொங்கும் இளைஞன். ஆறடிக்கு மேல் இருப்பான். சின்ன மீசை அவனது முகத்துக்கு அழகு கூட்டியது. உயரத்துக்கு ஒப்ப உறுதியான உடல்கட்டு. 'துருதுரு' என்று எப்பொழுதும் ஏதாவது செய்துகொண்டிருப்பான்.

"எம்.காம்." முடித்து, கணினிப் பயிற்சியும் எடுத்துவிட்டான். "கணினி கற்றால் உடனே வேலை" என்றார்கள். ஆனால், அன்பு ஓராண்டாக அலைந்துகொண்டிருக்கிறான். எங்கே போனாலும், "முன் அனுபவம் இருக்கிறதா?" என்று கேட்கிறார்கள். அனுபவம் பெற யார் வேலை கொடுக்கிறார்?

இப்பொழுதும் வேலை தேடித்தான் போய்க்கொண்டிருக்கிறான். ஒரு நிறுவனத்தில் நேர்முகப் பேட்டிக்கு அழைத்திருக்கிறார்கள். வாரத்தில் ஓரிரு பேட்டிக்குப் போவது வழக்கமாகிவிட்டது. மிடுக்காக உடுத்திக்கொண்டு போவான். நறுக்காகப் பதில் அளிப்பான். ஆனாலும், ஏமாற்றத்துடன் திரும்புவான். பெண் பார்க்கும் கதைதான்! சிற்றுண்டி மட்டும் கிடையாது.

பேருந்து நிறுத்தத்தில் நின்றான், அன்பு. அவன் அண்ணாசாலைக்குச் செல்லவேண்டும். அதற்கான பேருந்துக்காகக் காத்து நின்றான். ஐந்தாறு நிமிடத்தில் பேருந்து வர ஏறிக்கொண்டான்.

அடுத்த சில நிமிடத்தில் "சட்டச் சடசட" என்று மழை கொட்டத் தொடங்கிவிட்டது. திடீர் மழை. பெரிய பெரிய துளிகள். சாலையில் தண்ணீர் ஓடத் தொடங்கிட்டது.

அன்புக்கு ஒரு சிறுகவலை. ஆனாலும், கோடைமழை; முன்னறிவிப்பு இல்லாமல் வரும்; சட்டென்று நின்றுவிடும் என்று ஆறுதலும் அடைந்தான்.

ஆனால், அவன் நினைத்தது போல இல்லை. அண்ணாசாலையில் போய் அவன் இறங்கியபொழுது மழை வலுத்திருந்தது. சாலையில் ஓடையாகத் தண்ணீர் ஓடியது. அங்கங்கே ஓரங்களில் பலர் ஒதுங்கி நின்றார்கள். இவனும் பேருந்திலிருந்து இறங்கி ஓடிப்போய் அவர்களுடன் சேர்ந்துகொண்டான்.

அந்தக் கண் இமைக்கும் நேரத்தில் அவன் நனைந்துவிட்டான். தலையில் தண்ணீர்த் துளிகள். சட்டை பொட்டுப் பொட்டாக நனைந்திருந்தது. கைக்குட்டையால் தலையை ஒற்றிக்கொண்டு, பையிலிருந்து சீப்பு

எடுத்து தலையைப் படிய வைத்துக்கொண்டான்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தான். பத்தாக இன்னும் பத்து நிமிடம் இருந்தது. அதற்குள் அவன் அந்த நிறுவனத்தில் நின்றாக வேண்டும். பத்து மணிக்கு வரும்படி அழைத்திருந்தார்கள்.

அவன் போகவேண்டிய நிறுவனம் இங்கிருந்து நூறு மீட்டர்தான் இருக்கும். ஆனால், மழையின் வேகத்தைப் பார்த்தால், போகுமுன் அவனை தெப்பமாக நனைத்துவிடும். உடைகளிலிருந்து தண்ணீர் கொட்டும். உடை கிடக்கட்டும்; கையிலிருக்கும் கோப்பு நனைந்து விடக்கூடாதே! அதில்தான் அவனது வாழ்க்கையே இருக்கிறது— சான்றிதழ்கள் அனைத்தும் அடக்கம். அவை நனைந்துவிட்டால், இவனது வாழ்க்கை பதத்துவிடுமே!

ஆனால், பத்து மணிக்குள் போய்விடவேண்டும். பேட்டிக்கு அழைப்பவர்கள் இதையும் கவனிப்பார்கள் அல்லவா? 'எதையும் நேரந்தவறாமல் செய்யக்கூடியவன்' என்ற எண்ணம் அவர்களுக்கு வரவேண்டுமே!

துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அன்பு தவித்தான். பத்து மணிக்குள் பேட்டிக்கு இருந்தே ஆகவேண்டும். ஓடினால், மூன்று நிமிடம்கூட ஆகாது. ஆனால், மழை. தண்ணீர் சொட்டச் சொட்ட அங்கே போய் நின்றால் அழகாகவா இருக்கும்? 'மழைக்கும் அஞ்சாது, நேரம் காப்பவன்' என்ற பெயரும் கிடைக்கலாம்; 'மழைக்கு ஒதுங்க வேண்டும் என்ற அறிவுகூட இல்லையே' என்ற எண்ணமும் தோன்றலாம். 'எருமை மாட்டு மீது மழை பெய்த கதைதான்' என்று சிரிக்கவும் செய்யலாம்.

சாலையில் நடமாட்டமே இல்லை! ஒரு எருமையைக் கூடக் காணோம்! கார்கள், பேருந்துகள் மட்டும் தண்ணீரை வாரி இறைத்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தன. இவன் மட்டும் ஓடினால், 'பைத்தியக்காரன்' என்று பார்ப்பார்கள்.

இவன் நின்ற இடத்தில் கூட்டம் பெருகிக்கொண்டே வந்தது. பேருந்திலிருந்து இறங்கியவர்கள் இங்கேதான் ஓடிவந்து ஒதுங்கினார்கள். பேருந்தைப் பிடிக்க ஓரிருவர்தான் போனார்கள். மற்றவர்கள் மழை மீது பழிபோட்டுவிடுவார்கள்!

யார் கையிலும் குடையில்லை. சற்று முன்வரை மழை வரும் அறிகுறியே இல்லையே!

அன்புக்கு அந்த மழையிலும் நெருப்பில் நிற்பது போலிருந்தது. அடிக்கடி கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டான். முட்கள் வேகமாக— மிக வேகமாக ஓடிக்கொண்டிருந்தன.

படகு போலத் தண்ணீரைக் கிழித்துக்கொண்டு ஒரு பேருந்து வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய நாலைந்து பேர் ஒதுங்க இடம் தேடி ஓடிவந்தார்கள்.



கடைசியாக ஒரு பெண் இறங்கினாள்!

அவளைவிட அவள் கையில் வைத்திருந்த வண்ணக் குடைதான் அன்புவின் கண்ணைக் கவர்ந்தது.

அந்தப் பெண் மழையைப் பற்றிக் கவலைப்படாமல் ஒரு கையில் சேலையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, மறுகையில் குடையைப் பிடித்தபடி நடந்தாள்.

அன்பு கொஞ்சமும் தாமதிக்கவில்லை. ஓடிப்போய் அவளது குடையில் ஒண்டிக்கொண்டான். ஆபத்துக்குப் பாவமில்லை அல்லவா?

"மன்னிக்க வேண்டும். நான் அவசரமாகப் போகவேண்டும். பக்கத்தில்தான்" மன்னிப்புக் கேட்கும் பாவனையில் அன்பு சொன்னான்.

அவள் வியப்பாக விழிகளை விரித்து அவனைப் பார்த்தாள். அவள் முகத்தில் வெட்கத்தைவிட ஆச்சரியந்தான் அதிகமாக இருந்தது.

"பத்து மணிக்கு ஒரு பேட்டிக்கு இருக்கவேண்டும். பக்கத்துக் கட்டிடந்தான்" என்றான், அன்பு.

இரண்டு பேருக்கு உரிய குடை அல்ல, அது— அவர்கள் காதலர்களாக இருந்தால் தவிர! இவர்கள் இருவரும் நெருக்கமாக இருந்தாலும், ஒருவருடன் ஒருவர் உரசிக்கொள்ளவில்லை. அந்தப் பெண் கொஞ்சம் விலக முயற்சித்தாள். அவளது பாதி உடல் குடைக்கு வெளியில் போய்விட்டது!

வெட்கப்பட்டாளோ, அவனுக்கு உதவ நினைத்தாளோ; "நீங்கள் போங்கள்" என்று அவன் கையில் குடையைக் கொடுத்துவிட்டு, அவனது பதிலைக்கூட எதிர்பாராமல் ஓடிப்போய், கூட்டத்துடன் சேர்ந்து ஒதுங்கிக்கொண்டாள்.

கொடை கொடுத்த வள்ளல்கள் உண்டு. இவள் குடை கொடுத்த வள்ளியாக இருக்கிறாளே! அன்பு மிகுந்த ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான். அவளுக்கு நன்றி சொல்லக்கூடத் தோன்றவில்லை. அவ்வளவு அவசரம்! குடையைப் பிடித்துக்கொண்டு நடந்தான்.

காலடியில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்ததால், அவன் நினைத்த வேகத்தில் போக முடியவில்லை.

லெட்சுமி நிதி நிறுவனத்துக்குள் அவன் நுழைந்தபொழுது மணி 10.5 ஆகிவிட்டது. அவசரமாகக் குடையை மடக்கி, உடையை சரி செய்துகொண்டு, லிப்டில் ஏறினான்.

இரண்டே இரண்டு பேர்தான் பேட்டிக்கு வந்திருந்தார்கள். மற்றவர்கள் மழைக்கு ஒதுங்கிவிட்டார்கள் போலிருக்கிறது.

"இன்றைக்குப் பேட்டியில்லையாம்!" பேட்டிக்கு வந்திருந்த ஒரு இளைஞர் தெரிவித்தார்.

"ஏன்? நிறையப் பேர் வரவில்லையா?" அன்பு கேட்டான்.

"பேட்டி நடத்தவேண்டியவரே வரவில்லையாம்!"

"மீண்டும் எப்பொழுது போட்டியாம்?"

"கடிதம் அனுப்புவார்களாம்."

அன்பு அலுவலகத்தின் உள்ளே சென்று, விசாரித்து, செவிவழிச் செய்திகளை உறுதிப்படுத்திக்கொண்டான். தான் வந்திருக்கும் விவரத்தையும் சொல்லாமல் சொல்லிவிட்டான்.

'ஓடி ஓடி வந்தும் இப்படி ஆகிவிட்டதே' என்று அன்புக்கு வருத்தந்தான்.

அந்த வருத்தத்துடன் அங்கிருந்து புறப்பட்டபொழுதுதான் அவனுக்கு அந்தப் பெண்ணின் நினைவு வந்தது!

அவளது நினைவு வந்ததும்தான் குடையை எங்கேயோ வைத்தோமே என்று தேடினான்.

ஈரம் சொட்டிய குடையைக் கையில் எடுத்துக்கொண்டு, வேகமாக 'லிப்டு'க்கு வந்தான்.

மின் தடை! 'லிப்டு' இயங்கவில்லை.

பாவம் அந்தப் பெண்! எங்கே போகவேண்டியவளோ! அவளைப் பிடிக்கத் 'தடதட' என்று படிகளில் இறங்கினான்!

## 2

கட்டிடத்தைவிட்டு வெளியில் வந்த அன்புக்குக் கோபம் கோபமாக வந்தது!

சற்றுமுன் மழை பெய்தது என்று சொன்னால், யாரும் நம்ப மாட்டார்கள். ஒரு துளி இல்லை! வானம் ஜெய்பூர் பளிங்குக்கல் போலிருந்தது. சாலை கழுவிவிடப்பட்டிருந்தது. நல்ல நடமாட்டம்.

'இதுதான் விதியா? இல்லை, இயற்கையின் சதியா?' என்று பட்டிமன்றம் நடத்த அன்புக்கு நேரமில்லை. அந்தப் பெண்ணைப் பிடித்துக் குடையைக் கொடுத்தாக வேண்டும்.

பேருந்து நிறுத்தத்தை நோக்கி விரைந்தான்.

அங்கே யார் யாரோ நின்றார்களே தவிர, அந்தப் பெண்ணைக் காணோம்!

மழைவிட்டதும் போய்விட்டாளோ?

எங்கே போயிருப்பாள்?

அவள் எங்கே போகவேண்டியவள்?

எங்கேயிருந்து வந்தாள்?

இவனுக்கு உதவ வந்த தேவதை போலப் பேருந்திலிருந்து





இறங்கினாள். அவள் வந்த பேருந்து என்ன என்ற என்றுகூட இவன் பார்க்கவில்லை.

அவளிடம் குடையைக் கொடுத்தாக வேண்டுமே?

அவள் பேருந்திலிருந்து இறங்கி, குடையைப் பிடித்தபடி வலப்புறந்தானே போனாள்?

அந்தப்புறத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

வரிசையாக அடுக்கு மாடிக் கட்டிடங்கள்.

அவள் எந்தக் கூட்டுக்குள் இருப்பாளோ?

சரி, முதலில் அவள் வேலைக்குப் போகும் பெண்தானா?

அவள் முகத்தையே சரியாகப் பார்க்கவில்லையே!

அன்பு குழம்பினான்.

முப்பது நிமிடம் போல அவளுக்காக அங்கே காத்துக்கொண்டு நின்றான்.

மாலையில் மழை வந்தால்; அவளுக்குக் குடை வேண்டியிருக்குமே?

அதுதான் 'தனக்கு மிஞ்சித்தான் தானம்' என்றார்களோ!

அந்தப் பெண்ணை நினைக்க அன்புக்குப் பரிதாபமாக இருந்தது.

ஆனால், என்ன செய்ய முடியும்?

வீட்டுக்கு வழி பார்த்தான்.

**அ**ம்மாதான் வந்து கதவைத் திறந்தாள்.

அவனைக் குடையுடன் பார்த்ததும், "ஏதுடா குடை?" என்று வியப்புடன் வினவினாள்.

அன்பு நடந்ததைச் சொன்னான்.

"நல்ல பிள்ளைடா!" காமாட்சி சிரித்தாள். "பெண்களுக்குப் பின்புத்தி என்கிறார்களே; அந்தப் பெண் எவ்வளவு முன்புத்தியுடன் குடை கொண்டுவந்திருக்கிறாள்!"

"ஆனாலும், பெண்களுக்குப் பின்புத்தி பின்புத்திதாம்மா" என்றான், அன்பு.

"எப்படிடா சொல்லுகிறாய்?" காமாட்சி கேட்டாள்.

"மூன்று பெண்கள் சேர்ந்து வாஜ்பாயைக் கவிழ்த்தினார்களே; 'அடுத்து என்ன?' என்று ஒரு பெண்ணாவது சிந்தித்தார்களா? இல்லை! இப்பொழுது தேர்தலில் வந்து நிற்கிறது!"

"போதும்... போதும்... அரசியலைப் பற்றிப் பேசாதே."

"ஏனம்மா?"

"நம்ம ஊர் அரசியல் அப்படி நாறிவிட்டது! எப்படியோ போகட்டும். நீ போனது என்ன ஆயிற்று?"

"பேட்டி நடத்தவேண்டியவரே மழையால் வரவில்லை."



சங்கமம்

"மீண்டும் நடத்துவார்களா?"

"கடிதம் வருமாம்."

பேசிக்கொண்டே வீட்டுக்குள் வந்தார்கள்.

சுந்தரம் இன்னும் செய்தித்தாளுடன்தான் உட்கார்ந்திருந்தார். அவர் ஓய்வு பெற்றவர். எனவே, விளம்பரங்களைக்கூட ஒரு வரிவிடாமல் படிப்பார்!

"என்ன ஆயிற்று?" அவர் பங்குக்கு அவர் கேட்டார்.

"மழையால் பேட்டி நடக்கவில்லை" என்று அன்பு சொன்னான்.

"நான்தான் அப்போதே சொன்னேனே— நல்ல நேரம் பார்த்துக் கிளம்பு என்று!"

"நல்ல நேரம் பார்த்துக் கிளம்பியிருந்தால், மழை வராதாக்கும்" காமாட்சி கேட்டாள்.

"இந்தக் கொளுத்தும் வெயிலில் மழை பெய்திருக்கிறதே; அதுவே நல்ல நேரந்தான்" என்றான், அன்பு.

"அம்மாவும் பிள்ளையும் சேர்ந்துவிட்டீர்கள் அல்லவா? என்னை ஒதுக்கிவிடுவீர்களே" நெருப்புக் கோழி போல செய்தித்தாளுக்குள் தலையைப் புதைத்துக்கொண்டார், சுந்தரம்.

"அப்படி அல்ல, அப்பா. ஒரு நாளில் இராகுகாலம் ஒன்றரை மணி நேரம்; எமகண்டம் ஒன்றரை மணி நேரம்; ஆக மூன்று மணி நேரம். 24 மணி நேரத்தில் மூன்று மணி நேரத்தை கெட்ட நேரம் என்று ஒதுக்கிவிட முடியுமா? 'இராகுகாலம்– எமகண்டத்தில் நாங்கள் வேலை செய்ய மாட்டோம்' என்று தொழிலாளர்கள் உட்கார்ந்துவிட்டால், என்னப்பா ஆகும்?"

"இராகுகாலம்— எமகண்டம் பார்த்து ரெயிலை விடமுடியுமா?" காமாட்சி இடைவெட்டினாள்.

"அதுதான் ரெயில் கவிழ்கிறது" என்றார், சுந்தரம். "வாஜ்பாய்க்கு இது 13–வது மாதம். கவிழ்ந்துவிட்டார்."

"நேரு, இந்திரா காந்தியெல்லாம் ஆட்சி செய்தார்களே; அவர்களுக்கும் 13–வது மாதம் வந்ததே; அவர்கள் கவிழவில்லையே!" காமாட்சி வாதிட்டாள்.

"வாயை மூடு! உனக்குத்தான் பேசத் தெரியும் என்று பேசாதே" சுந்தரம் மனைவியை அடக்கினார்.

காமாட்சியும் வாயை மூடிக்கொண்டாள். அவருக்குக் கோபம் வந்தால் மனிதனாக இருக்கமாட்டார் என்பது அவளது வெள்ளிவிழா அனுபவம்!

"நம்ம பெரியவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல. அவர்கள் ஆண்டு அனுபவித்து அந்த அனுபவத்தைத்தான் சொல்லியிருக்கிறார்கள்" சுந்தரம் அடிக்கடி சொல்லுவதுதான், இது.

"உலகம் தட்டையானது என்று சொன்னவர்களும் பெரியவர்கள் தான். ஆனால், உலகம் உருண்டையானது என்று பிறகு நிரூபிக்கப் பட்டது. சோமன், அங்காரன் என்றெல்லாம் கோள்களை வழிபட்ட வர்களும் பெரியவர்கள்தான். இன்று சந்திரமண்டலத்தில் போய் மனிதன் இறங்குகிறான்."

பேசிக்கொண்டே போன மகனை சுந்தரம் கோபத்துடன் ஏறிட்டுப் பார்த்தபொழுதுதான் அவன் கையில் குடையிருப்பதைக் கவனித்தார். "ஏது குடை? எடுத்துப் போயிருந்தாயா?"

"அவன் மழையில் நனைவதைப் பார்த்து ஒரு பெண் குடை கொடுத்து உதவியிருக்கிறாள்" காமாட்சி தெரிவித்தாள்.

"யாருடா அந்தப் பெண்?" சுந்தரத்தின் குரல் சற்று வலுவாக ஒலித்தது.

"அது தெரியாமல்தான் குடையை வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான், அன்பு.

"முன்பின் தெரியாத பெண்ணா உனக்குக் குடை கொடுத்தாள்?" சுந்தரம நம்பமுடியாதவராகக் கேட்டார்.

"ஆமாம்" என்றான், அன்பு.

"அதுதான் இன்னும் மழை பெய்கிறது" என்றாள், காமாட்சி.

சுந்தரத்துக்கு இன்னும் நம்பமுடியவில்லை. அம்மாவும் பிள்ளையும் சேர்ந்து தன்னிடம் உண்மையை மூடி மறைப்பதாக நினைத்தார். "ஆடு நனைகிறதே என்று ஓனான் குடை கொடுத்ததாக்கும்!" தனது வெறுப்பை வெளிப்படுத்தினார்.

"முன்னப் பின்னே தெரியாத ஒரு பெண் எனக்குக் குடை கொடுத்து உதவியிருக்கிறாள். அவளை ஏன் இப்படிப் பேசுகிறீர்கள், அப்பா?" அன்பு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினான்.

"அவர் எப்பொழுதுமே இப்படித்தான். நீ வா" காமாட்சி மகனை அழைத்துப்போனாள்.

"இந்தக் குடையைத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும் அல்லவா?"

"கட்டாயம் கொடுத்தாக வேண்டும். ஆனால், அந்தப் பெண்ணை எப்படிக் கண்டுபிடிப்பது என்றுதான் தெரியவில்லை."

"எப்படியும் கண்டுபிடித்தாக வேண்டும் அல்லவா?"

"ஆமாம். கண்டுபிடித்துக் குடையை அவளிடம் கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால், அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்?"

"உன்னைப் பற்றி நினைப்பது இருக்கட்டும். இந்தக்காலத்தில் யாருக்குமே உதவி செய்யக் கூடாது என்ற முடிவுக்கு அவள் வந்துவிடக்கூடாதே."

"அவளை எப்படிக் கண்டுபிடிப்பது என்றுதான் தெரியவில்லை."



"பஸ்ஸில் வந்துதானே இறங்கினாள்?"

"ஆமாம்."

"நாளைக் காலையில் அதே பஸ் ஸ்டாண்டில் போய் நில்லு."

"அவள் வராவிட்டால்..."

"கற்பனைக் கேள்விகளுக்கு எல்லாம் நான் பதில் சொல்ல முடியாது!" காமாட்சி சிரித்தாள்.

**மா**லையில் மீண்டும் மழை வந்துவிட்டது. வேலை முடிந்ததும், தோழி ஒருத்தியின் குடையில் ஒண்டிக்கொண்டு பேருந்து நிலையத்துக்கு வந்துசேர்ந்தாள், மலர்.

"உன் குடை என்ன ஆயிற்று?" என்று கேட்ட தோழியிடம் மலர் கதையைச் சொல்லவேண்டியிருந்தது.

"அவர் அழகா இருப்பாரா?" தோழி கண்ணைச் சிமிட்டினாள்.

"உன் புத்தி உன்னைவிட்டுப் போகாதே!" மலர் தோழியை இடித்தாள்.

தோழி ஒரு ஜாலி! இன்பக் கதைகள் பேசுவதுதான் அவளது ஜோலி! "உனக்கு வேண்டாம் என்றால் எனக்குக் கொடுத்துவிடுடீ!" என்றாள், கேலி!

"ஏண்டி இப்படிப் பறக்கிறாய்?" மலர் கோபித்துக்கொண்டாள். இவள் "சைவம்"!

"என்னடி செய்வது? இராமன் வருவான் என்று காத்திருந்தேன்; இராவணன்கூட வரவில்லையே!" என்று புதுக்கவிதை பாடினாள், அந்த முதிர்கன்னி. "இனி நானாக யாராவது ஒரு இளிச்சவாயனைத் தேடிப் பிடித்துக்கொண்டால்தான் உண்டு."

"அவரைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை" என்றாள், மலர்.

"அடி கள்ளி! முதல் பார்வையிலேயே ஆளை எடை போட்டு விட்டாயா?"

அவள் கன்னத்தைக் கிள்ளினாள், தோழி.

மலருக்குக் கன்னம் சிவந்துவிட்டது!

## 3

**ப**ன்னீர் தெளிப்பது போல மழை தூறிக்கொண்டிருந்தது!

பேருந்திலிருந்து இறங்கிய மலர் நிற்கவில்லை. 'அழுகிணி' மழை எப்போது ஓயும் என்று யாரும் ஆரூடம் சொல்ல முடியாது. ஒதுங்குகிற அளவு மழையும் இல்லை. அம்மா வேறு சும்மாவே வயிற்றில் நெருப்பைக்

கட்டிக்கொண்டு இருப்பார். கொஞ்ச நேரமானாலும் ஆயிரம் கேள்வி கேட்பார். எனவே, மலர் பூ மழையில் நடந்தாள்.

வீடு சற்று உள்ளே தள்ளித்தான் இருக்கிறது. 15–20 நிமிடமாவது ஆகும். வேக நடையில் 15 நிமிடத்தில் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

"என்னடி இப்படி நனைந்துகொண்டு வருகிறாய்?" அவளை எதிர்பார்த்து வழிமேல் விழி வைத்திருந்த அம்மா, நீர்யானை போல 'ஆ' என்று வாயைப் பிளந்தாள். "குடை எங்கே?"

மலர் உடனே பதில் சொல்லிவிடவில்லை. தனது அறைக்குச் சென்று, துண்டு எடுத்து, தலையைத் துவட்டினாள். கதவை சாத்திக்கொண்டு, இரவு உடைக்கு மாறினாள்.

அவள் வெளியே வந்தபொழுது கையில் காப்பியுடன் தயாராக நின்ற அம்மா அலமேலு, "குடையைக் காணோமே? எங்கே வைத்தாய்?" என்று கேட்டாள்.

மலர் நடந்ததைச் சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

அலமேலுவோ நெற்றிக்கண்ணைத் திறந்தாள். "இப்படி ஒரு பெண் இருப்பாளா... கையில் இருந்த குடையை யாருக்கோ கொடுத்துவிட்டு இவள் மழையில் நனைந்துகொண்டு வந்தாளாம்! தனக்கு மிஞ்சித்தான் தானம் என்பது இவ்வளவு பெரிய பெண்ணுக்குத் தெரியவில்லையே! இரண்டரைக் கழுதை வயது ஆனதுதான் மிச்சம்" அலமுக்குக் கோலம் போடப் புள்ளி வைத்துப் பழக்கமே தவிர, பேச்சுக்குப் புள்ளி வைக்கத் தெரியாது!

மலருக்கும் கேட்டுக் கேட்டுப் பழகிவிட்டது. இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுவிடுவாள். சம்பாதிக்கிற பெண் என்பதால் அதிகமாகவே உரிமை எடுத்துக்கொள்ளுவாள்.

மலர் அவள்பாட்டுக்கு பக்கோடாவைக் கொறித்துக்கொண்டு, காப்பியையும் சுவைத்துக்கொண்டிருந்தாள்.

"அவன் யார் என்றாவது தெரியுமா? குடையை எப்படித் திரும்ப வாங்குவாய்?"

மலர் இரண்டு கையையும் விரித்தாள்.

"அப்படியென்றால்..."

"யார் என்று தெரியாது."

"பிறகு... குடை போனதுதானா?"

"குடையை வாங்கியவர் திருப்பிக் கொடுக்கமாட்டாரா?"

"அவருக்கு உன்னைத் தெரியுமா?"

"தெரியாது."

"பிறகு எப்படிக் கொடுப்பார்? உன்னைத் தேடி வருவாரா?"

அப்போதுதான் அலமுக்கு 'சுருக்' என்றது. "குடை போனால் போகிறது போ. விட்டுவிடு."



அம்மாவா இப்படிச் சொல்லுகிறார்? மலருக்கு வியப்பாக இருந்தது. "ஏனம்மா அப்படிச் சொல்லுகிறீர்கள்? புதுக் குடை—போன மாதந்தான் வாங்கினேன். முழுதா இருநூறு ரூபாய் ஆகிவிட்டது."

"அதுக்காக? நீ அந்தப் பையனைத்தேடிப் போகமுடியுமா? அல்லது அந்தப் பையன் உன்னைத் தேடி வருவானா? ஊரின் கண் பொல்லாதது! வாய் அதைவிடப் பொல்லாதது! ஊர் வாயில் விழுவது நல்லது அல்ல."

மலருக்கு அம்மா சொல்லுவது புரிவது போலவும் இருந்தது; புரியாதது போலவும் இருந்தது.

'அந்த' விஷயத்தில் அலமேலு கண்டிப்புதான். 'கைம்பெண் வளர்த்த பிள்ளை கழுதையாகப் போய்விடும்' என்பார்கள். எனவே, அலமு மிகவும் எச்சரிக்கையாக இருந்தாள். மலர் வேறு வேலைக்குப் போய் வருகிறாள். கரும்பு கட்டோடு இருந்தாலே எறும்பு வரும் என்பார்கள். எனவே, மகளைக் கண்கொத்திப் பாம்பு போலப் பார்த்துக் கொள்ளுகிறாள். காலாகாலத்தில் ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்து விடவும் ஆசை. அதேநேரம் மகளைவிட்டால் வேறு ஆதாரம் கிடையாது. மலரும் அவசரமே வேண்டாம் என்கிறாள். அலமுக்கு இரு மனமாக இருந்தாலும், பருவக்கொடி தானே எங்கும் படர்ந்துவிடக்கூடாது என்ற பயமும் உண்டு!



## புற்றுநோயா?

புற்றுநோய் வராமல் தடுக்கும் சக்தி மாம்பழத்துக்கு இருக்கிறது.

அடிக்கடி மாம்பழம் சாப்பிட்டு வந்தால் புற்றுநோய் வராது. மாரடைப்பு வருவதையும் அது தடுக்கிறது. குடல்



இறக்கம், குடல்வால் நோய் முதலான நோய்கள் ஏற்படுவதையும் தடுக்கக்கூடியது மாம்பழம்.

மாம்பழம் நார் ஆக இருக்கிறது. இந்த நார் குடலை சுத்தம் செய்கிறது. குடல் சுத்தமானால், உடல் நோய் நொடியில்லாமல் சுத்தமாக இருக்கிறது!

முதிர்கன்னியான தன் தோழியைப் பற்றி மலர் அம்மாவிடம் சொல்லியிருக்கிறாள். "அவளுக்கு என்னம்மா குறை? மகாராணி போல இருக்கிறாள்."

தனக்கு மகளின் ஆதரவு தேவை என்று அலமு நினைத்தாலும் 'தனக்குப் பிறகு மகளுக்கு ஆதரவு யார்?' என்று பெற்ற மனம் நினைக்கவும் செய்யும். 'எல்லாத்துக்கும் நேரம் வரவேண்டும் அல்லவா?' என்று எண்ணிக்கொள்ளுவாள்.

மலர் காலி தம்ளரை குறுமேசை மீது வைத்தாள். "குடை போனால் போகிறது" சொல்லிக்கொண்டே அலமு தம்ளரை எடுத்துப் போனாள்.

அதுக்கு என்ன பொருள்? சிந்தனையில் ஆழ்ந்தாள்.

**அ**டுத்த நாள். அதே காலை நேரம். கையில் குடையுடன் அன்பு புறப்பட்டான்.

சுந்தரம் வழக்கம் போல செய்தித்தாளுடன் அமர்ந்திருந்தார். இவன் வருவது தெரிந்ததும், ஏறிட்டுப் பார்த்தார்.'எங்கே போகிறாய்?' என்று அந்தப் பார்வை கேட்டது.

அந்தக் கேள்வியை அவர் ஒருபோதும், யாரிடமும் வாய்திறந்து கேட்பது இல்லை. அது அபசகுனமாம். பேருந்தில் 'எங்கே போக வேண்டும்?' என்று நடத்துநர் கேட்டால்கூட சுந்தரம் முறைப்பார்!

"அந்தப் பெண்ணைப் பார்த்து இந்தக் குடையைக் கொடுத்துவிட்டு வரப்போகிறேன், அப்பா" அவர் விழியால் வினவியதற்கு அன்பு மொழியால் பதில் சொன்னான்.

"அந்தப் பெண்ணைத் தெரியாது என்று நேற்றுச் சொன்னாய்? இன்று அவளைப் பார்த்துக் குடையைக் கொடுக்கப் போகிறேன் என்கிறாய்?"

"பஸ் ஸ்டாண்டில் பார்க்கப்போகிறேன். நேற்று பஸ்சில் வந்துதான் இறங்கினாள்."

"ஒரு பஸ்சுக்கு இரண்டு பஸ் பார். அவளுக்காக பஸ் ஸ்டாண்டிலேயே தவம் இருக்காதே. அவள் வரவில்லை என்றால், குடையைத் தூக்கி எறிந்துவிட்டு வந்துவிடு."

அன்புக்கு அதில் சம்மதம் இல்லை. எனவே, பதில் சொல்லாமல் நடந்தான்.

**நே**ற்றைவிட சற்று முன்னதாகவே அன்பு பேருந்து நிறுத்தத்துக்கு வந்துவிட்டான். கையில் மடக்கிய குடையுடன் நின்றான்.

பேருந்துகள் வரிசை வரிசையாக வந்து போய்க்கொண்டிருந்தன.

ஆண்களும் பெண்களும் இடித்துத் தள்ளிக்கொண்டு இறங்கினார்கள். ஏறினார்கள்.

ஒரு பேருந்து வந்து நின்றதுமே அன்பு எச்சரிக்கையாகிவிடுவான்.



இறங்குகிற பெண்களைக் கூர்ந்து கூர்ந்து பார்ப்பான். எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அந்தப் பெண் போலவே தெரிந்தாள்!

அந்த வழியாகப் போய்வந்த பெண்களையும் பார்த்தான். சில பெண்களைப் பின்தொடரவும் வேண்டியிருந்தது. அவர்கள் பார்த்து முறைத்தபின்பு இளித்துவிட்டுத் திரும்புவான்.

11 மணி வரை ஊசலாடிவிட்டான். அந்தப் பெண்ணைப் பார்க்கவே முடியவில்லை. இன்று அவள் வரவில்லையா? வேலைக்கு வருகிற பெண் என்றால் வரவேண்டுமே!

**மா**லையிலும் அன்பு வந்தான். இப்பொழுது எதிர்ப்புறப் பேருந்து நிறுத்தத்தில் நின்றான்.

வேலை முடிந்து கூட்டம் கூட்டமாகப் பெண்கள் வந்தார்கள். அவர்களில்தான் எத்தனை அழகு! எத்தனை நடை! எத்தனை உடை! ஒரு பூச்செண்டை உதிர்த்துவிட்டது போலிருந்தது.

அந்தப் பெண்களை ஏறிட்டுப் பார்க்க அன்புக்குக் கூச்சமாக இருந்தது. அச்சமும் உண்டு. ஆனாலும், பார்க்காமலும் இருக்க முடியவில்லை. ஒவ்வொரு பெண்ணுமே அந்தப் பெண் போலத் தோன்றினாள். அவள் இல்லை போலவும் இருந்தாள். பாம்பும் அல்ல, பழுதும் அல்ல! அன்பு திண்டாடிப்போனான்.

இரண்டு பெண்கள் பேசிக்கொண்டது அவன் காதில் விழுந்தது.

"ஆர்த்தி வரவில்லையா?"

"இல்லை. அவளுக்கு இன்று விடுமுறை."

"என்ன விடுமுறை?"

"மாவீரர் பிறந்த நாளாம்."

"ஆர்த்தி அதிர்ஷ்டக்காரிடீ!"

"காந்தி, மாவீரர், ஏசு, புத்தர், நபிகள்நாயகம் போன்று 365 மகான்கள் பிறக்க வேண்டும்!" கையெடுத்துக் கும்பிட்டாள்.

"ஏண்டீ?"

"ஆண்டு 365 நாளும் விடுமுறையாக இருக்கும் அல்லவா?"

"சில ஆண்டுகளில் 366 நாள் உண்டே?"

"நாலு ஆண்டுக்கு ஒருமுறைதானே? அன்றைக்கு வேலைக்குப் போய்விடலாம். சம்பளம் வாங்குகிறோம் அல்லவா!"

"போடி பைத்தியக்காரி!'எங்களுக்கு சம்பள உயர்வு வேண்டும்' என்று அன்றைக்கு வேலை நிறுத்தம் செய்துவிடலாம்!"

இரு பெண்களும் சிரித்துக்கொண்டார்கள்.

அன்புக்கும் சிரிப்பு வந்தது. அந்தப் பெண்ணுக்கும் இன்று விடுமுறையாக இருக்குமோ என்று அவன் சிந்தனை ஓடியது!

அதேநேரம் மலர் பாரிமுனைக்குப் போய்க்கொண்டிருந்தாள்.

"புதுக் குடை வாங்கிக்கொள்" என்று காலையில் அம்மா பணம் கொடுத்து அனுப்பியிருந்தாள்!

# 4

அன்பு சோர்வுடன் வீட்டுக்குத் திரும்பினான்.

அவன் கையில் குடையைப் பார்த்ததுமே அந்தப் பெண்ணை அவன் சந்திக்கவில்லை என்பதை அப்பா புரிந்துகொண்டார். எனவே, அவனிடம் எதுவும் கேட்கவில்லை.

அம்மா மட்டும் "அந்தப் பெண்ணைப் பார்க்க முடியவில்லையா?" என்று கேட்டாள். "பரவாயில்லை. நாளைப் பார்த்துக் கொடுத்துவிடு."

இரவு சாப்பாட்டுக்குப்பின் படுக்கைக்குப் போன அன்பு, கண்களை மூடிக்கொண்டு அந்தப் பெண்ணை நினைவுக்குக் கொண்டுவர முயற்சி செய்தான்.

மலரும் நினைவுகள்...

பேருந்து வந்து நிற்கிறது...

அவள் இறங்கி கையிலிருக்கும் குடையை விரிக்கிறாள்.

அவள் முகத்தைக் குடை மறைத்துக்கொள்ளுகிறது.

அவள் ரோஜா போன்ற மெல்லிய சிவப்பு நிறத்தில் வெள்ளைப் பூப்போட்ட சேலை கட்டியிருக்கிறாள்.

ஒரு கையால் சேலையைக் கொஞ்சம் தூக்கிப் பிடித்துக்கொண்டு நடக்கிறாள்.

இவன் ஓடிப்போய் குடைக்குள் நுழைகிறான்.

ஓரிரு பேச்சு. அதன்பின் குடை இவன் கையில். அவள் மழையில் நனைந்துகொண்டே ஒதுங்க ஓடுகிறாள். இவன் வேகமாக நடக்கிறான்...

ஊகூம்! அவள் முகமே நினைவுக்கு வரவில்லையே. பார்த்திருந்தால் தானே? அவள் குடை பிடித்திருந்தாளே! இவன் குடைக்குள் போன சில மணித்துளிகளில் கூட அவளது முகத்தைப் பார்க்கவில்லையே!

ரசம் போன கண்ணாடியில் பார்ப்பது போல மங்கலாக ஒரு முகம் தெரிந்தது!

அதை முழுமையாகப் பார்க்க முயற்சித்து. அப்படியே தூங்கிப் போனான்.

மறுநாள் காலையில் தேநீர் குடிக்கும்பொழுதே "இன்றைக்காவது அந்தப் பெண்ணைப் பார்த்துக் குடையைக் கொடுத்துவிடு" என்று அம்மா சொன்னாள்.

அது சுந்தரம் காதில் விழ, குடித்துக்கொண்டிருந்த தேநீருடன், சண்டைக்கு வருகிறவர் போல வந்தார். "அவனுக்கு வேறு வேலை



இல்லை என்று நினைத்தாயா? முதலில் அவன் வேலை தேடிப் போகவேண்டும்."

"அதுக்காக? குடையைத் திருப்பிக் கொடுக்க வேண்டாமா? உதவி செய்த அந்தப் பெண் என்ன நினைப்பாள்?"

"அவள் என்ன நினைத்தால் நமக்கு என்ன? அவள் யாரோ, நாம் யாரோ! அவளுக்குக் கொழுப்பு! இல்லாவிட்டால், அவள் குடையை இவன் கையில் கொடுப்பாளா? உம்... யாரும் ஆதாயம் இல்லாமல் ஆற்றைக் கட்டி இறைக்கமாட்டார்கள்."

"எனக்குக் குடை கொடுத்ததில் அவளுக்கு என்னப்பா ஆதாயம்?"

"நீ சின்னப்பையன். உனக்கு உலகம் தெரியாது. வரதட்சனை இல்லாமல் எவனாவது மாட்டமாட்டானா என்று எத்தனை பெண்கள் அலைகிறார்கள், தெரியுமா?"

"இதோ பாருங்கள், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சாதீர்கள். பெண் பாவம் பொல்லாதது!"

"ஊரில் நடப்பதைத்தான் நான் சொல்லுகிறேன். இவனே ஒரு தண்டச்சோறு. நாளை இவன் ஒருத்தியை இழுத்துக்கொண்டு வந்து நிற்கக்கூடாது அல்லவா?"

அன்பு வெறுப்பாக அப்பாவைப் பார்த்தான்.

"உங்கள் வாயில் நல்ல வார்த்தையே வராதா?" காமாட்சி கசப்பாகச் சொன்னாள்.

"நல்லதைச் சொன்னால், உள்ளதைச் சொன்னால் எல்லாருக்கும் கசக்கத்தான் செய்யும்" என்ற சுந்தரம், "அன்றைக்குப் பேட்டிக்கு அழைத்திருந்தார்களே; திரும்பவும் போய்ப் பார்த்தாயா?" என்று மகனைப் பார்த்தார்.

"அவர்களே அழைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்" என்றான், அன்பு.

"அதுவரை நீ காத்திருக்கவேண்டியதில்லை. நீயே தேடிப் போகலாம். யாரோ ஒரு பெண்ணைத் தேடுவதைவிட உனக்கு ஒரு வேலை தேடுவது நல்லது."

சுந்தரம் முடிவாகச் சொல்லிவிட்டு, அவரது சோபாவுக்குச் சென்றுவிட்டார்.

அன்பு பேருந்து நிறுத்தத்தில் நின்றான்.

அங்கு பலருக்கும் இவன் அறிமுகம் ஆனவன் ஆனான். ஆனால், யாரும் என்ன, ஏது என்று இவனிடம் விசாரிக்கவில்லை. இவனும் சொல்லவில்லை.

சேலையைப் பார்த்தால் அவன் முகம் மலரும். உற்றுப் பார்ப்பான். அதற்காக சுடிதார்களை விட்டுவிடமாட்டான். பின்தொடர்ந்து போய் நோக்குவான். ஒரு 'சுடிதார்' செருப்பைக் கழற்றிக் காட்டிவிட்டாள்.

'துப்பட்டா' போட்டுக்கொண்டு வரும் பெண்களிடம் மட்டும் கொஞ்சம் முன்எச்சரிக்கையாக இருந்தான். அவர்களை முறைத்துப் பார்த்தாலே 'உன் முகத்தில் காறித் துப்பட்டா?' என்று கேட்பது போலிருக்கும்!

நாலைந்து நாளில் அன்புக்கு ஒரு யோசனை தோன்றியது. பைத்தியக்காரத்தனமான எண்ணந்தான்! மனவிரக்தியில் ஏற்பட்டு இருக்கலாம். அவன்கூடக் குடையைக் கொடுக்க இவ்வளவு தீவிரம் காட்டியிருக்க வேண்டியது இல்லை. அம்மாகூட 'சரி, விடு' என்று சொல்லிவிட்டார்கள். இவனுக்குத்தான் கேட்கவில்லை. அவசரத்துக்கு உதவிய பெண் ஆயிற்றே!

பேருந்து நிறுத்தத்துக்கு மூன்று, நாலு மீட்டர் தள்ளி நின்றான். குடையை விரித்துக் கையில் பிடித்துக்கொண்டான்! மகளிர் குடை— வண்ணக்குடை! பார்த்தவர்கள் கல்லால் அடிக்காத குறைதான்! அவனோ 'இதைப் பார்த்தாவது அந்தப் பெண் வருவாள்' என்று உறுதியாக இருந்தான்.

சூடான வடையை ஒரு கடிகடித்துவிட்டு, மலர் சிரித்தாள்.

"என்னம்மா சிரிக்கிறாய்?" அருகில் நின்ற அலமு கேட்டாள்.

"அவரை நினைத்தால், பாவமாகவும் இருக்கிறது; சிரிப்பும் வருகிறது."

"யாரை நினைத்தால்?" அலமுக்குப் பிடிபடவில்லை.

"அவர்தான்... என்னிடம் குடை வாங்கிக்கொண்டு போனவர்."

"அவரை இன்னுமா நினைத்துக்கொண்டிருக்கிறாய்!" அலமு வாயைப் பிளந்தாள்.

"அவர்தான் தினம் பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருக்கிறாரே!"

"எதுக்கு?"

"என்னிடம் குடையைக் கொடுக்கத்தான்."

"நீ தினமும் அவரைப் பார்க்கிறாயா?"

"இல்லம்மா. நான் கண்டுகொள்வதே இல்லை. பாராதது போலப் போய்விடுவேன்."

"பைத்தியம் பிடித்த பிள்ளையாக இருப்பார் போலிருக்கிறதே."

"உண்மைதானம்மா. இன்றைக்கு என்ன செய்தார், தெரியுமா?"

"என்ன செய்தார்?"

"குடையை விரித்துக் கையில் பிடித்துக்கொண்டு நின்றார். வருவோர் போவோர் எல்லாம் பைத்தியம் போலப் பார்த்துவிட்டுப் போனார்கள்."

"யாரும் கல்லால் அடிக்கவில்லையே?"

"பாவம், அம்மா."

"நீ ஏன் பாவப்படுகிறாய்? அவன்தான் மஜ்னு ஆகிவிட்டான் என்றால், நீ லைலா ஆகிவிடாதே!"

"பரிதாபப்படக்கூடாதா, அம்மா?"

"முள்ளில் போய் விழுந்தால் சேலைதான் கிழியும்!"

சொல்லிக்கொண்டே அலமு போய்விட்டாள்!

அம்மாவை நினைத்து மலர் சிரித்துக்கொண்டாள்!

பேருந்து நிறுத்தத்தில் மாலைக் கூட்டம்.

ஒரு பேருந்து நிற்க, ஒரு பெண் இறங்கினாள். அவள் மெல்லிய சிவப்பு, வெள்ளைப்பூ போட்ட சேலை கட்டியிருந்தாள்.

அன்புவின் கண் மலர்ந்தது!

அவள் நடந்தாள்.

இவன் ஓடினான்.

சட்டென்று அவள் கையைப் பிடித்தான். "உங்களுக்காக எத்தனை நாளாக் காத்திருக்கிறேன்! இந்தாங்க..."

கையைப் பிடித்ததுமே அந்தப் பெண் கூச்சல் போட...

"படபட" என்று அன்புக்குத் தர்ம அடி விழுந்தது!

"நிறுத்துங்க! நிறுத்துங்க!"

கூட்டத்துக்குள் மலர் புகுந்தாள்!

## 5

"ஏன் எல்லாரும் சேர்ந்து அவரை அடிக்கிறீர்கள்?"

மலர் கூட்டத்துள் பாய்ந்து விலக்கியதும், அடி விழுவது நின்றது. அதற்குமுன் மலர் மீதும் சில கைகள் விழுந்தன.

கூட்டம் விலகியதும், அன்பு தலை குனிந்து நின்றான்.

"இந்தப் பெண்ணு கையைப் பிடித்து இவன் இழுத்துவிட்டான்" கூட்டத்தில் ஒருவன் கூறினான்.

"இல்லை... இந்தக் குடையை அவள் கையில் கொடுக்க முயற்சி செய்தேன்" தலையை நிமிர்த்தாமல், குடையை மட்டும் நிமிர்த்தி அன்பு சொன்னான்.

"அந்தக் குடை அந்தப் பெண்ணுடையது அல்ல. என்னுடையது" மலர் தெளிவாகக் கூறினாள்.

அப்பொழுதுதான் அன்பு தலையை நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

இளம் சிவப்பு நிறச் சேலை– வெள்ளைப் பூ போட்டது.

இரு பெண்களையும் மாறி மாறிப் பார்த்தான். இருவரும் ஒரே நிறச் சேலை கட்டியிருந்தார்கள்.

"என்ன சொன்னீர்கள்?" மலரைப் பார்த்து அன்பு கேட்டான்.

"இது என் குடை என்கிறேன்" அவள் அழுத்தமாகக் கூறினாள். "நீங்கள் பேட்டிக்குப் போன அன்று மழை பெய்ய, உங்களிடம் குடை கொடுத்தது நான்தான்."

அவர்கள் பேசிக்கொள்ளத் தொடங்க, கூட்டம் கலைந்தது. அந்தப் பெண்ணும் நகர்ந்தாள்.

"பாவிகள், எப்படி அடித்திருக்கிறார்கள்! தர்ம அடி என்றால் அவனவன் கையை நீட்டிவிடுகிறான்" அவன் முடியை ஒதுக்கி, சட்டையை சரிசெய்து, கடைவாயில் வடிந்த குருதியைத் துடைத்தாள், மலர்.

"என்னை மன்னித்துவிடுங்கள்" அவன் துயரத்துடன் கூறினான்.

"எதுக்காக?" அவன் கேட்டான்.

"இத்தனைக்கும் காரணம் நான்தான்" அவன் தலை குனிந்தான்.

"நீங்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லை."

"இதே இடத்தில் நித்தம் நித்தம் பித்தனைப் போல நீங்கள் நிற்பதை நான் பார்த்துக்கொண்டே போனேன். அதன் விளைவுதானே, இது?"

ஏராளமான கண்கள் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தன. "நாம்... ஒரு காப்பி சாப்பிடலாமே" அன்பு அழைத்தான்.

"இல்லை... நான் வீட்டுக்குப் போகவேண்டும்" மலர் நழுவப் பார்த்தாள்.

"இன்றைக்கு உங்களுக்கு ஒரு நன்றிகூடச் சொல்லாமல் விடமாட்டேன். என்னை நன்றி கொன்றவன் ஆக்கிவிடாதீர்கள். தயவுசெய்து வாருங்கள்."

"நான் நேரத்தோடு வீட்டுக்குப் போகவேண்டும்."

"ஒரே ஒரு காப்பி மட்டுந்தான். மறுக்காமல் வாருங்கள். தயவுசெய்து..."

தங்கள் மீது ஏராளமான "ஈக்கள்" மொய்ப்பதை மலரும் பார்த்தாள். அந்த இடத்தைவிட்டுப் போனால் போதும் போலிருந்தது. நடந்தான். நடந்தாள்.

நாலு எட்டில் ஓட்டலுக்குள் இருந்தார்கள்.

எதிரும் புதிருமாக அமர்ந்தார்கள்.

அன்பு சொன்ன சொல் தவறவில்லை. காப்பி மட்டும் கொண்டுவரச் சொன்னான். சொல்லிவிட்டுக் கேட்டான்– "இனிப்பு ஏதாவது சாப்பிடலாமே?"

"வேண்டாம்" என்றாள், அவள். "காப்பி போதும்."

"உம்... நான் குடையுடன் நின்றதை நீங்கள் பார்த்தீர்களா?"

"குடையை விரித்துக் கையில் பிடித்துக்கொண்டு நிற்பதைக் கூடப் பார்த்தேன்!" அவள் மென்மையாகச் சிரித்தாள். "ஒற்றைக்காலில் தவம் செய்யாததுதான் குறை."

"உங்களுக்கு நன்றி சொல்ல விரும்பினேன். எல்லாவற்றையும்விட உங்கள் குடையை உங்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று நினைத்தேன். ஆபத்துக்குக் கொடுத்து உதவினீர்கள். நான் திரும்பிக் கொடுத்துவிட வேண்டும் அல்லவா?"

"கடன் வாங்கியதையே திருப்பிக் கொடுப்பது இல்லை."

"நீங்கள் ஏன் என்னைப் பார்த்தும் வந்து குடையை வாங்கிக்கொள்ளவில்லை?"

காப்பி வந்தது. பதில் சொல்லாமல் அவள் பருகினாள். வாயில் ஊற்றிக்கொண்டாள். "மிகவும் நன்றி. நான் வரட்டுமா? அம்மா காத்துக்கொண்டிருப்பார்கள்" எழுந்துவிட்டாள்.

"நான் கேட்டதற்கு நீங்கள் பதில் சொல்லவில்லையே?"

முல்லைமொட்டு மலர்ந்தது போல அவள் அழகாகப் புன்னகைத்தாள். "நான் வருகிறேன்" நடக்கத் தொடங்கினாள்.

பரிமாறுகிறவர் பட்டியல் கொண்டுவந்தார். அவள் எடுத்துக் கொண்டாள்.

"நான்தான் பணம் கொடுப்பேன்" பட்டியலைப் பறிக்க அவளது கையைப் பிடித்தான்.

"நான் கொடுக்கிறேனே."

"நான்தானே அழைத்து வந்தேன். நான் கொடுப்பதுதான் முறை."

"மிகவும் நன்றி" என்று அவனிடம் பட்டியலைக் கொடுத்துவிட்டு அவள் பறந்தாள்.

பரிமாறுகிறவரிடம் பத்து ரூபாய்த்தாள் ஒன்றை நீட்டிவிட்டு, அன்பும் விரைந்தான்.

"என்னங்க, கொஞ்சம் நில்லுங்களேன்."

குரல் கேட்டு அவள் நின்றாள்.

"உங்கள் குடை..." அவன் நீட்டினான்.

"நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். நான் புதுக்குடை வாங்கிவிட்டேன்" தோள்பைக்குள் வைத்திருந்த குடையை எடுத்துக் காட்டிக்கொண்டே அவள் நடந்தாள்.

"இது உங்கள் குடைங்க. மகளிர் குடை. எனக்குப் பயன்படாது" அவன் பின்னேயே வந்தான்– குடையை நீட்டிக்கொண்டு.

"ஆண்கள் முடிவளர்த்துக் காது குத்திக்கொள்ளுகிறார்கள்! பெண்களின் குடையைப் பிடித்துக்கொண்டால் என்னவாம்" அவள் வேகத்தைக் கூட்டினாள்.

அன்பு வியப்புடன் அவளைப் பார்த்தபடி நின்றான்.



**மொ**த்தத்தில் முப்பது நிமிடந்தான் ஆகியிருக்கும். அதற்குள் மகளைக் காணாமல் அலமுக்கு வியர்க்கத் தொடங்கிவிட்டது. வாசலில் வந்து நின்று, வீதியைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

தெருக்கோடியில் மலரைப் பார்த்தபின்புதான் அவளுக்கு நல்ல மூச்சு வந்தது.

"ஏனம்மா இவ்வளவு நேரம்?" மகள் வாசலில் கால் வைக்குமுன் கேட்டாள்.

"ஓடி ஓடி வந்தாலும் இவ்வளவு நேரம் ஆகிவிடுகிறது, அம்மா" தாயைத் தாண்டிக்கொண்டு மலர் வீட்டுக்குள் போனாள்.

உடை மாற்றிக்கொண்டு காப்பி சாப்பிட உட்கார்ந்தாள். கலவையைக் கொறித்துக்கொண்டே அம்மாவைப் பார்த்தாள்.

"என்னம்மா பார்க்கிறாய்?" அலமு கேட்டாள்.

"தர்மமிகு சென்னை என்று அடிக்கடி சொல்லுவீர்களே, அம்மா; சென்னையில் அப்படி என்ன தர்மம் நடக்கிறது?"

"அந்த வள்ளலார் பாடிய பாட்டு. அவர் காலத்தில் தர்மம் மிகுந்து இருந்திருக்கும். இப்பொழுது அதர்மம் அல்லவா பெருகிவிட்டது?"

"இப்பொழுது சிங்காரச் சென்னை அல்லவா? ஆனாலும், ஒரு தர்மம் மட்டும் பெருகி இருக்கிறது, அம்மா."

"லஞ்சம், ஊழல் எல்லாமே தர்மம் ஆகிவிட்டது! உன் அப்பா சொல்லுவார்கள்– தர்மம் என்றால், அறமாம். அறம் என்றால், வரையறுக்கப்பட்டதாம். இந்தக் காலத்தில் லஞ்சம் கொடுப்பது, ஊழல் பண்ணுவது, ஏமாற்றுவது, பொய் சொல்லுவது எல்லாமே வரையறுக்கப்பட்டதாக ஆகிவிட்டது அல்லவா? உம்... 'சென்னை–*2000*' எப்படி இருக்குமோ? ஊர் அழகா இருந்தால் போதுமா? மனிதர்கள் நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டாமா? தர்மம் என்ன பாடுபடுகிறது என்பதற்கு நம்ம அரசியல் கூட்டணிகள் போதுமே!"

"அதோடு தர்மஅடியையும் சேர்த்துக்கொள்ளுங்கள்! எச்சில் கையால் காக்கா ஓட்டாதவன் கூட தர்மஅடி என்றால் முதல் ஆளாகக் கையை நீட்டுகிறான்."

"யாரும் அடி வாங்குவதைப் பார்த்தாயா?"

"உம்... அது ஒரு கதை..."

"உதை... வதையெல்லாம் கதையாகப் போய்விட்டது! சொல்லேன் அதை."

"வேண்டாம்மா. மனம் நிரம்பத் துயரப்படுகிறது. கேட்டால் நீங்களும் வருத்தப்படுவீர்கள்."

"அப்படி யார் அடி வாங்கியது?"

"ஜேப்படி செய்கிறான்... பெண்களைக் கேலி பண்ணுகிறான். அவ

# 6

"இன்னைக்கும் அந்தப் பெண்ணைப் பார்க்கவில்லையா? அட, ஏண்டா இப்படிப் பித்துப் பிடித்து அலைகிறாய்! குடையைக் கொண்டுபோய்க் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டு ஆகிற வேலையைப் பாருடா!"

அன்பு கையில் குடையுடன் வந்ததைப் பார்த்ததும் ஊசிவெடி ஆகிவிட்டார், சுந்தரம்!

சிலநாளாகவே அவர் கண்டித்துக்கொண்டுதான் இருக்கிறார். மகன் இப்படிக் குடையுடன் அலைவது அவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. "வேலையும் தேடிக்கொண்டுதான் இருக்கிறேன், அப்பா" என்று அன்பு சமாளித்தான்.

இன்று மிகுந்த மகிழ்ச்சியுடன் "அவளைப் பார்த்துவிட்டேன், அப்பா" என்று சொன்னான்.

"அவளைப் பார்க்கத்தான் இத்தனை நாளாக அலைந்தாயா?" சுந்தரம் படார் என்று வெடித்தார். "அவளைப் பார்த்தால் அவளிடம் ஏன் குடையைக் கொடுக்கவில்லை?"

அப்பாவின் குரல் உயர்ந்ததும் அன்பு குரல் தாழ்ந்தது. "அவள் குடை வேண்டாம் என்று சொல்லிவிட்டாள்."

"ஏனாம்?" சுந்தரம் எகத்தாளமாகக் கேட்டார்.

"அவள் புதுக் குடை வாங்கிவிட்டாளாம்."

"அதுதான் அன்றைக்கே சொன்னேன், குடையைக் கொண்டுபோய் அடுப்பிலே போடு என்று! அவள் 'வேண்டாம்' என்று சொன்னால் அங்கேயே தூக்கி எறிந்துவிட்டு வரவேண்டியதுதானே..."

"அம்மாவுக்கு ஆகுமே என்று..."

"அம்மாவுக்கு வேறு குடை கிடையாது அல்லவா! அட ஏன்டா... சரி, எக்கேடும் கெட்டுப்போங்கள். இந்த வீட்டில் நான் சொல்லுவதை யார் கேட்கிறார்? இனியாவது உன் வேலையைப் பார். இந்தா, மீண்டும் பேட்டிக்கு வரச்சொல்லி கடிதம் வந்திருக்கிறது" சோபாவில் கிடந்த உடைத்த உறை ஒன்றை எடுத்து நீட்டினார்.

அதை வாங்கிக்கொண்டு அன்பு உள்ளே நடந்தான்.

காமாட்சி ஓரமாக நின்று எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தாள். அவள் தலையிடவில்லை. அவள் குறுக்கிட்டால், சுந்தரம் இன்னும் எகிறிக் குதிப்பார்.

அன்பு உள்ளே வந்ததும், "அந்தப் பெண்ணைப் பார்த்தாயா?" என்று



காமாட்சி மெல்லக் கேட்டாள்.

"ஆமம்மா. ஆனால், குடையை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டாள்."

"எல்லாம் நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்."

"நான் பஸ் ஸ்டாண்டில் நிற்பதை நித்தம் அவளும் பார்த்திருக்கிறாள், அம்மா."

"பார்த்தாளா? பிறகு ஏன் உன்னிடம் வந்து குடையை வாங்கிக் கொள்ளவில்லை?"

"அதுதான் தெரியவில்லை, அம்மா."

"குடையைப் பற்றி இன்னும் என்ன பேச்சு?" கூடத்தில் அமர்ந்தபடியே சுந்தரம் இரைந்தார். அவருக்குப் பாம்புக் காது!"அதைத் தூக்கி அடுப்பிலே வைத்துவிட்டு அடுத்து ஆகவேண்டியதைப் பார்க்கச் சொல். இந்தப் பேட்டியையாவது ஒழுங்காச் செய்யச் சொல்."

அம்மாவும் பிள்ளையும் பேச்சை நிறுத்திக்கொண்டார்கள்.

சிந்தனை வண்டு மூளையைக் குடைந்து தூக்கத்தைக் கெடுத்தது.

இவன் நாள்தோறும் பேருந்து நிறுத்தத்தில் பித்தனைப் போல நின்று அவளைத் தேடிக்கொண்டிருந்தான்; அவளும் இவனைப் பார்த்திருக்கிறாள். பிறகு ஏன் இவனிடம் வந்து குடையை வாங்கிக்கொள்ளவில்லை?

விடை கிடைக்காத வினா, அன்பை வேதனைப்படுத்தியது?

ஏன்... ஏன்... ஏன்... கேள்வி மலையில் மோதும் அலை போல அவன் மனதில் மோதிக்கொண்டே இருந்தது.

குடை வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டாளா?

இவனை பைத்தியமாக வேடிக்கை பார்த்தாளா?

இவன் தொடர்பே வேண்டாம் என்று எண்ணினாளா?

இவனைப் பிடிக்கவில்லையா?

ஏன் பிடிக்கவில்லை? இவன் அழகாகத்தானே இருக்கிறான்!

அவள்கூட...

அழகுதான்!

பொன்னிற மேனியே அவளுக்கு ஒரு தனி அழகைத் தருகிறது!

அன்று மலர்ந்த ரோஜா போன்ற பொலிவான தோற்றம். பெரிய கண்கள். சிரித்தால் குழி விழும் சிங்காரக் கன்னம். ஒருமுறை பார்த்தாலே உள்ளத்தில் பதிந்துவிடுவாள். அதுதான் இவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாளா?

அடடா! அவள் பெயரைக் கேட்க மறந்துவிட்டானே!

அவள்தான் 'வீட்டுக்குப் போகவேண்டும்... வீட்டுக்குப் போக வேண்டும்' என்று பறந்துகொண்டிருந்தாளே! என்ன கேட்பது– என்ன பேசுவது?

அவள் எங்கே வேலை பார்க்கிறாள் என்றுகூடக் கேட்கவில்லை!

அவள் பூத்துக்குலுங்கும் புதுமலர் மட்டுமல்ல. மது மலருங்கூட! மணமோ 'கமகம'!

"குடையை வைத்துக்கொள்ளுங்கள்" என்று இந்தக் காலத்தில் யார் கொடுப்பார்? அடிபட்ட இவனுக்கு எவ்வளவு உபசாரம் செய்தாள்? நல்ல உள்ளம்– முள்ளில்லாத ரோஜா!

மீண்டும் அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவனிடம் கிளர்ந்து எழுந்தது!

ஆனால், அன்பு வீட்டைவிட்டு வெளியே செல்லவில்லை. இரண்டு நாளில் அவன் பேட்டிக்குப் போகவேண்டும்; எழுத்துத் தேர்வும் உண்டு. அதற்குத் தயார் செய்துகொண்டிருந்தான்.

அடிக்கடி அவள் நினைவு அவன் மனதில் எழுந்தது. அது ஆசை. இது அவனது எதிர்கால வாழ்க்கை. எனவே, ஆசையை அடிமனதில் அழுத்திவிட்டு, எதிர்காலத்தில் அதிக அக்கறை காட்டினான்.

பேட்டிக்குக் கிளம்பினான்.

அம்மாவிடம் சொல்லிக்கொண்டான். அப்பாவிடம் சொல்லிக் கொண்டபொழுது, "இன்றைக்கு என்ன கிழமை..." என்று இழுத்துக் கொண்டே அவர் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தார்.

"நான் பத்து மணிக்குள் அங்கே இருக்கவேண்டும், அப்பா" என்று சொல்லிக்கொண்டே அன்பு நகர்ந்தான்.

பேருந்து பிடித்து அண்ணா சாலையில் வந்து இறங்கினான்.

அந்தப் பேருந்துக்குப் பின்னேயே இன்னொரு பேருந்து வந்து நின்றது.

இவன் நின்று, நப்பாசையுடன் அந்தப் பேருந்திலிருந்து இறங்கிய பயணிகளைப் பார்த்தான்.

இவன் கண்களை இவனாலேயே நம்ப முடியவில்லை. மலர் இறங்கிக்கொண்டிருந்தாள்!

மலர்ச்சிபொங்க அவனை நெருங்கிச் சென்றாள்.

அவளும் இவனைப் பார்த்துவிட்டாள். செந்தாமரை அதரம் பூத்துவிட்டாள்.

"இன்னும் ஏன் இங்கே தவம்?" அவள் சிரித்துக்கொண்டே கேட்டாள். "இரண்டு நாளாக ஆளைக் காணோமே?"

"இன்று மீண்டும் பேட்டி. அதற்கு தயார் செய்துகொண்டிருந்தேன்."

"கேட்க மறந்துவிட்டேனே; அன்று போன பேட்டி என்ன ஆயிற்று?"

"அந்த பேட்டிதான் இன்று நடக்கிறது. அன்று மழையால் நடக்கவில்லை."

"நீங்கள் வெற்றிபெற நல்வாழ்த்துக்கள்."

"நன்றி. நிச்சயம் நான் வெற்றிபெறுவேன்."



வசந்தா சந்தனவாசகம்

"எப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"அம்மன் தரிசனம் கிடைத்திருக்கிறதே!"

"சரியான கிண்டல்பேர்வழியாக இருப்பீர்கள் போலிருக்கிறதே!" அவள் கன்னம் சிவந்தாள். "உங்கள் வெற்றிச் செய்தியைக் கேட்க நான் காத்துக்கொண்டிருக்கிறேன்."

"ஆமாம், இது பெரிய உலகக்கோப்பை கிரிக்கெட்டு!"

"எனக்கு அதைவிடப் பெரியது! நீங்கள்தான் என் சச்சின்!"

"போச்சுடா!"

"வெற்றிச் செய்தி எப்பொழுது கிடைக்கும்?"

"வாக்குச்சீட்டுகளை எப்பொழுது எண்ணி முடிப்பார்கள், எப்பொழுது தேர்தல் முடிவை அறிவிப்பார்கள் என்று இப்பொழுதே எப்படிச் சொல்ல முடியும்" என்ற அன்பு, கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

"நேரமாகிவிட்டதே. வருகிறேன்" நடந்தான். "மாலையில் மீண்டும் சந்திக்கிறேன். அந்தக் கரையில் இருப்பீர்கள் அல்லவா? எனக்காகக் கொஞ்சம் காத்திருங்கள்."

பேசிக்கொண்டே நடந்தவன் எதிரில் வந்த பெண் மீது இடித்துக் கொள்ள மலர் சிரித்துவிட்டாள்!

இப்பொழுது மலர் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஆறு. அவள் வந்து முப்பது நிமிடமாகிவிட்டது.

பேருந்து நிலையத்தில் சரியான கூட்டம்.

புது வெள்ளம் போல சாரை சாரையாக ஆட்கள் வந்து கொண்டிருந்தார்கள். எல்லாம் வேலை முடித்து வருகிறார்கள்.

இருதலைக்கொள்ளியாக மலர் தவித்தாள். ஒவ்வொரு நிமிடமும் அவளைப் பயமுறுத்தியது. அம்மா காத்திருப்பார்கள். அன்பையும் பார்க்காமல் போக மனமில்லை.

வந்து வந்து நின்ற பேருந்துகள் அவளது தவிப்பை அதிகப்படுத்தின. போய்விடலாமா என்று நினைப்பாள். ஆனால், கால் நகராது!

அவன் எந்தத் திசையிலிருந்து வருவான்? அதுவும் தெரியாமல் பார்வையை வட்டமடிக்க வேண்டியிருந்தது.

அவன் வருவானா?

நிச்சயம் வருவான்– நல்ல செய்தி தருவான் என்ற நம்பிக்கை மட்டும் மலை போல அவளுக்கு இருந்தது! அந்த நம்பிக்கைதான் அவளைக் காக்கவும் வைத்தது.

அவளது கரிய பெரிய விழிகள் வண்டுகளைப் போல சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருந்தன!

அவள் பூத்துக்குலுங்கும் புதுமலர் மட்டுமல்ல. மது மலருங்கூட! மணமோ 'கமகம'!

"குடையை வைத்துக்கொள்ளுங்கள்" என்று இந்தக் காலத்தில் யார் கொடுப்பார்? அடிபட்ட இவனுக்கு எவ்வளவு உபசாரம் செய்தாள்? நல்ல உள்ளம்– முள்ளில்லாத ரோஜா!

மீண்டும் அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவனிடம் கிளர்ந்து எழுந்தது!

ஆனால், அன்பு வீட்டைவிட்டு வெளியே செல்லவில்லை. இரண்டு நாளில் அவன் பேட்டிக்குப் போகவேண்டும்; எழுத்துத் தேர்வும் உண்டு. அதற்குத் தயார் செய்துகொண்டிருந்தான்.

அடிக்கடி அவள் நினைவு அவன் மனதில் எழுந்தது. அது ஆசை. இது அவனது எதிர்கால வாழ்க்கை. எனவே, ஆசையை அடிமனதில் அமுத்திவிட்டு, எதிர்காலத்தில் அதிக அக்கறை காட்டினான்.

பேட்டிக்குக் கிளம்பினான்.

அம்மாவிடம் சொல்லிக்கொண்டான். அப்பாவிடம் சொல்லிக் கொண்டபொழுது, "இன்றைக்கு என்ன கிழமை..." என்று இழுத்துக் கொண்டே அவர் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தார்.

"நான் பத்து மணிக்குள் அங்கே இருக்கவேண்டும், அப்பா" என்று சொல்லிக்கொண்டே அன்பு நகர்ந்தான்.

பேருந்து பிடித்து அண்ணா சாலையில் வந்து இறங்கினான்.

அந்தப் பேருந்துக்குப் பின்னேயே இன்னொரு பேருந்து வந்து நின்றது.

இவன் நின்று, நப்பாசையுடன் அந்தப் பேருந்திலிருந்து இறங்கிய பயணிகளைப் பார்த்தான்.

இவன் கண்களை இவனாலேயே நம்ப முடியவில்லை. மலர் இறங்கிக்கொண்டிருந்தாள்!

மலர்ச்சிபொங்க அவளை நெருங்கிச் சென்றான்.

அவளும் இவனைப் பார்த்துவிட்டாள். செந்தாமரை அதரம் பூத்துவிட்டாள்.

"இன்னும் ஏன் இங்கே தவம்?" அவள் சிரித்துக்கொண்டே கேட்டாள். "இரண்டு நாளாக ஆளைக் காணோமே?"

"இன்று மீண்டும் பேட்டி. அதற்கு தயார் செய்துகொண்டிருந்தேன்."

"கேட்க மறந்துவிட்டேனே; அன்று போன பேட்டி என்ன ஆயிற்று?"

"அந்த பேட்டிதான் இன்று நடக்கிறது. அன்று மழையால் நடக்கவில்லை."

"நீங்கள் வெற்றிபெற நல்வாழ்த்துக்கள்."

"நன்றி. நிச்சயம் நான் வெற்றிபெறுவேன்."



வசந்தா சந்தனவாசகம்

"எப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"அம்மன் தரிசனம் கிடைத்திருக்கிறதே!"

"சரியான கிண்டல்பேர்வழியாக இருப்பீர்கள் போலிருக்கிறதே!" அவள் கன்னம் சிவந்தாள். "உங்கள் வெற்றிச் செய்தியைக் கேட்க நான் காத்துக்கொண்டிருக்கிறேன்."

"ஆமாம், இது பெரிய உலகக்கோப்பை கிரிக்கெட்டு!"

"எனக்கு அதைவிடப் பெரியது! நீங்கள்தான் என் சச்சின்!"

"போச்சுடா!"

"வெற்றிச் செய்தி எப்பொழுது கிடைக்கும்?"

"வாக்குச்சீட்டுகளை எப்பொழுது எண்ணி முடிப்பார்கள், எப்பொழுது தேர்தல் முடிவை அறிவிப்பார்கள் என்று இப்பொழுதே எப்படிச் சொல்ல முடியும்" என்ற அன்பு, கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

"நேரமாகிவிட்டதே. வருகிறேன்" நடந்தான். "மாலையில் மீண்டும் சந்திக்கிறேன். அந்தக் கரையில் இருப்பீர்கள் அல்லவா? எனக்காகக் கொஞ்சம் காத்திருங்கள்."

பேசிக்கொண்டே நடந்தவன் எதிரில் வந்த பெண் மீது இடித்துக் கொள்ள மலர் சிரித்துவிட்டாள்!

இப்பொழுது மலர் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஆறு. அவன் வந்து முப்பது நிமிடமாகிவிட்டது.

பேருந்து நிலையத்தில் சரியான கூட்டம்.

புது வெள்ளம் போல சாரை சாரையாக ஆட்கள் வந்து கொண்டிருந்தார்கள். எல்லாம் வேலை முடித்து வருகிறார்கள்.

இருதலைக்கொள்ளியாக மலர் தவித்தாள். ஒவ்வொரு நிமிட்மும் அவளைப் பயமுறுத்தியது. அம்மா காத்திருப்பார்கள். அன்பையும் பார்க்காமல் போக மனமில்லை.

வந்து வந்து நின்ற பேருந்துகள் அவளது தவிப்பை அதிகப்படுத்தின. போய்விடலாமா என்று நினைப்பாள். ஆனால், கால் நடக்காது!

அவன் எந்தத் திசையிலிருந்து வருவான்? அதுவும் தெரியாமல் பார்வையை வட்டமடிக்க வேண்டியிருந்தது.

அவன் வருவானா?

நிச்சயம் வருவான்– நல்ல செய்தி தருவான் என்ற நம்பிக்கை மட்டும் மலை போல அவளுக்கு இருந்தது! அந்த நம்பிக்கைதான் அவளைக் காக்கவும் வைத்தது.

அவளது கரிய பெரிய விழிகள் வண்டுகளைப் போல் சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருந்தன!

# 7

அவன் முகந்தான் முதலில் தெரிந்தது!

அவனும் அவளைப் பார்த்துவிட்டான்.

கையைத் தூக்கி இரண்டு விரல்களை விரித்துக் காட்டினான்!

அவளுள் பிறந்த குதூகலத்தில் ஓடிச்சென்று அவனைக் கட்டிப் பிடித்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

ஆனால், அவளே அவளை அடக்கிக்கொண்டு, அவனை நோக்கி மெல்லச் சென்றாள்.

இருவரும் சந்தித்துக்கொண்டதும், "வேலை கிடைத்துவிட்டது" என்றான், அவன் மகிழ்ச்சியுடன்.

"சொல்லவேண்டுமா? உங்கள் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே!" அவள் சிரித்தாள். "எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது, தெரியுமா? ஏனோ தெரியவில்லை, எனக்கு வேலை கிடைத்த பொழுதுகூட நான் இவ்வளவு மகிழ்ச்சி அடையவில்லை."

"சொல்லவேண்டுமா? உங்கள் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே!" என்று அவன் சொல்ல, இருவரும் சிரித்துவிட்டார்கள்.

"இனிப்பு எங்கே?" அவள் கையை நீட்டினாள்.

அவள் கை மீது அவன் தன் கையை வைத்தான்.

"என்ன, இது?" அவள் நெளிந்தாள்.

"இனிப்பு. இது இனிப்பாக இல்லையா?"

"போக்கிரியாகவும் இருப்பீர்கள் போலிருக்கிறதே!"

நாணத்துடன் அவள் கையை விடுவித்துக்கொள்ள முயற்சிக்க, அவன் இறுகப் பற்றி இழுத்தான். "போவோமா?"

"எங்கே?"

"இனிப்பு சாப்பிட!"

"ஊகூம்! நான் வீட்டுக்குப் போகவேண்டும். அம்மா தேடுவார்கள்."

"எல்லா அம்மாக்களும் அப்படித்தான். அதுதான் பொய் சொல்ல வேண்டியிருக்கிறது."

"பொய்யா..."

"அதுதான்... அலுவலகத்தில் வேலை... தோழியுடன் அரட்டை...."

"ஊகூம்! நான் அப்படியெல்லாம் அம்மாவிடம் பொய் பேசமாட்டேன்."

"ஆனால், இனிமேல் பேசவேண்டியிருக்கும்" அவன் நமட்டுச்



## கிசுகிசு பக்கம்

பொதுவாக நடிகைகளுக்கு மானேஜராக இருப்பதற்கு திறமை வேண்டும். அதேநேரம் சகிப்புத்தன்மையும், பொறுமையும் வேண்டும். இல்லாவிட்டால் குப்பை கொட்ட முடியாது. ஏன் என்றால் நடிகை இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுக்க வேண்டும். வளைய மறுத்தால் உடனே கல்தா கொடுத்துவிடுவார்கள்.

ஆனால் சில மானேஜர்கள் நடிகைகளுக்கு அல்வா கொடுத்துவிடுகிறார்கள். கால்ஷீட் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று நடிகைக்குத் தெரியாமலேயே பட்டக்கம்பெனிகளிடம் அட்வான்ஸ் வாங்கி பைக்குள் போட்டுக்கொள்கிறவர்களும் உண்டு. அதில் துள்ளாத மனதையும் துள்ளவைத்த நடிகையின் மானேஜர் இந்த ரகம்தான். முதலாவதாக இருந்த மானேஜரை அந்த நடிகை விரட்டிவிட்டு புதியதாக இன்னொருவரை மானேஜராக சேர்த்தார். இப்போது அவரையும் நடிகை விரட்டிவிட்டார். இவரிடம் அந்த நடிகை என்ன குறையைக் கண்டாரோ, அல்லது நடிகையைப் பற்றி இவர் வெளியே என்ன சொன்னாரோ தெரியவில்லை.



வளர்ந்துவரும் அந்த 'ரண்' என்ற மூன்றெழுத்து வில்லன் நடிகர் தனக்கு உதவியாக ஒரு பெண்ணை வைத்திருக்கிறார். இருவருக்கும் காதல் என்றெல்லாம் கிசுகிசுக்கப்பட்டது. ஆனால் அவர்களுடைய உறவு அதற்கும்மேலே போய்விட்டது. அதனால் அந்த நடிகர் இப்போது அந்த அம்மணியின் பிளாக்மெயில் பிடியில் சிக்கித்தவிக்கிறார். அதில் இருந்து மீள்வதற்காக இப்போது போதைக்கு அடிமையாகிவிட்டார். படப்பிடிப்புக்கு வெளியூர் போனால்கூட பெத்தடின் ஊசியை மறக்காமல் எடுத்துச் செல்கிறார். போதாக்குறைக்கு டி.வி.யில் முன்னாள் செய்தி வாசிப்பாளர் ஒருவருடனும் இவருக்கு நட்பு வேறு. அந்த அம்மா வேறு முடிந்தவரை இவரிடம் கரந்துகொண்டிருக்கிறார். நடிகர் விட்டாலும் அந்த செய்தி வாசிப்பாளர் விடுவதாகஇல்லை.

சிரிப்பு சிரித்தான்.

"ஏன்?" அவள் கண்களை மலர்த்தினாள்.

"இனி அடிக்கடி நாம் சந்திக்கவேண்டியிருக்கும் அல்லவா?"

"அதோ என் பஸ் வந்துவிட்டது" அவள் தப்பி ஓடப் பார்த்தாள்.

அவனோ அவள் கையை விடவில்லை. "இனிப்பு சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டும்" அவளை இழுத்துக்கொண்டு போனான்.

"உட்காருங்கள்."

அவள் நல்ல பிள்ளையாக அமர்ந்தாள். நாலு பேர் வேடிக்கை பார்க்கும்படி நடக்கக்கூடாது அல்லவா?

"என்ன இனிப்பு சாப்பிடலாம்..."

"வாயில் போட்டுக்கொண்டு எழுந்து ஓடும்படி சொல்லுங்கள்."

"கற்கண்டுதான் அப்படி முடியும். ஆனால், இங்கே கிடைக்காது."

"ஐஸ்கிரீம் சாப்பிட்டுவிட்டு ஓடிவிடலாமே!"

"ஏன் ஓடுவதிலேயே இருக்கிறீர்கள்?"

"என்னைக் காணாவிட்டால் அம்மா தவித்துவிடுவார்கள்."

"நானே உங்கள் வீடுவரை வந்து,'என்னுடன்தான் இவ்வளவு நேரமும் இருந்தீர்கள்' என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு வருகிறேன்."

"வேறு வினையே வேண்டாம்!"

"அம்மாக்கள் எல்லாம் ஏன் இப்படி இருக்கிறார்கள்?"

"அம்மாக்களுக்கு நாங்கள் இன்னும் அறியாப் பெண்கள்தான்."

"அம்மாக்கள் அந்தக் காலத்திலேயே இருக்கிறார்கள். ஆனால், இந்தக்காலப் பெண்கள் அம்மாக்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள்."

பரிமாறுகிறவர் வந்தார்.

"இனிப்பு என்ன இருக்கிறது?"

அவர் ஒப்பித்தார்.

"இரண்டு பாதாம் அல்வா கொண்டுவாருங்கள்."

"அப்படியே இரண்டு காப்பியும் கொண்டுவந்துவிடுங்கள்" மலர் அவசரப்படுத்தினாள்.

"இரண்டு பஜ்ஜி" என்று அன்பு சேர்த்தான்.

பரிமாறுகிறவர் நகர்ந்தார்.

"உங்கள் பெயரைக் கேட்பது தவறு இல்லை என்று நினைக்கிறேன்" அன்பு மெல்லப் பேசினான். "என் பெயர் அன்பு."

"வம்பு என்று இருந்தால் பொருத்தமாக இருக்கும்!" அவள் சிரித்தாள்.

"நீங்கள் வண்டு என்றால், நான் யார்?"

"மலர்."



"அதுதான் என் பெயர். உங்கள் வேலையைப் பற்றிச் சொல்லுங்களேன்."

"லெட்சுமி நிதி நிறுவனம் தெரியுமா?"

"அங்கேதான் வேலையா? எனக்கு ரொம்ப நெருக்கமாக வந்துவிட்டீர்கள்!"

எதிரில் அமர்ந்திருந்த அவன் எழுந்து, நாற்காலியை நகர்த்தி அவளுக்கு அருகில் அமர்ந்துகொண்டான்.

"நான் இதைச் சொல்லவில்லை. எனக்கு நாலாவது கட்டடத்தில்தான் நீங்கள் இருக்கிறீர்கள்."

"அப்படியானால் நாள்தோறும் நாம் சந்தித்துக்கொள்ளலாம்! உங்கள் நிறுவனப் பெயர்?"

"அபுபக்கர் மென் பொருள்!"

"ஆமாம், பக்கந்தான். நான்கூட அங்கே வேலை கேட்டு வந்திருக்கிறேன்."

அல்வா, பஜ்ஜி, காப்பி மூன்றும் ஒன்றாக வந்தன.

அவள் வேகவேகமாக சாப்பிட்டாள்.

"மெல்ல சாப்பிடுங்கள். ரெயில் என்ஜினில் கரி அள்ளிப் போடுவது போலிருக்கிறது!"

அவள் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். "அம்மா தெருப்பில் நின்றுகொண்டிருப்பார்கள்."

"இனிமேல் வீட்டுக்கு வர நேரமாகும் என்று இன்றைக்கே அம்மாவிடம் சொல்லிவிடுங்கள்."

அவள் தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"இனி நாம் தினசரி சந்தித்துக்கொள்ளுவோம், அல்லவா?"

"அம்மாக்கள் ஏன் அவ்வளவு விழிப்பாக இருக்கிறார்கள் என்பது இப்பொழுது தெரிகிறது அல்லவா?"

அவள் காப்பியை வாயில் ஊற்றிக்கொண்டு, "நான் வரட்டுமா?" என்று எழுந்து கிளம்பினாள்.

அவன் சிரித்துக்கொண்டான். "நாளை மாலை பார்ப்போம்" என்று கூவினான்.

"இல்லை" என்பது போலக் கையை ஆட்டிக்கொண்டே அவள் போனாள்.

அலமு வாசலில்தான் நின்றுகொண்டிருந்தாள்.

சற்று முன்வரை அவள் முகத்தில் கோபம் படர்ந்திருந்தது. இப்பொழுது கவலை. "ஏன் இன்னும் வரவில்லை?" என்று பெரிய கேள்விக்குறி.

அலமு தெருமுனையைப் பார்த்துக்கொண்டிருக்க, வீட்டுமுன் ஒரு

"ஆட்டோ" வந்து நின்றது. யார் என்று பார்த்தால்... மலர்!

அவசர அவசரமாகக் கைப்பையிலிருந்து பணம் எடுத்துக் கொடுத்துவிட்டு, "அம்மா..." என்று குரல் கொடுத்துக்கொண்டே படியேறினாள்.

"ஏன்டி இவ்வளவு நேரம்?" கேட்கும்பொழுதே அம்மாவின் கண்கள் பனித்துவிட்டன.

"என்னங்கம்மா நீங்கள்..." மலர் அம்மாவின் கண்களைத் துடைத்தாள். "வீட்டுக்குள் வாருங்கள்!" அம்மாவை அரவணைத்து அழைத்துப் போனாள்.

"விளக்கு வைத்த பின்பும் உன்னைக் காணோம் என்றதும் உன் உடம்பே பற்றி எரிந்துவிட்டது."

"அம்மா... பஸ்காரர்கள் திடீர் வேலை நிறுத்தம். ஒரு பஸ் கிடையாது. நான் காத்துக் காத்து நின்றுவிட்டு, ஆட்டோ பிடித்து ஓடிவந்தேன்" பொய் எவ்வளவு சரளமாக வருகிறது!

"என்னவோம்மா, உன்னைக் காணாவிட்டால் அம்மா துடித்துப் போகிறேன்."

"நான் என்ன சின்னப்பெண்ணா, திருவிழாக் கூட்டத்தில் காணாமல் போய்விட..."

"பெரிய பெண்ணாக இருப்பதால்தான் மடியில் நெருப்பைக் கட்டிக்கொள்ளவேண்டியிருக்கிறது."

"நான் வேலைக்குப் போகிறேன். வேலை செய்கிற இடத்தில் நேரமாகலாம். திடீர் வேலை நிறுத்தம், அது இது என்று தடை ஏற்படலாம்."

"என்ன தடை என்றாலும், விளக்கு வைக்குமுன் நீ வீட்டுக்கு வராவிட்டால் அம்மாவுக்குக் கவலையாகத்தான் இருக்கிறது."

"இனிமேல் நேரத்துக்கு வந்துவிடுகிறேன். சரிதானா?" அம்மாவுக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டுப் போனாள்.

"என்னடி... வாயில் காப்பி மணக்கிறது?" அலமு கண்டுபிடித்து விட்டாள்.

மலர் 'திடுக்'! என்றாலும், "தேவயானியும் நானும் பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்தோமா? பஸ்சே வரவில்லையா? காப்பி சாப்பிட லாம் என்று தேவயானி அழைத்தாள். எனக்கும் பசிப்பது போலிருந்தது. பக்கத்து ஓட்டலில் காப்பி சாப்பிட்டுவிட்டு, அங்கேயே ஆட்டோ பிடித்து, தேவயானியை அவளது வீட்டில் விட்டுவிட்டு வந்தேன்" என்று சமாளித்தாள்.

முதிர்கன்னிதான் தேவயானி. இவள் வீட்டுக்கு இரண்டொருமுறை வந்திருக்கிறாள்.

"சரி, முகத்தைக் கழுவிக்கொண்டு வா. உனக்குப் பிடித்தமான பாதாம் அல்வா செய்து வைத்திருக்கிறேன்!"

'பாதாம் அல்வா' என்றதும் மலர் அதிர்ச்சியுடன் அம்மாவைப் பார்த்தாள்.

அலமு அடுப்படியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள்!

'தலை தப்பியது' என்ற மகிழ்ச்சியுடன் மலர் தனது அறையை நோக்கிச் சென்றாள்.

## 8

வழக்கத்தைவிட சீக்கிரமாகப் படுக்கைக்குப் போய்விட்டாள், மலர்.

தொ.கா.கூடப் பார்க்கவில்லை. சாப்பிடவும் இல்லை. "இப்போது தானேம்மா சிற்றுண்டி சாப்பிட்டேன்" என்று சொல்லிவிட்டுப் படுக்கைக்குப் போய்விட்டாள்.

அப்படி ஒன்றும் தூக்கம் கண்ணைச் சுழற்றவில்லை. குளத்தில் ஒரு கல்லை வீசியதுபோல அவள் உளத்தில் அலை பாய்ந்தது. ஒருவிதக் குழப்பம்.

படுத்தால், கண்களை மூடமுடியவில்லை. மூடினால் எண்ணக் குதிரை எகிறிக்குதித்து ஓடியது. எனவே, கண்களைத் திறந்தபடி கிடந்தாள். அவளது பார்வை மேல்தளத்தில் பதிந்தது. மனம் அசை போட்டது.

நினைவு தெரிந்த நாளிலிருந்து அவள் அம்மாவிடம் பொய் சொன்னது கிடையாது. அப்படிப்பட்டவள் இன்று எத்தனை பொய் சொல்லிவிட்டாள்! பொய்யுந்தான் எவ்வளவு எளிதாக– சர்வ சாதாரணமாக வாயிலிருந்து வருகிறது. அன்பு சொன்னது இவ்வளவு சீக்கிரத்தில் உண்மை ஆகிவிட்டதே!

காதலில் முதல் பலி ஆவது உண்மைதான். பொய்யிலேதான் காதல் வளர்கிறது!

"நீதான் உலகப் பேரழகி!" என்று காதலன் சொல்லுகிறானே, எவ்வளவு பெரிய பொய்! அதைவிட ஒரு பெரிய பொய் உண்டா?

இருக்கிறதே! "உனக்காக என் உயிரையே கொடுப்பேன்!" உலக உருண்டை அளவு மாபெரும் பொய் அல்லவா, இது! இதைவிடப் பெரிய பொய் இருக்கவே முடியாதே!

ஏன் இல்லை?

"நீயில்லாமல் எனக்கு வாழ்வேயில்லை! எனக்குத் திருமணம் என்று ஒன்று நடந்தால் அது உன்னோடுதான்!" என்று கையில் அடித்து சத்தியம் செய்கிறார்களே... அப்பப்பா... சடையப்பா... படையப்பா...

சந்திரமண்டலத்தைத் தொடும் பொய் அல்லவா, இது!

இத்தனை பொய்களையும் கேட்டுப் பெண்கள் பூரித்துப் போகிறார்களே!

இதோ, அம்மா, இவள் சொன்ன பொய்களை நம்பிவிட்டார்களே! உண்மையைச் சொல்லியிருந்தால் அம்மா எவ்வளவு வேதனைப் பட்டிருப்பார்கள்!

காதலுக்காவது பொய் வேண்டும் போலிருக்கிறது! "களவும் கற்று மற" என்பார்களே! அந்தக் காலத்தில் காதலுக்குக் 'களவு' என்றுதானே பெயர்! இன்றும் "திருட்டுக் காதல்" என்றுதானே சொல்லுகிறார்கள்!

அப்படியானால் அவன் மீது கா...

மலரின் சிந்தனை அறுபட்டது!

மனம் திடுக்கிட்டது!

நினைத்துப் பார்க்கவே அவளுக்கு அச்சமாக இருந்தது!

அவனைக் காதலிப்பதாக இவளும் சொல்லவில்லை. இவளைக் காதலிப்பதாக அவனும் சொல்லவில்லையே! பிறகு எப்படிக் கத்தரிக்காய் காய்த்தது!

அவளுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

காலையில்கூட அவளுக்கு வியப்புதான். அலுவலகத்தில் அடிக்கடி மெய்மறந்துபோனாள். அவனிடம் எவ்வளவு தாராளமாகப் பேசினாள்! இவளோட சச்சின் தெண்டுல்கராமே,இவன்!இவளா அப்படியெல்லாம் பேசினாள்? இவளாலேயே நம்பமுடியவில்லை!

அவனுக்கு வேலை கிடைக்க வேண்டும் எ[illegible]தில் இவளுக்கு எவ்வளவு ஆர்வம்! அது ஏன்?

எவ்வளவு உரிமையோடு இவள் கையைப் பிடித்தான்!

பொய் சொல்லக்கூடாது! உண்மையாகவே இனிமையாகத்தான் இருந்தது! உள்ளங்கையில் பனிக்கட்டியை வைத்தது போன்ற ஒரு குளிர்ச்சி! இவள் சிலிர்த்துத்தான் போனாள்! புத்தம்புதிய அனுபவம்! தித்திக்கிறது, இப்பொழுது நினைத்தாலும்!

இவ்வளவும் ஏன்?

இதற்குப் பெயர்தான் கா...த...ல்... என்பதா?

எவ்வளவு இனிமையாக இருக்கிறது! நினைத்தாலே இனிக்கிறதே! வாயில் கற்கண்டை ஒதுக்கிக்கொண்டது போல இருக்கிறதே!

பயமாகவும் இருக்கிறது! அந்தப் பயத்திலேதான் பொய் பிறக்கிறதா?

எவ்வளவு அன்பான அம்மா! மகள் மீது எவ்வளவு அக்கறை! இவ்வளவு அருமையான அம்மா யாருக்குக் கிடைப்பார்கள்? இந்த அம்மாவிடம் பொய் சொல்லலாமா...

திடீர் என்று கை சில்லிட்டது! அவன் அவள் கையைப் பிடிப்பது போலிருந்தது.



"ங்கூம்..."

இன்ப முனங்கல்!

அப்படியே தூங்கிப்போனாள்.

**கா**லையிலேயே எழுந்துவிட்டான், அன்பு.

முகம் வழிப்பது, குளிப்பது என்று எல்லாவற்றிலும் ஒரு சுறுசுறுப்பு. ஆளே மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டான். இன்றைக்கு வேலைக்குப் போகிறான் அல்லவா?

ஒன்பது மணிக்கு முன்பே தயாராகிவிட்டான். அம்மாவிடம் சொல்லிக்கொண்டு கிளம்பினான்.

செய்தித்தாளும் கையுமாக அமர்ந்திருந்த தந்தையிடம் நின்றா[illegible] "அப்பா! நான் வேலைக்குப் போய் வருகிறேன்."

அவர் சுவர்க்கடிகாரத்தைப் பார்த்தபொழுது "டாண்... டாண்..." என்று மணி ஒன்பது அடித்தது. "நல்ல சகுனம், புறப்படு" என்றார்.

அன்பும் வேகமாக வெளியேறினான். காமாட்சி வாசல்வரை வந்து மகனை வழியனுப்பி வைத்தாள்.

பத்து மணிக்குள் அலுவலகத்துள் நுழைந்துவிட்டான். ஆனால், வேலையைவிட மலரின் நினைவுதான் அதிகம் இருந்தது! காலையி[illegible] அவளைப் பார்க்க முடியவில்லை. மாலை எப்பொழுது வரும் என்[illegible] மணி பார்ப்பதிலேயே மனம் சென்றது.

ஐந்து மணி ஆனதுமே எழுந்துவிட்டான்.

அவனுக்கு முன்னே மலர் பேருந்து நிலையத்தில் காத்துக்கொண்டு நின்றாள்.

"உங்களிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்றுதான் காத்துக் கொண்டு இருந்தேன். நான் கிளம்பட்டுமா?" அவன் வந்ததுமே அவள் கிளம்பினாள்.

"என்ன அவசரம்?" அன்பு கேட்டான்.

"நேற்றே அம்மா தவித்துப்போனார்கள்."

"அதனால் இன்றைக்கு என்னைத் தவிக்கவிடப் போகிறீர்களா?"

"இப்போது நீங்கள் என்னைத் தவிக்கவிடுகிறீர்கள்!" அவனது கேள்வி அவளை அந்த அளவுக்குத் தாக்கிவிட்டது.

"நாளை சந்திப்போமே..." அவள் கெஞ்சலாகக் கூறினாள்.

"நாளை அம்மா தவிக்கமாட்டார்களா?"

எவ்வளவு எளிதாக மடக்கிவிடுகிறான்! "எனக்கு உங்களைப் போலப் பேசத் தெரியாது. தயவுசெய்து இன்று ஒரு நாள் என்னை விட்டுவிடுங்களேன்."

"இன்று நான் வேலையில் சேர்ந்த நாள். உல்லாசமாகக் கடற்கரைக்குப் போகலாம் என்று நினைத்தேன். பிறகு உங்கள் விருப்பம்."

"என் மீது கோபமா?" மலர் பரிவுடன் கேட்டாள்.

"அந்த உரிமை எனக்கு இருக்கிறதா?"

"கோபந்தான் போலிருக்கிறது! சரி, நேற்றுப் போல காப்பி மட்டும் சாப்பிடுவோமா?"

"நாளை கடற்கரைக்கு வருவீர்கள் என்றால் இன்று காப்பி குடிக்க வருகிறேன்!"

"என்னை நோகடிக்காதீர்கள்" அவள் நடந்தாள்.

இருவரும் ஓட்டலுக்குள் நுழைந்தார்கள். ஓர் ஓரமாக இரு இருக்கை காலியாக இருந்தது. பேசுவதற்கு வசதியாக அதில் போய் அமர்ந்து கொண்டார்கள்.

அவன் பேசவில்லை. அவளும் அமைதியாக இருந்தாள்.

பரிமாறுகிறவர் வந்தார். வடை, காப்பி கொண்டுவரச் சொல்லிவிட்டு, அப்படியே பேச்சைத் தொடங்கினான், "நீங்கள் அம்மா பிள்ளை போலத் தெரிகிறது."

"நீங்கள் இன்னும் எனக்கு நெருக்கமாகவில்லை என்று தெரிகிறது."

"எப்படி?"

"நீங்கள் என்று சொல்லுகிறீர்களே."

"ஒரு மரியாதைதான்" அவன் சிரித்தான்.

"நமக்குள் அந்த மரியாதை வேண்டும்?"

"வேண்டாமா? விட்டுவிடுகிறேன். நீ... நீங்கள்... நீ அம்மா பிள்ளை என்பது சரிதானே?"

"எனக்கு எல்லாமே அம்மாதான்."

"அப்பா?"

"இல்லை."

"அதுதான் அம்மா உங்களைக் கண் இமைபோலக் காக்கிறார்கள் போலிருக்கிறது."

"எல்லா அம்மாக்களுமே அப்படித்தான். பெண் பிள்ளை என்றால் இன்றைக்கும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டுதானே இருக்கிறார்கள்."

"காலமாறுதல் தெரியாதவர்கள். ஆண்– பெண் என்ற வேறுபாடே இல்லாமல் இன்றைய கன்னிகள் இராப்பகலாகப் பையன்களுடன் சுற்றுகிறார்கள்."

"எங்கள் அம்மா அப்படி அனுமதிக்கமாட்டார்கள். விளக்கு வைக்குமுன் வீட்டுக்கு வந்துவிட வேண்டும்."

"விளக்கு வைக்கும்வரை இன்று யாரும் காத்திருப்பது இல்லை என்பது அம்மாக்களுக்குத் தெரியாது போலும்! அதனால்தான் 'என் மகள் விளக்கு வைக்குமுன் வீட்டுக்கு வந்துவிடுவாள்' என்று பெருமை பேசிக்கொள்கிறார்கள்!"

"அச்சச்சோ! நீங்களே பெண்களைக் கெடுத்துவிடுவீர்கள் போலிருக்கிறதே!"

"நான் முயற்சி செய்தாலும் முடியாது! எந்தப் பெண்ணும் பாய்பிரண்டு என்பதற்காகப் பாயில் இடம் கொடுப்பது இல்லை!"



"நீங்கள் ஆபத்தானவர்."

"ஊரில் நடப்பதைச் சொல்கிறேன். உனக்கு ஒன்று தெரியாது போலிருக்கிறதே!"

"நாகரிகம் என்ற பெயரில் என்னென்னவோ கூத்து நடக்கிறது என்பார்கள். நான் கண்ணால் கூடப் பார்ப்பது இல்லை."

"அதனால்தான் அம்மாவுக்கு அஞ்சுகிறாய். உனக்கு ஒன்று தெரியுமா? இந்தக் காலத்தில் பல அம்மாக்களே இதையெல்லாம் கண்டுகொள்ளுவது இல்லை. அதனால்தான் பெண்கள் தங்கள் ஆண் நண்பர்களை வீட்டுக்கே அழைத்துவந்து, அம்மாக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்கள். நீ என்னை உன் வீட்டுக்கு அழைத்துப் போகிறாயா?"

"விளையாடுகிறீர்களா? அவ்வளவுதான், அம்மா உயிரை விட்டுவிடுவார்கள்."

"இவர்தானம்மா உங்கள் மருமகன் என்று அறிமுகம் செய்து வைத்தால் கூடவா?"

"ஆசைதான்! முதலில் தோசையை சாப்பிடுங்கள்."

"காலம் எப்படி மாறிவிட்டது பார்த்தாயா? அந்தக் காலத்தில் அம்மாக்கள் ஒரு பையனைப் பார்த்து, 'இவர்தான் உன் மாப்பிள்ளை' என்று மகளிடம் அறிமுகம் செய்து வைப்பார்கள். இப்போது? மகள் ஒரு பையனைப் பார்த்து அம்மாவிடம் 'இவர்தான் உங்கள் மருமகன், நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று அறிமுகப்படுத்தி வைக்கிறாள். காலம் எவ்வளவு மாறிவிட்டது, பார்."

"இதைத்தான் எங்கள் அம்மா 'கலிகாலம் முற்றிவிட்டது' என்பார்கள். அடுத்த சில மாதங்களில் 2000–ம் ஆண்டு பிறக்கப்போகிறது. அப்படியே 21–ம் நூற்றாண்டு பிறக்கும். இன்னும் என்னென்ன அலங்கோலம் வருமோ?"

"அதற்குள் உன் அம்மாவிடம் நாம் வாழ்த்துப் பெற்றுக்கொள்ளுவது நல்லது அல்லவா?"

"அந்த ஆசையை விட்டுவிடுங்கள்!"

கையிலிருந்த காப்பித் தம்ளரை மேசை மீது வைத்துவிட்டு மலர் எழுந்தாள்!

## 9

**வ**ழக்கம் போல அலமேலு வாசலில் காத்துக்கொண்டு நின்றாள்.

மலரும் அம்மாவைப் பார்த்தாள். ஆனால், தலையைக் குனிந்துகொண்டு வீட்டுக்குள் போய்விட்டாள்.

அலமு ஒன்றும் கேட்கவில்லை. மகளின் பின்னேயே போனாள்.

இரவு உடைக்கு மாறிக்கொண்டு மலர் வந்தாள்.

சிற்றுண்டி– காப்பியை வைத்துவிட்டு அலமு நின்றுகொண்டிருந்தாள்.

வந்த மலர் அமரவும் இல்லை. சாப்பிடவும் இல்லை. சிலையாக நின்றாள்.

"சாப்பிடும்மா" அலமு கூறினாள்.

"சாப்பிட மாட்டேன்" மலர் சொன்னாள்.

"ஏன்?" மகளுக்கு என்ன ஆயிற்று என்று அலமு பார்த்தாள்.

"என்னை 'மன்னித்தேன்' என்று சொல்லுங்கள். அப்போதுதான் நான் சாப்பிடுவேன்."

"மன்னிக்கும் அளவுக்கு நீ என்ன தவறு செய்தாய்?"

"அம்மா... உங்களிடம் பொய் பேசிவிட்டேன், அம்மா. உங்களிடம் பொய் சொல்லிவிட்டேன், அம்மா" தாயின் மார்பில் தலைசாய்த்து மலர் குலுங்கக் குலுங்க அழுதாள்.

அலமு மகளை தழுவிக்கொண்டாள். "என்னம்மா சொல்லுகிறாய்?"

"நேற்று இரவு உங்களிடம் நான் சொன்னதெல்லாம் பொய், அம்மா."

"பொய் சொல்லக்கூடாதுதான். ஆனால், சிலநேரம், சில இடங்களில், சிலபேரிடம் ஒளிக்காமல் உண்மையைச் சொல்ல முடிவது இல்லை."

"நேற்று அவருடன் ஓட்டலுக்குப் போனேன், அம்மா. இன்றும் அவருடன் ஓட்டலுக்குப் போய்விட்டுத்தான் வருகிறேன். அவர் கடற்கரைக்கு அழைத்தார். நான் மறுத்துவிட்டேன்."

"அவர் என்றால் யார் அம்மா?" அலமு மகளை நிமிர்த்தினாள்.

"நான் குடை கொடுத்தேனே, அவர்தானம்மா. அவர் மிகவும் நல்லவர் அம்மா" மலர் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"மனதுக்குப் பிடித்துவிட்டால் எல்லாருமே நல்லவர்கள்தான்."

"என்னவோ அம்மா. இப்போது என் மனம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. கூண்டிலிருந்து விடுதலை பெற்றக் கிளி போல விர் என்று குதூகலத்துடன் என் மனம் பறக்கிறது."

"உனக்கு இந்த வீட்டிலிருந்து விடுதலை வேண்டியிருக்கிறது."

"நான் அப்படி நினைக்கவில்லை, அம்மா."

"உனக்குப் புதிய துணை வேண்டியிருக்கிறது."

"உங்களைப் பிரிந்து போகவேண்டும் என்று நிச்சயமாக நான் நினைக்கவில்லை, அம்மா."

"நினைத்தாலும் தவறு அல்ல. உன் வயது அப்படி. அந்தந்த வயதில்– பருவத்தில் அனுபவிக்கவேண்டிய சுகங்களை அனுபவிக்கத்தான் வேண்டும். நீ சும்மா இருந்தாலும் உன் உடம்பு சும்மா இருக்காது.



இதைத்தான் 'பருவக் கோளாறு' என்பார்கள்."

"உறுதியாகச் சொல்லுகிறேன், அம்மா. என் உடம்பு சுகத்தைத் தேடவேயில்லை. தேடவும் விடமாட்டேன். ஆனால், அவருடன் பழகுவது மனதுக்கு ஒரு புதிய மகிழ்ச்சியைக் கொடுக்கிறது, அம்மா."

"உட்கார். முதலில் சாப்பிடு."

"நீங்களும் உட்காருங்கள், அம்மா."

இருவரும் அமர்ந்தார்கள்.

மலர் பக்கோடாவைக் கொறித்தாள்.

"நேற்றே என் மனம் உறுத்தியது. ஆனாலும் 'பொறுத்துப் பார்ப்போம்' என்று இருந்துவிட்டேன்."

"உங்களிடம் பொய் சொல்லிவிட்டோமே என்று மிகவும் வருத்தப்பட்டேன், அம்மா."

"நீ என்றைக்குப் பொய் சொல்லத் தொடங்கிவிட்டாயோ, அன்றைக்கே தவறு செய்யத் தொடங்கிவிடுகிறாய்."

"இது தவறு என்கிறீர்களா, அம்மா?"

"பெண்கள் கண்ணாடிப் பாத்திரம் போன்றவர்கள். கொஞ்சம் கை தவறினாலும் சில்லு சில்லாக உடைந்து நொறுங்கிப்போய்விடும்."

"ஆனால், நான் எச்சரிக்கையாக இருந்துகொள்ளுவேன்."

"தெருவில் நாம் எவ்வளவு கவனமாகப் போனாலும் சிலநேரம் காரோ, ஸ்கூட்டரோ நம் மீது மோதிவிடுவது இல்லையா?"

"காதலும் ஒரு விபத்துதான் என்கிறீர்களா?"

"கதைகளில் நீ படித்தது இல்லையா?"

"ஏதோ ஒரு ரெயில் கவிழ்ந்துவிட்டது என்பதற்காக எல்லோரும் ரெயிலில் போகாமல் இருக்கமுடியுமா?"

"காதல் படகு கரை சேருவதே இல்லை. நட்டாற்றில் கவிழ்ந்துவிடுவதே வழக்கம். இளைஞர்களுக்கு பருவப் பெண்கள் விளையாட்டுப் பொம்மைகள். இதைக் காதல் என்று நினைத்து ஏமாந்துவிடக்கூடாது. பிறகு கண்ணீர் வடிக்கப்போவது நீதான்."

"அவர் மிகவும் நல்லவர், அம்மா."

"அப்படி நம்பி அவரிடம் உன்னை இழந்துவிடாதே. மனதை இழந்தாலாவது மீட்டுக்கொள்ள முடியும். உடலை இழந்தால், இழந்தது இழந்ததுதான்."

"அதற்கு மட்டும் நான் ஒருபோதும் இடம் கொடுக்கமாட்டேன், அம்மா."

"கரும்பைக் கேட்டுக்கொண்டா எறும்பு தின்னப்போகிறது?"

"ஊசி இடங்கொடுத்தால்தானே நூல் நுழைய முடியும்."

"மலர்களே வண்டுகளை வரவேற்கின்றன. தேன் குடிக்க முடியாது

என்று தெரிந்தால் வண்டுகளே பறந்துபோய்விடும்."

"போகட்டுமே! தூய்மையான காதலில் உடல் சுகத்துக்கே இட
கிடையாது."

"புகை அப்படியே அடங்கிப்போவதும் உண்டு. நெருப்பாக
பற்றிக்கொள்ளுவதும் உண்டு."

"உங்கள் மகள் நெருப்பாக இருப்பாள். சரிதானா, அம்மா."

"அவர் நீராக இருந்துவிடக்கூடாதே! விசிறியாகவும் இருந்துவிட
கூடாது– புகையை விசிறிவிட்டு நெருப்பு ஆக்கிவிடக்கூடாது."

"நீங்கள் பயப்படுகிறபடி எதுவுமே நடக்காது, அம்மா. சரி என்
சொல்லுங்களேன்."

அலமு அமைதியாக இருந்தாள்.

"உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் அவர் பழக்கத்தையே நா
விட்டுவிடுகிறேன், அம்மா."

"உன்னை கரைசேர்க்க உன் பெரியப்பா சிற்றப்பா இருக்கிறார்களா
மாமன் மச்சான் இருக்கிறார்களா? உன் அப்பா செத்ததுமே அவர
கைக்குக் கிடைத்ததை சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டார்கள். நாலு இட
போய், நல்ல பையனாகப் பார்க்க என்னாலும் முடியாது. நீயேதா
உனக்கு ஒரு நல்ல துணையைத் தேடிக்கொண்டால், அம்மாவுக்
பெரிய பாரம் குறையும்."

பெரிய பெண். சம்பாதிப்பவள். அவளது சம்பாத்தியத்தில்தா
குடும்பம் நடக்கிறது. இதற்குமேல் என்ன சொல்ல முடியும்?

**ம**றுநாள் மாலையும் சந்தித்தார்கள். சந்தித்ததுமே "கடற்கரைக்
போகலாமா?" என்று மலரே களிப்புடன் கேட்டாள்.

"அம்மா..." அன்பு விழித்தான்.

"பச்சைக்கொடி காட்டிவிட்டார்கள்!" மலர் சிரித்தாள்.

"அதற்குள்ளா...! அம்மாவிடம் எல்லாவற்றையும் சொ
விட்டாயா?"

"ஆமாம்" மலர் அழுத்தமாகச் சொன்னாள். "வாருங்
கடற்கரையில் போய்ப் பேசுவோம்."

ஒரு 'ஆட்டோ' பிடித்துக்கொண்டார்கள்.

ஆட்டோ குலுங்கிக் குலுங்கிச் சென்றது.

அவன் மீது மோதும்போதெல்லாம் மலர் விலகிக்கொண்டாள்.

அவனோ பிடித்து இழுத்துத் தன்னுடன் ஒட்ட வைத்தான்.

அவள் ஒட்டுநரை சுட்டிக்காட்டி பிரிந்துகொண்டாள்.

"சீக்கிரம் ஒரு பைக் வாங்குங்கள்."

"அதற்குத்தான் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன்."

கடற்கரையில் வந்து பூமணலில் நடந்தார்கள்.



கரை ஓரமாகப் போய் கடல்நீரில் காலை நனைத்தபடி நின்றார்கள்.

கடல்நீர் நனைத்துவிடாது சேலையைக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு நின்றாள், மலர்.

அப்படியிருந்தும் ஒரு அலை சீறிவந்தது. மலர் பயந்துபோய் அவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டாள். இருவருமே தெப்பமாக நனைந்து போனார்கள். ஆனால், அதைவிட அதிகமாக அவர்களிடம் மகிழ்ச்சி காணப்பட்டது.

மலர் சேலையைப் பிழிந்துகொண்டாள்.

"அப்படி உட்காரலாமா?" ஒரு படகு அடியைக் காட்டினான், அன்பு.

"அப்படி உட்காருவோம்" கூட்டத்தோடு கூட்டமாகப் போய் மலர் அமர்ந்தாள்.

அவளை ஒட்டிக்கொண்டு அவன் உட்கார்ந்தான்.

"தொடக்கூடாது" மலர் அவனைத் தள்ளிவிட்டாள்.

"ஏன்? தொட்டால் ஒட்டிக்கொள்ளுமா?"

அவன் இரண்டு கையையும் காட்டினான். கைகளில் மணல் ஒட்டியிருந்தது. கைகளைத் தட்டினான். மணல் உதிர்ந்தது.

"அந்த மணலைப் போல உதறிவிட்டுப் போய்விடுகிறார்கள் அல்லவா? அதுதான் ஒட்டக்கூடாது என்கிறேன்."

"என்னையும் அப்படி நினைத்துவிட்டாயா?" அவனிடம் சிறிது கோபம் காணப்பட்டது.

"அப்படி நினைத்தால் உங்களுடன் கடற்கரைக்கு வருவேனா? ஆண்கள் இந்தக் கடலைப் போல. கடலில் எந்த இடத்தில் எவ்வளவு ஆழம் என்று யார் சொல்ல முடியும்? காலை நனைக்கலாம் என்று கரை ஓரமாக நிற்பார்கள். ஆனால், ஒரு அலை வந்து ஆளையே இழுத்துக் கொண்டு போய்விடும்."

"நீ சொல்லுவது உண்மைதான். அதற்காகக் கடலில் இறங்காமல் இருக்க முடியுமா? கடல்நீரில் காலை நனைப்பது எவ்வளவு சுகமாக இருக்கிறது?"

"நாம் காலை நனைக்கப் போய் முழுக்க நனைந்துவிட்டோமே! முழுக்க நனைந்தபின் முக்காடு எதுக்கு என்பார்கள்."

"பெண்கள் கண்ணாடிப் பாத்திரம் போன்றவர்கள். கொஞ்சம் கை தவறினாலும் உடைந்து சிதறிப்போவார்கள்."

"உண்மைதான். ஆனால் கண்ணாடிப் பாத்திரத்தை அலமாரியில் பூட்டி வைத்து அழகு பார்ப்பதில் என்ன பயன்? எடுத்துப் பயன்படுத்த வேண்டும் அல்லவா– கவனமாக. சிலநேரம் கைதவறிவிடத்தான் செய்யும். வேண்டும் என்றா உடைப்போம்?"

"எப்படி இருந்தாலும் உடையப் போவது கண்ணாடிப் பாத்திரம்தானே?"

"அதுக்காக?"

"கண்ணாடிப் பாத்திரத்தை முறையாகப் பயன்படுத்துங்கள் என்கிறேன்."

"முறையாக என்றால்..."

"இந்தக் கண்ணாடிப் பாத்திரம் உங்களுக்கு சொந்தம் என்று ஆகிவிட்டால்..."

"ஓ! திருமணம் செய்துகொள்ள வேண்டும்."

"அதுதான் அம்மாவின் ஆசை!"

"பெண்களிடம் இதுதான் பெரிய அறுப்பு! காதல் எவ்வளவு குதூகலமாக இருக்கும்! அதைவிட்டுக் கைவிலங்கு, கால்விலங்கு போட்டுக்கொள்ளச் சொல்லுகிறாயே!"

"அவசரமில்லை. காதலர்களாகவே இருப்போம். நீங்களும் இப்போதுதான் வேலையில் சேர்ந்திருக்கிறீர்கள். குடும்பம் நடத்த வேண்டிய வசதிகளை சேகரித்துக்கொண்டு திருமணம் செய்து கொள்ளுவோம். அதற்குமுன்... என் அம்மா 'சரி' சொல்லிவிட்டார்கள் உங்கள் அம்மா– அப்பா என்னை ஏற்றுக்கொள்ளுவார்களா?"

அன்பு நெளிந்தான்.

"கடைசி நேரத்தில் உங்கள் அப்பாவைக் காரணம் காட்டி 'என்னை மறந்துவிடு' என்று நீங்கள் சொல்லக்கூடாதே!"

அப்பாவை நினைக்கவே அவனுக்குப் பயமாக இருந்தது! ஆனாலும் "அதைப்பற்றி நீ கவலைப்படாதே. நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றான்.

"அம்மா என்னை எச்சரிக்கையாக இருக்கச் சொல்லியிருக்கிறார்கள்."

"அதுவும் சரிதான். போவோமா?" அவனுக்குக் கடற்கரை கசந்தது

"உங்களைப் புண்படுத்திவிட்டேனா?"

அவனுடன் ஒட்டிக்கொண்டு, அவன் கைகளைப் பற்றிக்கொண்டு அவனுடன் விளையாடத் தொடங்கினாள்!

## 10

அன்புக்கு அன்று மலரை சந்தித்தது போலவே இல்லை!

அவள் சொன்னது எல்லாம் சரி என்றுதான்பட்டது. காதல் என்ப ஒரு விபத்துதான். அந்த விபத்தில் காயம்படுகிறவர்கள் பெண்கள்தா ஆகவே, அவள் முன்எச்சரிக்கையாக இருப்பது சரிதான்.

ஆனாலும்... ஆசையாகத் தழுவப்போகிற நேரத்தில் "போய், உறை



மாட்டிக்கொண்டு வாருங்கள்!" என்று பெண் தள்ளிவிட்டால், ஆணுக்கு எவ்வளவு எரிச்சலாக இருக்கும்!

ஆ! இப்பொழுதுதான் நினைவு வருகிறது. இப்பொழுதெல்லாம் காதலர்கள் கூட உறை பயன்படுத்துகிறார்களாமே! சே! சே! அதே எண்ணத்துடன் பழகுவது போல அல்லவா இருக்கும்!!

அன்று இரவு அவனுக்குத் தூக்கமும் கெட்டுவிட்டது! கெட்ட கனவுகள்! கனவில் அடிக்கடி ஒரு சிங்கம் உறுமிக்கொண்டு வந்தது!

அந்த சிங்கம் வேறு யாருமல்ல; அவனுடைய அப்பாதான்! அவரை நினைத்தாலே அவன் உடல் நடுங்கியது!

அப்பா– அம்மாவின் அனுமதி பெற்றுக் காதலிக்க வேண்டுமாம்! இது நடக்கிற கதையா? பைத்தியக்காரி! பெற்றோர் பார்த்துக் கூறும் பெண்ணுக்குத் தாலி கட்டுவது போலத்தானே!

"கெட்டுப்போகாதே!" என்றுதானே ஒவ்வொரு அம்மா அப்பாவும் சொல்லுகிறார்கள்? 'காதல்' என்றால் கண்கள் சிவந்து போகிறார்களே!

சுந்தரத்துக்கு சும்மாவே விழிகள் கோவைப்பழம்! அவரிடம் போய், அப்பா! இப்படி ஒரு பெண்ணை நான் காதலிக்கப் போகிறேன்! உங்கள் அனுமதி வேண்டும்" என்று கேட்க முடியுமா! நல்லவேளை, வீட்டில் அரிவாள் கிடையாது!!

அப்படியே அனுமதித்தாலும், முதலில் அந்தப் பெண்ணின் ஜாதகத்தைக் கேட்பார். ஜாதகம் பார்த்தா ஒரு பெண்ணைக் காதலிக்க முடியும்!

அவள் என்ன சாதி? இது அடுத்த கேள்வி! 'அவள் அப்பன் என்ன செய்கிறான்? எவ்வளவு சொத்து இருக்கிறது? என்ன செய்வான்? வரதட்சணை எவ்வளவு கொடுப்பான்... இப்படிக் கேள்விகள் தொடருமே!'

'அவளுக்கு இரத்த பரிசோதனை செய்ய வேண்டும்!'எய்ட்ஸ் இல்லை' என்று மருத்துவரிடம் சான்றிதழ் வாங்கிவரவேண்டும்' என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!

பெண்ணு கறுப்பா, சிவப்பா என்றே தெரியாமல் காதலிக்கிறான்!

'உன்னைக் காதலிக்கப் போகிறேன்' என்று சொல்லிவிட்டா காதலிக்கிறான்? அப்படிக் காதலித்தால் அதில் என்ன மகிழ்ச்சியிருக்கும்? திருமணம் செய்துகொண்டு மாரடிப்பது போலத்தானே இருக்கும்!

இதெல்லாம் அந்தப் பெண்ணுக்குத் தெரியவில்லையே! சே! சே! அவளை நம்பிப் பயனில்லை! கைவிட்டுவிட வேண்டியதுதான்!

அது எப்படி முடியும்? மறக்கக்கூடியவளா மலர்! ஆயிரம் எதிர்ப்பு இருந்தாலும் அதை முறியடித்துக் கைபிடிப்பது அல்லவா காதல்!

நினைப்பு எப்படி இருந்தாலும், மனதில் ஒரு அச்சமும் இருந்தது. அப்பா பயமுறுத்திக்கொண்டே இருந்தார்! இரவில் அடிக்கடி திடுக்கிட்டு விழித்துக்கொண்டான்.

அடுத்த நாளும் கடற்கரையில்தான் சந்தித்தார்கள்.

"மலர்! உன்னை நினைக்க எனக்குப் பெருமையாக இருக்கிறது. இலட்சியப் பெண்ணாக இருக்கிறாய்" என்றான், அன்பு.

"அதனால் என்னைக் கைவிட்டுவிடப் போகிறீர்களா?" மலர் சிரித்தாள். "இலட்சியத்தைக் கைவிடுவதுதானே இப்போது வழக்கமாக இருக்கிறது?"

"உன்னைக் கைவிட என்னால் முடியாது. ஆனாலும் என் நிலையையும் வெளிப்படையாகச் சொல்லிவிட விரும்புகிறேன். இல்லாததைச் சொல்லி உன்னை ஏமாற்ற என் மனம் இடம் தராது."

"உங்களை எனக்கு நன்றாகத் தெரியும்."

"நமது திருமணத்துக்கு என் அப்பா அனுமதி கொடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. என் அப்பா அவ்வளவு பழமைவாதி. உன்னை நான் காதலிப்பது தெரிந்தாலே எரிமலையாக வெடிப்பார்."

மலர் ஊமையானாள்.

"அதேநேரம், நீ இல்லாமல் எனக்கு ஒரு வாழ்க்கையில்லை. வீட்டைவிட்டு வெளியில் வந்தாவது உன்னைக் கைபிடிப்பேன். ஆனால், அதற்காக நீ காத்திருக்க வேண்டியது இருக்கும்."

"உங்களுக்காக நான் எவ்வளவு காலமும் காத்துக்கொண்டிருப்பேன்."

"உன் அம்மா...?"

"என் வழியில்தான் அம்மா வருவார்கள்."

"என் சொந்தக் காலில் நிற்க முடியும் என்ற உறுதி ஏற்பட்ட பின்புதான் நமது திருமணம்."

"நல்ல கொள்கை. அந்த உறுதி இல்லாதபொழுது காதலிப்பதே கூடத் தவறு!"

"எனக்கு அந்த உறுதி இருக்கிறது."

"அதற்காக வீட்டைவிட்டு வெளியேற வேண்டுமா?"

"வேறுவழி இல்லாதபோதுதான் என்று சொல்லுகிறேன். ஒருவேளை உன் அம்மாவும் இதை விரும்பாவிட்டால்...?"

"நான் வெளியேறி உங்களோடு வந்துவிடுவேன்."

"நாம் இருவரும் உறுதியாக இருந்தால், யாராலும், நம்மைப் பிரிக்க முடியாது."

"காதல் மணம் கசப்பது காசு பணத்தால்தான். வயிறு காயும்பொழுது வளர்ந்த காதல் வாடிப்போகிறது. அப்போது ஆண்கள் நளன் ஆகிவிடுகிறார்கள். காதலித்துக் கைபிடித்தோமே— நம்மை நம்பி வந்தாளே— நட்டாற்றில்விட்டுப் போகிறோமே என்று ஆண்கள் நினைத்துப் பார்ப்பது இல்லை."

"நிச்சயமாக நான் அப்படி நடந்துகொள்ள மாட்டேன்!"

"எல்லா ஆண்களும் சொல்லுவதுதான், இது. ஆனால், பசி வந்திடப் பத்தும் பறந்துபோய்விடுகிறது. நம்மைப் பொருத்தவரை நாம் இருவருமே சம்பாதிக்கிறோம். எனவே, வயிற்றுப் பசி வந்து நம்மைப் பிரிக்கவும் வழியில்லை."

"திருமணம் ஆகும்வரை உன்னை நான் தொடமாட்டேன்."

அன்பு அவள் கை மீது தன் கை வைத்துச் சொன்னான்.

மலர் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?"

அவள் கை மீது தன் கை இருப்பதை உணர்ந்தான். "ஓ..." என்று கையை எடுத்துக்கொண்டான்.

"ஒரேயடியாக சைவமாக இருந்துவிடாதீர்கள்!"

அவள் அவனை ஒட்டினாள்.

அவன் கழுத்தில் கையைக் கொடுத்து வளைத்தாள்.

அவனது அதரங்களில் தனது இதழ்களை சேர்த்தாள்!

அன்பு முதல் மாத சம்பளம் வாங்கிக்கொண்டு வந்தான்.

காமாட்சியோ "அப்பாவிடம், கொடு" என்றாள்.

அன்பு தந்தையிடம் போனான். "இந்தாருங்கள், அப்பா. என் முதல் மாதச் சம்பளம்."

அவர் மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொண்டார்.

'ஏழாயிரம் சரியாக இருக்கிறதா?' என்று நூறு ரூபாய் நோட்டுகளை எண்ணத் தொடங்கினார்.

அன்பு நகர்ந்தான்.

சுந்தரம் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். காலைச் சிற்றுண்டி. காமாட்சி பக்கத்தில் நின்று பரிமாறிக்கொண்டிருந்தாள்.

"பையன் வேலைக்குப் போய் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டான். அவனுக்கு ஒரு கால்கட்டுப் போட்டுவிட வேண்டும் அல்லவா?" மெல்லப் பேச்சைத் தொடங்கினார்.

"நானே உங்களிடம் சொல்ல வேண்டும் என்று இருந்தேன்."

"நேற்றேகூட ஒரு தரகர் வந்தார்!"

"எப்பொழுது?"

"நீ கோயிலுக்குப் போயிருந்தபோது. நாலைந்து பெண்கள் இருப்பதாகச் சொன்னார்..."

"வேலைக்குப் போகிறான் அல்லவா? பெண் வீட்டார் தேடி வருவார்கள்."

"ஜாதகங்கள் கொண்டுவரச் சொன்னேன்."



காமாட்சி இரண்டு இட்லி வைத்து, மல்லித் துவையல் வைத்தாள்.

"பெண் எப்படி இருக்கவேண்டும் என்று நினைக்கிறாய்?"

"வீட்டில் விளக்கு ஏற்றுகிறவளாக இருந்தால் போதும்!"

"வீட்டோடு இருக்கும் பெண்ணாக வேண்டும், அப்படித்தானே? வேலைக்குப் போகக்கூடாது."

"அது அவன் விருப்பம்."

"நம் விருப்பந்தான் அவன் விருப்பமாக இருக்க வேண்டும். மற்றதெல்லாம் நான் பேசிக்கொள்ளுகிறேன். முதலில் ஜாதகம் பொருந்த வேண்டும். நமக்கு ஏற்றபடி நல்லா செய்யக்கூடியவர்களாக வும் இருக்கவேண்டும்."

"நமக்கு அவசரமில்லை. இப்போதுதானே வேலைக்குப் போகிறான்."

"நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதை உன் பையன் காதிலும் போட்டு வை. அவன்பாட்டுக்கு எந்தக் கழுதையையாவது இழுத்துக் கொண்டு வந்து நிற்கப்போகிறான்."

"என் பையன் அப்படி அல்ல."

"எல்லா அம்மாக்களும் அப்படித்தான் நினைத்துக்கொண்டு இருப்பார்கள். கடைசியில் பையன் அம்மா கண்ணிலேயே மண்ணைத் தூவிவிடுவான்."

காமாட்சி ஒன்றும் சொல்லவில்லை.

"கேட்டால், காதல் என்பார்கள். பெண் யார், என்ன சாதி என்று விசாரித்தால், அத்திப்பழத்தைப் புட்டதுபோலிருக்கும்! அது என்னவோ, வேறு சாதி பெண்மேலேதான் பையன்களுக்குக் காதலே வருகிறது."

"பெண்சாதியாக இருந்தால் போதாதா? ஆணும் பெண்ணும் கட்டிக்கொள்ள வேண்டும். அவ்வளவுதானே?"

"உலகம் தெரியாமல் பேசாதே! ஆணும் ஆணும் கட்டிக்கொள்ளு கிறார்கள். பெண்ணும் பெண்ணும் சேர்ந்து வாழுகிறார்கள். கேட்டால், 'லெஸ்பியன்' என்கிறார்கள்! எல்லாம் ஒரே கண்றாவியாகப் போய்விட்டது. அதுதான் உன் பையனிடம் சொல்லி வை என்கிறேன்."

"இன்றைக்கு இரவு வருவான் அல்லவா? சொல்லிவிடுகிறேன்!"

சுந்தரம் எழுந்துபோய் கை கழுவினார்!

## 11

விளக்கு வைத்தபின்தான் வீட்டுக்கு வருவது என்று அன்பு வழக்கம் வைத்திருந்தான். ஆண்பிள்ளைதானே! யாரும் எதுவும் கேட்பது இல்லை!!

வேலைக்குப் போன முதல் நாளிலிருந்தே அவன் மலரை சந்திக்கிறான். கடற்கரையில் கலக்கிறார்கள். வீட்டுக்கு வர நேரமாகிவிடுகிறது.

"ஐந்து மணியுடன் அலுவலகம் முடிகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால், ஆறு மணிவரை வேலை இருக்கிறது" என்று முதல்நாள் சொன்ன பொய் தொடர்ந்து கைகொடுத்து வருகிறது.

இன்று வீட்டுக்கு வந்தபோது, கிட்டத்தட்ட மணி எட்டாகிவிட்டது. அம்மாவுக்குத் தெரிந்த செய்திதான் என்பதால் மலர் இவனுடன் இருக்கக் கூடுதலாக நேரம் எடுத்துக்கொள்ளுகிறான். இருவரும் சந்தித்து விட்டால் நேரம் போவதே தெரிவதில்லை!

வந்ததும், கால் கையைக் கழுவிக்கொண்டு சாப்பிட அமர்ந்தான். மதியம் கிடைப்பதை சாப்பிட்டுக்கொள்ளுவதால்– பெரும்பாலும் சிற்றுண்டி– இரவு வீட்டுக்கு வந்ததும் சாப்பாட்டை முடித்துக் கொள்ளுகிறான். அம்மா சாப்பாடு கட்டிக்கொடுத்தாலும் ஒரு 'டப்பா'தான் கொண்டுபோகிறான்.

மகனுக்கு சாப்பாடு வைத்துக்கொண்டே காமாட்சி "தரகர் வந்திருந்தார்" என்று சொன்னாள்.

"எந்தத் தரகர்?" மொட்டையாகச் சொன்னதால் இவனுக்குப் பிடிபடவில்லை.

"நம்ம வீட்டுக்கு எந்தத் தரகர் வருவார்? திருமணத் தரகர்தான்!"

"அவர் எதுக்கு நம்ம வீட்டுக்கு வந்தார்?"

"ஆ... உன் அப்பாவுக்குப் பொண்ணு பார்க்கத்தான்!"

அம்மா குலுங்கச் சிரித்தபொழுதுதான் விசயம் கட்டது."அம்மா..." என்று திடுக்கிட்டுவிட்டான், அன்பு.

"அம்மாவுக்கு என்ன?"

"இல்லை... அது... அம்மா... என் திருமணத்துக்கு இப்பொழுது என்னம்மா அவசரம்?"

"என்னோடு திருமணம் ஆனவள் எல்லாம் பேரன் பேத்தியைக் கொஞ்சிக்கொண்டிருக்கிறார்கள்."

"அதில்லைம்மா. நான் இப்பொழுதுதானே வேலைக்குப் போயிருக்கிறேன்? ஒரு ஆறு மாதமாவது போகட்டுமே!"

"உடனேயா முடிந்துவிடும்? இப்பொழுது பார்க்கத் தொடங்கினால் தான் ஆறு மாதத்திலாவது முடியும்?"

அன்பு தலையைக் குனிந்துகொண்டு, சோற்றைக் கிண்டிக் கொண்டிருந்தான்.

"சாப்பிடேன்" காமாட்சி மீண்டும் சாம்பார் ஊற்றினாள்.

"ஏற்கனவே பெண் வீட்டார் வந்துகொண்டுதான் இருந்தார்கள்



உனக்கு வேலை கிடைத்தபின்புதான் திருமணம் என்று உன் அப்பா உறுதியாக இருந்துவிட்டார்."

"அதுதான் சரிம்மா. சொந்தக் காலில் நிற்கமுடியும் என்றால்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும்."

"இது எத்தனை பேருக்குத் தெரிகிறது? என்னைத் திருமணம் செய்துகொண்டபொழுது உன் அப்பாவுக்கு வேலை கிடையாது. உன் தாத்தாவின் வருமானம்தான். எனக்கு ஒரு முழப் பூ வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றால்கூட அப்பாவிடம் போய்த் தலையைச் சொறிந்து கொண்டு நிற்கவேண்டும். எனக்கே வேதனையாக இருக்கும். அதனால் உன் அப்பாவிடம் நான் எதுவும் கேட்பது இல்லை. இந்தப் பட்டறிவினால்தான் உன் திருமணத்தைப் பற்றி இத்தனை நாளாக நான் வாயே திறக்கவில்லை."

மலரைப் பற்றிச் சொல்லிவிடலாமா என்று அன்பு நினைத்தான். அதற்குத் துணிச்சல் வரவில்லை. 'இப்போதே குட்டையைக் குழப்ப வேண்டாம். பிறகு பார்த்துக்கொள்ளுவோம்' என்று ஊமையாக இருந்துவிட்டான்!

மறுநாள் மலரை சந்தித்தபோதும் இதுபற்றி அன்பு எதுவும் சொல்லவில்லை. இப்பொழுதே அவளை ஏன் தளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்று விட்டுவிட்டான்.

அடுத்த நாள் சந்திப்பு இல்லை. "நான் உடனே வீட்டுக்குப் போகவேண்டும்" என்றாள், மலர். "அம்மா குளியறையில் வழுக்கி விழுந்துவிட்டார்கள்."

"அடடா! ஏதாவது காயமா?"

"கால் எலும்பில் முறிவு– உடனே மருத்துவரிடம் போய்க் கட்டுப் போட்டுவிட்டோம்."

"அம்மா மருத்துவமனையிலா இருக்கிறார்கள்?"

"இல்லை. மருத்துவரே வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார். வீட்டில் படுத்திருக்கிறார்கள்."

"முதிய வயதில் இதுதான் பெரிய தொல்லை. குளியறையில் வழுக்கி விழுந்து எத்தனையோ முதியவர்கள் முக்தி அடைந்திருக்கிறார்கள். அம்மாவைக் கவனமாகப் பார்த்துக்கொள்."

"அம்மா நடமாடும்வரை நான் இப்படி ஓடத்தான் வேண்டியிருக்கும்."

"அம்மாதான் முக்கியம். அவர்களைப் பார்."

அதன்பின் சில நாள் பேருந்து நிறுத்த சந்திப்புடன் சரி; ஓரிருநாள் கடற்கரை, ஓட்டல். சிலநாளில் தொலைபேசித் தொடர்பு. அவர் களிடையே பிணைப்பு வளர்ந்துகொண்டே வந்தது.

"நான் அம்மாவைப் பார்க்கலாமா?" பல நாள் யோசனைக்கு பின் அன்பு கேட்டான்.

மலர் யோசித்தாள். "அம்மாவிடமே கேட்டுவிடுகிறேனே."

வீட்டுக்கு வந்ததும் தாயிடம் கேட்டாள். அலமுவும் யோசித்தாள்.

"உங்களுக்கு விருப்பமில்லை என்றால் வேண்டாம், அம்மா."

"உன் விருப்பந்தான் முக்கியம். வாழப்போகிறவள் நீதான். நீதா எனக்குத் துணை என்று நான் நினைத்தது உண்டு. ஆனால், நா எத்தனை நாளைக்கு? நான் இருக்கும்பொழுதே உன்னை ஒருவனிட ஒப்படைத்துவிட்டால், நிம்மதியாகக் கண்ணை மூடுவேன்."

"ஏனம்மா இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்?"

எந்நேரமும் படுக்கையிலேயே இருப்பதால், அலமு சிந்தனையி மூழ்கிக்கிடந்தாள். மகளின் எதிர்காலந்தான் அவளது பெரிய கவலையா இருந்தது. 'நாம் எத்தனை நாளைக்கு?' என்று நினைக்கத் தொடங் விட்டாள். 'நாம் போய்விட்டால், மகளுக்கு யார் ஆதரவு?'

"அம்மா நன்றாக இருந்த காலத்தில் உன்னை அடக்கி ஆண்டே தளர்ந்துவிட்டபிறகுதான் அது தவறு என்பது தெரிகிறது. அதுவும் கா ஒடிந்து படுத்தபின் 'எனக்கு வாழ்வு வேண்டும், பாதுகாப்பு வேண்டு என்று உன்னையும், உன் வருமானத்தையும் நானே வைத்த கொண்டது எவ்வளவு பெரிய தவறு' என்ற புத்தி வந்தது."

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள், அம்மா. நானே கூட திருமணம் செய்துகொள்ளாமல் உங்களுக்குத் துணையாக இருந்துவி வேண்டும் என்றுதான் இருந்தேன்."

"பெண்கள் பூக்கள்தான். ஆனால், மல்லிகையோ முல்லையோ அல் மாம்பூக்கள். கொத்துக் கொத்தாகக் காய்க்க வேண்டும். எனக்கு வயதா காலத்தில் நீ இருக்கிறாய். உனக்கு வயதாகும்பொழுது யார் இருப்பா உன்னைப்போல சம்பாதிக்கிற சில பெண்கள் 'திருமணம் எதுக் என் ஆண்களுக்கு அடிமையாக இருக்கவேண்டும்?' என் கன்னியாகவே இருப்பார்கள். திருமணம் என்பது ஆண்களுக் அடிமையாவது மட்டுமல்ல; அதில் ஆயிரம் இன்ப துன்பம் இரு கிறது என்பது அனுபவித்தால்தான் தெரியும்... ஏதேதோ உள கிறேன் அல்லவா? விட்டுவிடு. அவரை அவசியம் வரச்சொல். நீ அழைத்து வா."

மலர் மகிழ்ந்துபோனாள். "நாளையே அழைத்து வருகிறேன், அம்மா

மறுநாள் காலை அவள் வேலைக்குக் கிளம்பியபொழுது, "மாலைய அவரை அழைத்து வா" என்று அலமு ஞாபகப்படுத்தினாள்.

அலுவலகத்துக்குப் போனதுமே மலர் அன்புடன் "பேசி"னா "இன்று மாலை நீங்கள் என்னுடன் வீட்டுக்கு வருகிறீர்கள்."



அன்பும் மிக மகிழ்ந்தான். "அம்மா 'சரி' சொல்லிவிட்டார்களா?"

"அம்மா நன்றாக இருந்தால் ஆரத்தி எடுத்து உங்களை வரவேற்பார்கள். அவ்வளவு சம்மதம்."

பேசிக்கொண்டபடி மாலையில் இருவரும் 'ஆட்டோ'வில் மலரின் வீட்டுக்கு வந்தார்கள்.

வீடு பளிச் என்று இருந்தது. அலமு கம்பு ஊன்றிக்கொண்டே வீட்டை ஒதுக்கியிருந்தாள். சிற்றுண்டியும் செய்து வைத்திருந்தாள்.

"இவர்தானம்மா அவர்" மலர் நாணத்துடன் அறிமுகம் செய்து வைத்தாள்.

அலமு அவனை மேலும் கீழும் பார்த்தாள். முதல் பார்வையே முத்தாக அமைந்தது. மகளைப் பார்த்துச் சொன்னாள் - "நீ கொடுத்து வைத்தவள்!"

காலையில் அலுவலகத்துக்குக் கிளம்புமுன்பே மலர் வீட்டை ஒதுக்கி வைத்துவிட்டுத்தான் போயிருந்தாள். மீண்டும் அம்மா கைபட்டதும் வீடு புதிய பொலிவுடன் தோன்றியது. "நீங்களாம்மா இவ்வளவும் செய்தீர்கள்?"

"உடம்பில் சக்தி இல்லாவிட்டாலும், மனதில் ஆசை இருக்கிறதே" அலமு புன்னகைத்தாள்.

"அவர்கள்தான் பெரியவர்கள்" என்றான், அன்பு.

"நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். நான் காப்பி போட்டுக்கொண்டு வருகிறேன்" மலர் அடுப்படிக்குப் போக முயற்சித்தாள்.

"எல்லாம் தயாராக இருக்கிறது. ஏதோ என்னால் முடிந்ததை செய்து வைத்திருக்கிறேன். அல்வா கிண்டியிருக்கிறேன். பகோடா செய்திருக் கிறேன். காப்பி போட்டு பிளாஸ்கில் ஊற்றி வைத்திருக்கிறேன்."

"என்னம்மா, நான் வந்து செய்யமாட்டேனா?"

"போய் எடுத்து வந்து கொடும்மா."

மலர் எடுத்து வந்தாள்.

"காலில் கட்டுப் போட்டுக்கொண்டு இவ்வளவும் எதற்கம்மா செய்தீர்கள்?" அன்பு ஆதங்கப்பட்டுக்கொண்டான்.

"என் மகளுக்குக் கால்கட்டுப் போடத்தான்" அலமு புன்னகைத்தாள்.

"நான் எங்கேயும் பெண் பார்க்கப் போனதில்லை. அந்தக் குறை தீர்ந்தது" அன்பும் சிரித்தான்.

"உங்கள் காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணிக்கொள்ளட்டுமா?" மலர் கேலியாகக் கேட்டாள்!

"எனக்கு அந்தக் காரம் பிடிக்காது" என்று அன்பு கிண்டலடித்தான்.

அவர்கள் இருவரும் பேசிக்கொள்ளுவதையே பார்த்துக்

கொண்டிருந்த அலமு அகமகிழ்ந்தாள்! மிக மகிழ்ந்தாள்!!

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அன்பு விடைபெற்
கொண்டான்.

மலர் வாசல்வரை வந்து அவனை வழியனுப்பி வைத்தாள்.

அவனை அருகே பிடித்து இழுத்து, அவள் காதில் அவன் இரகசி
பேசினான். "பெண் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது!"

அவள் அவன் கன்னத்தை ஈரப்படுத்திவிட்டு உள்ளே ஓடிவிட்ட

வந்த வேகத்திலேயே "எப்படியம்மா இருக்கிறார்?" என்று கேட்ட

"தங்கக் கம்பி!" அவனை முதல் முதல் பார்த்ததும் தனது மன
எழுந்த எண்ணத்தை இப்பொழுது அலமு வெளிப்படுத்தினாள்.

அன்புக்கோ வீட்டில் வேறு ஒரு தங்கக்கட்டி காத்திருந்தது!

## 12

அன்பு வழக்கம்போல வீட்டுக்கு வந்துவிட்டான்.

அவன் தலை தெரிந்ததும் அப்பா அழைத்தார். "அன்பு, இப்
வந்துவிட்டுப் போ."

"என்னப்பா?" அன்பு அருகே போனான்.

"இந்தப் படத்தைப் பார். சுந்தரம் ஒரு வண்ணப்படத்தை நீட்டின

அன்பு கையில் வாங்கிப் பார்த்தான். மனம் 'திக்திக்' என்
என்றாலும் தெரியாதவன்போல, "இது யார், அப்பா?" எ
கேட்டான், படத்தை அவரிடம் திருப்பி நீட்டிக்கொண்டு.

"பெண் அழகாக இருக்கிறாளா?" சுந்தரம் வினவினார்.

அன்பு பதில் சொல்லாமல் நின்றான்.

"இன்னொருமுறை பார்."

அவன் பார்க்கவில்லை. "நாலு பேரிடம் காட்ட ஸ்டுடியோவு
போய் எடுத்தபடம் போலிருக்கிறது" என்றான்.

"பெண் நேரிலும் அழகாக இருப்பாள் என்று தரகர் சொல்லுகிற

அன்பு கேட்டுக்கொண்டு நின்றான்.

"பெயர் தங்கம். பெயருக்கு ஏற்றபடி தங்கக்கட்டிதான் என்கிறார்
தங்கமுட்டையிடும் வாத்துங்கூட. பெரிய இடம், ஒரே பெண். பெ
பார்க்க வரச்சொல்லியிருக்கிறார்கள்."

அன்பு காதிலேயே வாங்கிக்கொள்ளவில்லை.



"ஒரு நல்ல நாள் பார்த்து வருகிறோம் என்று சொல்லியிருக்கிறேன். பஞ்சாங்கம் பார்க்கவேண்டும்."

வீட்டிலேயே பஞ்சாங்கம் இருக்கிறது. ஆனால், பஞ்சாங்கம் பார்க்கவே நல்ல நாள் பார்ப்பவர், சுந்தரம்! அது நாள் ஆகும். அந்த ஆறுதலுடன் அன்பு நகர்ந்தான்.

சாப்பிட உட்கார்ந்ததும் அம்மாவும் இதையேதான் பேசினார். "உங்கள் அப்பாவுக்கு இந்த இடம் மிகவும் பிடித்துவிட்டது. நூறு பவுன் நகை போடுவார்களாம்; ஒரு இலட்சம் கையில் கொடுப்பார்களாம்."

"அட, என்னம்மா நீங்கள்? உங்களைப் பெண் பார்க்க வந்தபோதே நகை தொகை, பண்டம் பாத்திரம், சீர்செனத்தி என்று அப்பா பேரம் பேசியிருப்பாரே? அப்போது 'பகல் கொள்ளைக்காரர்களாக இருக்கிறார்களே' என்று நீங்கள் நினைத்திருப்பீர்களே! இப்போது உங்களுக்கு மட்டும் நூறு பவுன் நகை, நூறு ஆயிரம் தொகை வேண்டுமா? இது பகல் கொள்ளை இல்லையா?"

"நீ சொல்லுவது சரிதான். ஆனால், வாங்குகிற நகை, தொகையை வெளியில் சொல்லுவது பெருமையாக இருக்கிறது அல்லவா?"

"வெளியே சொன்னால் போலீஸ் பிடித்துக்கொண்டு போய்விடும்! வரதட்சணை தடுப்புச் சட்டம் இருக்கிறது. தெரியுமல்லவா?"

"சட்டம் தூங்கிக்கொண்டிருக்கிறது! 'வரதட்சணை வாங்க மாட்டேன்' என்று வாய் கிழியப் பேசுகிற பையன்களே விலையாகிப் போகிறார்களே!"

"நான் அப்படி அல்லல, அம்மா. நான் ஒரு காசுகூட வரதட்சணை வாங்கப் போவதில்லை" அன்புக்கு எப்படியாவது இந்த இடத்தை நிறுத்தியாக வேண்டும்.

"மெல்லப் பேசுடா. உங்கள் அப்பா காதில் விழுந்துவிடப் போகிறது. அவருக்கு இந்த இடம் பிடித்துப்போய்விட்டது."

"தங்க முட்டையிடும் வாத்தாமே! அப்பா விடுவாரா?"

"ஜாதகம் கூடப் பொருந்திவிட்டது."

"ஐந்துக்குப் பத்து கொடுத்தால் எந்த ஜாதகமும் பொருந்தும்."

"உன் அப்பாவே பார்த்தார்."

"இங்கே ஜாதகம் பார்க்கப்படும் என்று வீட்டு வாசலில் ஒரு பலகை எழுதித் தொங்கப் போடச் சொல்லுங்கள்! வருமானமாவது கிடைக்கும்."

"ஏன்டா இப்படி எடுத்து எறிந்து பேசுகிறாய்?"

அம்மாவிடம் சொல்ல முடியுமா? "எனக்குத்தான் இப்போது திருமணம் வேண்டாம் என்று சொன்னேனே, அம்மா?"

"ஏன்? உனக்கு வயது ஆகவில்லையா? வருமானம் இல்லையா?"

"இப்போதுதான் சம்பாதிக்கத் தொடங்கியிருக்கிறேன். இத்தனை

நாளும் 'தண்டச்சோறு... தண்டச்சோறு...' என்று ஏச்சு வாங்கியாகி விட்டது. கொஞ்சநாள் மகிழ்ச்சியாக இருக்கிறேனே? எதுக்கு அதுக்குள் கால்கட்டு?"

"உல்லாசமா ஊர் சுற்றப் போகிறாயா? 'கோவில் மாடு போல அலைகிறான்' என்று அப்பா திட்டுவதற்கா?"

"என்னமோ செய்யுங்கள்!" அன்பு வெறுப்புடன் எழுந்து போய் விட்டான்.

அலமு எழுந்து நடமாடத் தொடங்கிவிட்டாள். இவர்களின் சந்திப்பும் தொடர்ந்தது.

ஞாயிற்றுக்கிழமைகளில் கூட சந்தித்தார்கள். திரைப்படம், ஓட்டல் என்று சுற்றினார்கள். அன்பு அப்பாவிடம் ஏதாவது பொய் சொல்லி விட்டு வரவேண்டியிருந்தது.

"உங்கள் அப்பாவிடம் எப்போது சொல்லப் போகிறீர்கள்?" ஒருநாள் மலர் கேட்டாள்.

"சொல்வதற்கே பயமாக இருக்கிறது."

"என்றைக்காவது ஒருநாள் சொல்லித்தானே ஆகவேண்டும்?"

"இன்றைக்கே ஏன் தொல்லையை வரவழைத்துக்கொள்ள வேண்டும்."

"அப்படியானால் நாம் எப்பொழுதுதான் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம்?"

"நானும் அதற்குத்தான் வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"உங்கள் வீட்டிலேயே இப்போது உங்கள் திருமணப் பேச்சு நடக்குமே?"

அன்பு ஊமையானான்.

"என்ன, பதிலைக் காணோம்?"

"ரொம்ப நாளாக நடந்துகொண்டுதான் இருக்கிறது" அன்பு மெல்லச் சொன்னான்.

"என்னிடம் நீங்கள் சொல்லவே இல்லையே?" மலரின் குரல் வேகமாக ஒலித்தது.

"உன்னையும் ஏன் துன்பப்படுத்துவானேன் என்றுதான்."

"உங்களை நம்புகிறேன்."

"நாளைக்கூட..."

"நாளைக்கூட..."

"எங்கோ பெண் பார்க்கப் போகவேண்டும் என்றார்கள். ஆனால்,

நான் போகப் போவது இல்லை."

"இது வாய்வீரம். அப்பா ஆணையிட்டதும் பூனைக்குட்டியாக ஆகிவிடுவீர்கள்!"

"அட! என்னை சரியாகப் புரிந்து வைத்திருக்கிறாயே?"

"அப்பா என்றால் உங்களுக்கு சிங்கம் புலி கரடி ஆயிற்றே! அம்மாவிடமாவது நீங்கள் சொல்லலாமே?"

"பாவம், அம்மா. அவர்களை ஏன் வம்பிலே மாட்டிவிட வேண்டும். அப்பா அம்மாவைக் கடித்துக் குதறிவிடுவார்."

"பெண் பார்க்கப் போகிற அளவு வந்துவிட்டது. என்னிடந்தான் சொல்லவில்லை; அப்பாவிடமாவது சொல்லியிருக்க வேண்டாமா?"

"சொல்ல முயற்சிக்கிறேன்... 'பெண் பிடிக்கவில்லை' என்று சொல்லித் தப்பிவிடலாம் என்ற தைரியந்தான்."

"நீங்கள் தப்பிவிடலாம். அந்தப் பெண்? 'பெண் பிடிக்கவில்லை' என்று சொன்னால், அவள் எவ்வளவு வேதனைப்படுவாள்?"

"ஆனால், என் தலை தப்பவேண்டுமே?"

"அதுக்காக அடுத்தவரை விலையாகக் கொடுப்பதா?"

"வேறு என்ன செய்யலாம்? நீயே சொல்."

"இப்போதாவது அப்பாவிடம் நம்ம விசயத்தை நீங்கள் சொல்லிவிடுவதுதான் நல்லது."

"அதுதான் நல்லது என்கிறாயா?"

"ஆமாம்."

அன்பு சிந்தனையில் ஆழ்ந்தான்!

மறுநாள் காலையில் அன்பு வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தபோது காமாட்சி நினைவுபடுத்தினாள். "மாலையில் சீக்கிரம் வந்துவிடு. பெண் பார்க்கப் போகவேண்டும்." அப்பா சொன்னார்.

"நான் வரவில்லை."

"இதை உன் அப்பாவிடம் சொல்லிவிடு."

"பெண் பார்ப்பது என்பதே காட்டுமிராண்டித்தனம். அந்தக் காலத்தில் பெண்களை வீட்டில் அடைத்து வைத்திருந்தார்கள். போய்ப் பார்க்கவேண்டியிருந்தது. இப்பொழுதுதான் பெண்களை வீதியிலேயே பார்க்க முடிகிறதே!"

"அது என்னவோ! உங்கள் அப்பா சொல்லச் சொன்னார்; சொல்லிவிட்டேன்."

"ஒரு பெண்ணைப் பத்துப்பேர் போய்ப் பார்த்தால், அந்தப் பெண்



மனம் உடைந்துபோகமாட்டாளா? பார்ப்பவன் எல்லாம் 'பெண் பிடிக்கவில்லை', 'பெண் பிடிக்கவில்லை' என்று சொல்லிக்கொண்டு போனால், அவள் தற்கொலை செய்துகொள்ளமாட்டாளா?"

"நீ சொல்லுவது எல்லாம் சரிதான். ஆனால், இன்று மாலை பெண் பார்க்க வருவதாக உங்கள் அப்பா சொல்லி அனுப்பிவிட்டார்."

"பெண் பார்க்கப் போகிறவர்கள் பெண்ணையா பார்க்கிறார்கள்? பொன்னைப் பார்க்கிறார்கள்! வீட்டிலுள்ள பொருளைப் பார்க்கிறார்கள்! பெண்ணைப் பார்த்தாலும் என்ன தெரியும்? 'மூக்கும் முழியும்' தெரியும். மனம் தெரியுமா? உடல் சிவப்பா இருக்கிற பெண்களுக்கு மனமும் சிவப்பாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் அல்ல; மனம் கறுப்பாக இருக்கலாம்! ஒரு மாலைப்பொழுதில் போய்ப் பெண்ணைப் பார்ப்பதாலேயே இதைத் தெரிந்துகொள்ள முடியாது."

மகனின் வேகமான பேச்சைக் கேட்டு சுந்தரம் எழுந்து வந்தார். "உன் மகன் என்ன சொல்லுகிறான்?"

"நீங்களே கேளுங்கள்" காமாட்சி அடுப்படிக்குப் போய்விட்டாள்.

"நான் வரவில்லை" அன்பு முரண்டினான்.

"ஏன்?"

அவன் தந்திக் கம்பமாக நின்றான்!

"எவளையாவது பார்த்து வைத்திருக்கிறாயா?"

அன்பு அதிர்ந்தான்!

அப்போதுகூட அப்பாவிடம் சொல்லிவிட அவனுக்குத் துணிச்சல் வரவில்லை.

"அப்படி எவளாவது உன் மனதில் இருந்தால் அவளை வெளியே தூக்கி எறிந்துவிட்டுத் தலை முழுகிவிடு. நான் சொல்லுகிற பெண்ணுக்குத்தான் நீ தாலி கட்டவேண்டும். உன் வாழ்க்கையைப் பற்றி என்னைவிட யாரும் அதிகம் கவலைப்பட முடியாது. எந்த அப்பனும், பெற்ற பிள்ளைக்கு 'மீன்' என்று சொல்லி பாம்புக்குட்டியைக் கொடுக்க மாட்டான். இப்போது நான் பார்த்திருக்கும் பெண் நல்ல குடும்பம். நல்ல வசதி. அழகிலும் குறைவு கிடையாது. இன்று மாலை முறைப்படி பெண் பார்க்கப் போகிறோம். நீயும் எங்களுடன் வருகிறாய்."

திட்டவட்டமாகச் சொல்லிவிட்டு சுந்தரம் திரும்பிச் சென்றார்.

நாலடி போனவர் திரும்பிவந்தார். "நாம் மாலையில் போகவேண்டும். விளக்கு வைக்கும் நேரம் பெண் வீட்டில் இருக்க வேண்டும். நீ வேலைக்குப் போனால் திரும்பிவர நேரமாகுமே? அதனால் இன்று நீ வேலைக்குப் போகவேண்டாம். வீட்டில் இரு."

ஆணையிட்டது போல அழுத்தமாகச் சொன்னார், சுந்தரம்!

# 13

மாலையில் பெண் வீட்டிலிருந்தே கார் அனுப்பியிருந்தார்கள். தரகரும் காரில் வந்திருந்தார்.

மாலைவரை தனது அறையிலேயே அன்பு அடைபட்டுக் கிடந்தான்.

கூடத்தில் சுந்தரம் காவலுக்கு இருந்தார். வாசலில் ஒரு நாயைக் கட்டிப்போட்டது போலிருந்தது!

இடையில் அன்பு வெளியே வந்தான்.

"எங்கே போகிறாய்?" அப்பா உறுமினார்.

"அலுவலகத்துக்கு 'போன்' பண்ண."

"என்ன போன்?"

"இன்று வர இயலவில்லை; விடுப்பு என்று."

"நாளைப் போய் சொல்லிக்கொள்ளலாம்."

அன்பு என்ஜின் இல்லாத பெட்டி போல நின்றான்.

"உள்ளே போ."

சாவி கொடுத்த பொம்மை போல உள்ளே திரும்பி நடந்தான்!

தந்தையின் கட்டளையைத் தட்டி அவனுக்குப் பழக்கமில்லை. சிறுவயதிலிருந்தே அப்பாவின் ஆணைக்கு அடிபணிந்தே வழக்கமாகி விட்டது. "அப்பாவிடம் சொல்லிவிடுவேன்" என்றுதான் அம்மாவே இவனை அச்சுறுத்துவாள். அப்பா வாய்திறந்தாலே கர்ச்சனையாகத் தான் இருக்கும்! அம்மா மீது சீறினால் அது அர்ச்சனையாகவும் இருக்கும்!

அம்மா பாடுதான் திண்டாட்டமாக இருந்தது. மதியம் சாப்பிட மாட்டேன் என்று சொல்லிவிட்டான். அப்பா காதுக்கு இந்த செய்தி எட்டியது. "அவனாவது மதானி பாதையில் போகாமல் மகாத்மா வழியைப் பின்பற்றுகிறானே!" என்று கேலியாகப் பாராட்டினார்!

பெற்ற மனம் கேட்குமா? அவனது அறைக்கே சாப்பாட்டுத் தட்டைக் கொண்டுபோய்விட்டாள். ஊட்டிவிடாத குறைதான். அப்படியும் நாலு வாய்தான் சாப்பிட்டான்.

கார் வந்ததும் அப்பா வந்தார். "புறப்படு. உடை மாற்றிக்கொள்" கட்டளை பிறந்தது.

எந்திரம் போல அன்பு இயங்கினான். வேண்டாவெறுப்பாக அவர்களுடன் சென்றான்.



பெண் பார்க்கும் படலம் பெரிய விருந்துடன் நடந்தது. ஆட்கள் குறைவு. ஆனால், தின்பண்டம் அதிகம். இனிப்பே மூன்று இருந்தது! காப்பியும், சுவைநீரும் வந்தன. அன்பு இரண்டையும் எடுத்துக் கொண்டான். ஆனால், எதையும் பருகாமல் பக்கத்தில் வைத்துக் கொண்டான்.

"கொஞ்சம் சிரிடா" என்று அப்பா அவ்வப்போது அவன் காதில் ஓதிக்கொண்டே இருந்தார். இவனும் பல்லைக் காட்டினான்— இஞ்சி தின்ற குரங்கு போல!

தோழிகள் புடைசூழ பெண் வந்தாள். நட்சத்திரக் கூட்டத்திடையே தங்க நிலவு போன்று தனித்து மின்னினாள். உடல் முழுக்கவே தங்கந்தான்!

பத்து விரல் மோதிரம் பளிச்சிட ஒரு கும்பிடு போட்டுவிட்டு,எதிர்த்த சோபாவில் பெற்றோருக்கு நடுவில் அமர்ந்துகொண்டாள்.

அன்பு தலைநிமிர்ந்து அவளைப் பார்க்கவில்லை. இவன்தான் பெண் என்பது போலத் தலை குனிந்திருந்தான். அதைப் பார்த்து "அவர் வெட்கப்படுவதைப் பார்" என்று தோழிகள் கிசுகிசுத்துக்கொண்டார் கள். "நல்லா பார்த்துக்கொள்" அம்மா அவன் முகத்தைத் தூக்கிவிட்டாள்.

அம்மாவும், அப்பாவும் பார்த்துப் புன்னகைத்தார்கள். பொன்னகைக் குவியலைப் பார்த்தால் யாருக்குத்தான் புன்னகை பிறக்காது!

இவ்வளவு அழகு— இவ்வளவு வசதி இருந்தும் ஏன் இந்தப் பெண்ணுக்குத் திருமணம் நடக்கவில்லை என்று யாரும் கேட்கவுமில்லை; சிந்திக்கவும் இல்லை. 'அதெல்லாம் பெரிய இடத்து விவகாரம்' என்று அடக்கமாக இருந்துவிட்டார்கள்.

"பெண்ணை எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது" அப்பா அறிவித்தார்.

"எனக்குப் பிடிக்கவில்லை" அன்பு முணுமுணுத்தான். ஆனால், அப்பா— அம்மாவைத் தாண்டி அந்தக் குரல் போகவில்லை!

"மற்றதெல்லாம் பேசி முடித்துவிடலாமா?" தரகர் அவசரப் படுத்தினார்.

பெண் கல்லூரியில் படித்திருக்கிறாள். அப்பா கார் வாங்கிக் கொடுத்திருக்கிறார். செலவுக்குப் பணம் அவளே எடுத்துக்கொள்ளலாம். இரவுகளில் ஓட்டல்களில் அவளை சந்திக்காத பையன்களே இருக்கமுடியாது. தரகரின் அவசரத்துக்கு இதுதான் காரணம். பையனுக்கு அந்தப் பழக்கமெல்லாம் இல்லாதது நல்லதாப்போயிற்று!

"எல்லாந்தான் பேசிவிட்டோமே. நாள்தான் பார்க்க வேண்டும்" என்றார், பெண்ணின் அப்பா.

"பார்த்துவிடலாமே" என்று தரகர் பஞ்சாங்கத்தைப் பிரித்தார்.

"நல்லநாள்— நல்லநேரம் பார்த்துத்தான் பஞ்சாங்கமே பார்க்க வேண்டும்" சுந்தரம் குறுக்கிட்டார். "நான் வீட்டுக்குப் போய்ப் பார்த்து சொல்லி அனுப்புகிறேன்."

அவர் பஞ்சாங்கத்தைக் கரைத்துக் குடித்தவர் என்பது தரகருக்குத் தெரியும். எனவே, தன் கையிலிருந்த பஞ்சாங்கத்தை மூடிவிட்டார்.

பெண்ணின் தந்தைக்குத்தான் ஏமாற்றம். எப்படியும் வளைத்துப் போட்டுவிடலாம் என்று இருந்தார். ஆனாலும், ஏமாற்றத்தை வெளிக்காட்டாமல் சிரித்தார். "அதுக்கு என்ன? சொல்லி அனுப்புங்கள். நாளை காலையில் தரகரை வரச்சொல்லட்டுமா?"

"நானே போன் செய்கிறேன்" என்றார், சுந்தரம்.

அத்துடன் பெண் பார்க்கும் படலம் முடிந்தது!

"என்ன, பெண் பார்த்துவிட்டீர்களா? பிடித்திருந்ததா?"

அடுத்த நாள் சந்தித்ததும் மலர் கேட்டாள்.

"வெந்த புண்ணில் வேல்பாய்ச்சாதே" என்றான், அன்பு.

"ஏன்? என்ன நடந்தது? நேற்று அலுவலகத்துக்குக்கூட வரவில்லையாமே!"

"ஆமாம்."

"இரவுதானே பெண் பார்க்கப் போயிருப்பீர்கள்?"

"பகல் முழுக்க வீட்டில் அடைத்து வைத்துவிட்டார்கள்."

"மெய்யாவா!"

"ஆமாம். நான் வீட்டைவிட்டு ஓடிவிடக்கூடாதே என்று அப்பாவுக்குப் பயம்!"

"இவ்வளவு பெரிய ஆண்பிள்ளையை வீட்டுக்குள் அடைத்து வைக்க முடிந்திருக்கிறதே! சரி, பெண் பார்க்கப் போனது என்ன ஆயிற்று?"

"எங்களுக்குப் பெண் பிடித்திருக்கிறது என்று என் அப்பாவே சொல்லிவிட்டார்."

மலர் முகம் வாடியது. "பிறகு?"

"அப்பா முகூர்த்தநாள் பார்த்துக்கொண்டிருக்கிறார்."

மலர் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"அன்பும் ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை."

"மலர்" அவள் தோளைப் பற்றித் தன் பக்கமாக அன்பு திருப்பினான். அவன் கையை அவள் எடுத்துவிட்டாள்.

"கோபமா?"

"பின்னே என்னங்க? 'அப்பாவிடம் பேசுங்கள்' என்று எத்தனை

"பார்த்துவிடலாமே" என்று தரகர் பஞ்சாங்கத்தைப் பிரித்தார்.

"நல்லநாள்– நல்லநேரம் பார்த்துத்தான் பஞ்சாங்கமே பார்க்க வேண்டும்" சுந்தரம் குறுக்கிட்டார். "நான் வீட்டுக்குப் போய்ப் பார்த்து சொல்லி அனுப்புகிறேன்."

அவர் பஞ்சாங்கத்தைக் கரைத்துக் குடித்தவர் என்பது தரகருக்குத் தெரியும். எனவே, தன் கையிலிருந்த பஞ்சாங்கத்தை மூடிவிட்டார்.

பெண்ணின் தந்தைக்குத்தான் ஏமாற்றம். எப்படியும் வளைத்துப் போட்டுவிடலாம் என்று இருந்தார். ஆனாலும், ஏமாற்றத்தை வெளிக்காட்டாமல் சிரித்தார். "அதுக்கு என்ன? சொல்லி அனுப்புங்கள். நாளை காலையில் தரகரை வரச்சொல்லட்டுமா?"

"நானே போன் செய்கிறேன்" என்றார், சுந்தரம்.

அத்துடன் பெண் பார்க்கும் படலம் முடிந்தது!

"என்ன, பெண் பார்த்துவிட்டீர்களா? பிடித்திருந்ததா?" அடுத்த நாள் சந்தித்ததும் மலர் கேட்டாள்.

"வெந்த புண்ணில் வேல்பாய்ச்சாதே" என்றான், அன்பு.

"ஏன்? என்ன நடந்தது? நேற்று அலுவலகத்துக்குக்கூட வரவில்லையாமே!"

"ஆமாம்."

"இரவுதானே பெண் பார்க்கப் போயிருப்பீர்கள்?"

"பகல் முழுக்க வீட்டில் அடைத்து வைத்துவிட்டார்கள்."

"மெய்யாவா!"

"ஆமாம். நான் வீட்டைவிட்டு ஓடிவிடக்கூடாதே என்று அப்பாவுக்குப் பயம்!"

"இவ்வளவு பெரிய ஆண்பிள்ளையை வீட்டுக்குள் அடைத்து வைக்க முடிந்திருக்கிறதே! சரி, பெண் பார்க்கப் போனது என்ன ஆயிற்று?"

"எங்களுக்குப் பெண் பிடித்திருக்கிறது என்று என் அப்பாவே சொல்லிவிட்டார்."

மலர் முகம் வாடியது. "பிறகு?"

"அப்பா முகூர்த்தநாள் பார்த்துக்கொண்டிருக்கிறார்."

மலர் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"அன்பும் ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை."

"மலர்" அவள் தோளைப் பற்றித் தன் பக்கமாக அன்பு திருப்பினான்.

அவன் கையை அவள் எடுத்துவிட்டாள்.

"கோபமா?"

"பின்னே என்னங்க? 'அப்பாவிடம் பேசுங்கள்' என்று எத்தனை

முறைசொன்னேன்? இப்போது வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டது. என்ன செய்யப் போகிறீர்கள்?"

அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

"என்னை மன்னித்துவிடு— மறந்துவிடு— அப்பாவின் பேச்சை என்னால் மீறமுடியாது என்று சொல்லப்போகிறீர்கள், அப்படித் தானே?"

"இல்லை, மலர்."

அவன் அவள் கையைப் பற்றினான்.

அவள் கையை விடுவித்துக்கொண்டாள்.

"மலர்..."

"நான் கடலில் போய் விழுந்துவிடவில்லை. இன்னும் உங்கள் அருகில்தான் இருக்கிறேன். சொல்லுங்கள்."

அவள் கண்கள் கலங்கின. இரகசியமாகக் கைவிரலால் துடைத்துக்கொண்டாள்.

"நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன், மலர்."

"சொல்லுங்கள்."

"நான் உடனே அம்மாவைப் பார்க்க வேண்டும். நாளை மாலை பார்க்கலாமா?"

"அம்மாவிடந்தான், உங்கள் முடிவைச் சொல்லுவீர்களா? என்னிடம் சொல்லக்கூடாதா?"

"அப்படித்தான் வைத்துக்கொள்ளேன்."

"சரி. அம்மாவைப் பார்க்க எப்போது வருகிறீர்கள்?"

"நாளை மாலை. நாம் இருவருமே போவோம்."

அதன்பின் இருவரும் பேசிக்கொள்ளவில்லை.

அம்மாவிடம் என்ன பேசப்போகிறான் என்று அவளும் கேட்கவில்லை. அவனும் சொல்லவில்லை.

கடல் அலை ஆர்ப்பரித்தது.

காற்று குளிர்ந்து வீசியது.

மலர் மணலில் கோலமிட்டுக்கொண்டிருந்தாள்.

"மலர்" அவன் அவள் கையைப் பற்றினான்.

இப்போது அவள் கையை விடுவித்துக்கொள்ளவில்லை.

"நல்ல முடிவுதான், மலர்."

அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் முகம் இருண்டு கிடந்தது.

"போவோமா?" அவள் எழ முயற்சித்தாள்.



"வழக்கமாக எனக்குக் கொடுப்பது" அவன் கன்னத்தைக் காட்டினான்.

"நாளை சேர்த்துத் தருகிறேன்."

"இன்றைக்கு என் மீது நம்பிக்கை இல்லையா?"

"உங்கள் கை அல்லவா எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்."

தும்பிக்கை போல அவன் அவள் இடுப்பில் கையைச் சுற்றி அவளை அருகே இழுத்துக்கொண்டான்.

"எந்தக் கையும் இதற்குத் தயார்!"

அவள் அவன் கன்னத்தை கையால் வருடினாள்.

"போதும்! போதும்!" அவள் எழுந்துகொண்டாள்.

மணலில் நடந்தார்கள். அப்போது அன்பு சொன்னான்—

"நாளை மாலை அம்மாவை சந்திப்போம். இப்போது இதை அம்மாவிடம் சொல்லாதே. நாளை அம்மாவை ஆச்சரியத்தில் மூழ்கடிப்போம்!"

## 14

'ஆட்டோ' நின்றது.

இருவரும் இறங்கிக்கொண்டார்கள்.

அன்பு பணம் கொடுத்தான்.

"உள்ளே வாருங்கள்" சொல்லிவிட்டு, மலர் படியேறினாள்.

அண்ணாசாலையிலிருந்து புறப்பட்டது முதல் இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. 'கத்திரி' போல இறுக்கமாக இருந்தார்கள்.

மலர் நேற்றே சொல்லியிருந்ததால், அலமு தயாராக இருந்தாள். "வாங்க" என்று வரவேற்று, உட்காரச் செய்தாள்.

அவர்கள் இருவரும் பேசிக்கொள்ளட்டும் என்று, மலர் அடுப்படிக்குப் போனாள். ஆனால், அவள் காது மட்டும் கூடத்திலிருந்தது.

சிற்றுண்டியுடன் அவள் திரும்பிய பின்புதான் அன்பு பேசத் தொடங்கினான். "நீயும் உட்கார்" என்றான். அவளும் அமர்ந்தாள்.

ஒரு சிரிப்புடன் அன்பு பேசத்தொடங்கினான். "அம்மா, நான் உங்கள் மகளைப் பெண் கேட்டு வந்திருக்கிறேன். உங்கள் அருமை மகளை எனக்குக் கொடுங்கள். என் கண்ணின் கருமணி போல வைத்துக் கொள்ளுவேன்."

அவன் கேட்ட முறை அம்மா–மகள் இருவரையுமே தொட்டுவிட்டது. இருவருமே நெஞ்சம் குளிர்ந்துபோனார்கள். ஏதாவது யோசனை கேட்கத்தான் வருவான் என்று இருவரும் எண்ணியிருந்தார்கள்.

அலமு மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் பேசினாள். "மலர் உங்களுக்காகவே பிறந்தவள்" என்று சொன்னாள்.

"மிகவும் மகிழ்ச்சி, அம்மா" அலமுவின் கைகளைப் பற்றிக்கொண்டு அன்பு நன்றி சொன்னான். "இப்போது என்ன சிக்கல் என்று மலர் சொல்லியிருப்பாள்."

"இல்லை. நான் அம்மாவிடம் எதுவும் சொல்லவில்லை" என்றாள், மலர். "அம்மாவை ஏன் துன்பப்படுத்த வேண்டும் என்று இருந்து விட்டேன்."

"பரவாயில்லை. நான் சொல்லுகிறேன். அம்மா..." என்று தொடங்கி பெண் பார்க்கப் போனதுவரை அன்பு தெரிவித்தான்.

"பொன் முட்டையிடும் வாத்து. எனவே, என் அப்பா விடமாட்டார். எப்படியும் என் தலையில் கட்டிவிடுவார். எனவேதான் நான் ஒரு முடிவு எடுத்திருக்கிறேன். அதற்கு உங்கள் உதவி வேண்டும்."

அலமுவுக்கும் முகம் வாடிவிட்டது. "நான் என்ன செய்யவேண்டும்?"

"நானும் மலரும் பதிவுத் திருமணம் செய்துகொள்ளப் போகிறோம். மாலையும் கழுத்துமாக அப்பா காலில் போய் விழப்போகிறோம். அப்பா அனுமதித்தால், வீட்டில் இருப்போம். இல்லையென்றால், வெளியே வந்துவிடுவோம்."

அம்மா– மகள் இருவரும் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் நெற்றி சிந்தனையில் சுருங்கியது.

"இதற்கு உங்கள் சம்மதம் வேண்டும், அம்மா."

"இதில்... நான் என்ன உதவி செய்ய வேண்டும்?" அலமு குழம்பிப் போயிருந்தாள்.

"முதலில் எனக்குப் பெண் கொடுக்க நீங்கள் சம்மதிக்க வேண்டும். இரண்டாவது நாங்கள் இருவரும் பதிவுத் திருமணம் செய்துகொள்ள நீங்கள் சம்மதிக்க வேண்டும். அடுத்து, தேவைப்பட்டால், எங்கள் வீட்டைவிட்டு வெளியே வரவும் உங்கள் சம்மதம் வேண்டும். பிறகு உங்கள் மகளைத் தெருவுக்குக் கொண்டுவந்துவிட்டேன் என்று நீங்கள் நினைக்கக்கூடாதே."

அலமு மகளைப் பார்த்தாள். அம்மா சார்பிலும் மலரே பேசினாள்.

"நமது திருமணத்துக்கு உங்கள் அப்பா அனுமதிக்கமாட்டார் என்று நினைக்கிறீர்களா?"

"நிச்சயம் அனுமதிக்கமாட்டார்."

"நாம் கோவிலில் திருமணம் செய்துகொள்ளலாமே?"

"திருமணம் எங்கே நடந்தாலும் பதிவு செய்துகொள்ளுவதுதான்
துகாப்பானது."
"மாலையும் கழுத்துமாக உங்கள் வீட்டுக்குப் போகிறோம். உங்கள்
ப்பா ஏற்றுக்கொள்ளாவிட்டால் வெளியே வருகிறோம். வெளியில்
த்து?"
"தனிக்குடித்தனம்."
"எங்கள் வீட்டுக்கு வந்துவிடலாமே?"
"வீணாக அம்மாவின் தலை உருளும். அது வேண்டாம். நாம் ஒரு
டு பார்த்துக்கொள்ளுவதுதான் நல்லது."
"அம்மாவுக்குப் பாதுகாப்பு வேண்டுமே?"
"வழக்கம் போல உனது சம்பளத்தை அம்மாவிடம் கொடுத்துவிடு.
தைத் தடுக்கமாட்டேன்."
"எப்பொழுது திருமணம் செய்துகொள்ளப் போகிறீர்கள்?"
"நாளையே!"
"நாளையேவா..." மலருக்கு ஆச்சரியம்.
"நாள் பார்க்க வேண்டாமா?" அலமு கேட்டாள்.
"எங்கள் திருமணம் நடக்கும் நாளே எங்களுக்கு நல்ல நாள்" என்ற
ன்பு."இந்தத் திட்டத்தில் உங்கள் இருவருக்கும் சம்மதந்தானே?" என்று
ட்டான்.
"எல்லாம் அவன் செயல்" என்றாள், அலமு.
"எனக்கு உங்கள் சம்மதம் வேண்டுமே?"
"மனநிறைவோடு உங்களை வாழ்த்துகிறேன்."
"அது போதும்மா" என்ற அன்பு மலரைப் பார்த்தான்.
"நான் உங்கள் நிழல்" என்றாள், அவள். "உங்கள் அப்பா என்றால்
தகமெல்லாம் பார்ப்பார்."
"மனம் ஒன்றுபட்டுவிட்டால், வேறு எதுவும் பார்க்க வேண்டியது
ல்லை என்று அப்பாவே கூறுவார்."
"சரி, கிளம்பு?"
"எங்கே?"
"நாளை நம் திருமணம். அதற்குப் புத்தாடைகள் வாங்க வேண்டும்
ல்லவா? திருமணப் பதிவு அலுவலகத்துக்கும் போய், சில
ன்னேற்பாடுகள் செய்யவேண்டியிருக்கும்."
அம்மாவிடம் சொல்லிக்கொண்டு இருவரும் வெளியே வந்தபோது
லர் கேட்டாள்: "உங்களுக்கு எப்படி இந்த யோசனை தோன்றியது?"
"நான் வீட்டை விட்டு ஓடிவிடக்கூடாது என்று வீட்டுக்குள் அடைத்து
வைத்தபோது!" என்றான், அன்பு.

றுநாள் புத்தாடை பளபளக்க, பூமாலை மணமணக்க இருவரும் ணப் பதிவு அலுவலகத்தில் கையெழுத்திட்டுவிட்டு, முதலில் விடம் வந்தார்கள். கண்கள் பனிக்க அவள் வாழ்த்தினாள்.

ங்கேயிருந்து மலரை அழைத்துக்கொண்டு அன்பு தனது ருக் கிளம்பினான்.

ட்டோ'விலிருந்து இறங்கியதும் மலரின் கையைப் பற்றிக்கொண்டு குள் நுழைந்தான்.

பதித்தாளில் மூழ்கிக்கிடந்த சுந்தரம், தலையை நிமிர்த்திப் ார்.

த்ததும், அதிர்ந்து, துள்ளிக் குதித்து எழுந்தார். "காமாட்சி, இந்தக் கண்றாவியைப் பார்!" என்று கூச்சல் போட்டுவிட்டு, நோக்கி ஓடிவந்தார்.

னடா இதெல்லாம்?" ஆவேசமாகக் கேட்டார்.

ரந்துவந்து பார்த்த காமாட்சிக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. மணக்கோலத்தில் பார்க்க மகிழ்ச்சியாகவும் இருந்தது.

களை வாழ்த்துங்கள், அப்பா!" இருவரும் அவர் காலில் ர்கள்.

ரோ காலால் எட்டி உதைத்தார். "உன்னைக் கொலை வேண்டும்" ஆவேசத்தோடு மகன் கழுத்தில் கிடந்த மாலையைப் . அது குரங்குகை பூமாலை ஆயிற்றே!

கண்முன் நிற்காதே! போய்விடு! இல்லை, இங்கே இரண்டு காலை விழும்!" காட்டுத்தனமாகக் கத்தினார்.

க்கு எப்பேர்ப்பட்ட பெண் பார்த்து வைத்திருக்கிறேன்... யாரடா ழுதை... யாராயிருந்தால் என்ன... உனக்கு இனி இந்த வீட்டில் டையாது. வெளியே போய்விடு!" சுந்தரம் மகனைப் பிடித்துத் ர்.

இதையெல்லாம் எதிர்பார்த்து வந்தவள்தான். எனவே, நின்றாள்.

ட்சிதான் "என்னங்க இதெல்லாம்?" என்று ஓடிவந்தாள்.

, அந்தத் தறுதலைப் பயலுக்கு நீ ஆரத்தி எடுக்கப் போகிறாயா? ளே" மனைவியையும் பிடித்துத் தள்ளினார், சுந்தரம்.

னும் ஏன் இங்கே நிற்கிறாய்? வெளியே போ!" மகனை ாண்டு போய் வீதியில் தள்ளினார்.

அவர்கள் பின்னே வந்தாள்.

த் தாழிட்டுவிட்டு சுந்தரம் கூடத்துக்கு வந்தார்.

ட்சி இன்னும் அங்குதான் நின்றுகொண்டிருந்தாள்.



"யாரடி அந்தப் பெண்?" கொதிப்பு அடங்காமலே சுந்தரம் கேட்டார்.

"எனக்கு என்ன தெரியும்?"

"நடிக்காதே! எதிலுமே நீயும் உன் மகனும்தானே கூட்டு? உனக்கு எல்லாம் தெரியும்..."

"எனக்கு எதுவுமே தெரியாதுங்க..."

"தெரிந்தும் எல்லாவற்றையும் மறைத்துவிட்டாய். என் மானத்தைத் தெருவில் இரைத்துவிட்டாய்! இனி உனக்கும் இந்த வீட்டில் இடம் கிடையாது. வெளியே போ..."

காமாட்சி திடுக்கிட்டாள். "என்னங்க சொல்லுகிறீர்கள்?"

"வெளியே போ! போய்விடு!!" சுந்தரம் சிவதாண்டவம் ஆடினார்.

"நான்... நான் எங்கே போவேன்?"

"மகன் இருக்கிறான் அல்லவா? அவன்கிட்டப்போ..."

"நான் போகமாட்டேன்!"

"வெளியே போடி என்று சொல்லுகிறேன்..."

மனைவியின் கூந்தலைப் பிடித்துத் தரதர என்று இழுத்துக் கொண்டு வந்து வீதியிலே தள்ளி கதவைத் தாழிட்டார், சுந்தரம்!

## 15

நேற்று நடந்தது போலிருக்கிறது. ஆனால், ஓராண்டு ஓடிவிட்டது.

மலர் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டாள். அம்மா வீட்டுப் பக்கந்தான் குடியிருக்கிறாள். ஞாயிற்றுக்கிழமை என்றால் அம்மா வீட்டில் அவளைப் பார்க்கலாம். அம்மாதான் பிள்ளைப்பேறு பார்த்தாள். வேலைக்குப் போகும்பொழுது குழந்தையை அம்மா வீட்டில் விட்டுப்போகிறாள். மாலையில் திரும்பும்போது எடுத்து வந்துவிடுவாள். அன்பு 'பைக்' வாங்கிவிட்டது மிகவும் வசதியாக இருக்கிறது.

வீட்டிலிருந்து வெளியே தள்ளப்பட்ட காமாட்சிக்கு வெகுநேரம் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோலிருந்தது. அவளுக்கு அம்மா–அப்பா இல்லை. தம்பிகள் இருக்கிறார்கள். இந்த அவமானத்தை சுமந்துகொண்டு அவர்களிடம் போகத் தயங்கினாள். வேறு போக்கிடம் இல்லையே! அப்போதுதான் லீலாவதியின் நினைவு வந்தது. காமாட்சியின் பள்ளித் தோழி. அவள். கணவன் இல்லை. ஒரே மகனும் திருமணம் செய்துகொண்டு, அமெரிக்காவுக்குப் போய்விட்டான். அவள் மட்டும் வீட்டில் தனியாக இருந்தாள். அங்கே காமாட்சி அடைக்கலம் புகுந்தாள்.

ஒருவருக்கு ஒருவர் துணையாக இருப்போம்" என்று லீலாவதி
சியுடன் வரவேற்றாள்.

ரமும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தார். சொல்லப்போனால்,
னவிட அதிக மகிழ்ச்சி. பிச்சுப் பிடுங்கல் இல்லை! வேலைக்கு
யாவை வைத்துக்கொண்டார். பொன்முட்டையிடும் வாத்துக்
எட்டாமல் போய்விட்டதே என்ற ஒரே ஒரு கவலைதான்
கு. வீடு தேடி வருகிறவர்களுக்கு ஜாதகம், கைரேகை, ஆருடம்
ச் சொல்லி நேரத்தைப் போக்கினார். வருமானமும் கிடைத்தது.
ஜாதகமே சரியில்லை" என்று பேசிக்கொண்டவர்களும் உண்டு!

ழந்தை குமரனுக்கு முதல் பிறந்த நாள்.

ளங்க, குழந்தையை எடுத்துக்கொண்டு கோவிலுக்குப்
ரலாமா?"

று விடுமுறை நாளாகவும் இருந்தது. ஏறு 'பைக்'கில் என்றான்,

த்த அரை. மணி நேரத்தில் இருவரும் வடபழநி கோவிலில்
ர்கள்.

கும்பிட்டுவிட்டு பிரகாரத்தை சுற்றி வந்துகொண்டிருந்த
கு இன்ப அதிர்ச்சி! "அம்மா..." என்று கூவிக்கொண்டு
ன்! தாயைக் கட்டிப்பிடித்துக்கொண்டான்!

பொழுதுதான் தலைகுனிந்தபடி மெல்ல வந்துகொண்டிருந்த
சியும் மகனைப் பார்த்தாள். அவளுக்கும் கொள்ளைக் குதூகலம்.
கலங்கிவிட்டன. "நல்லா இருக்கிறாயா, மகனே?" பிள்ளையை
யாகத் தடவிப் பார்த்தாள்!

கள் நல்லா இருக்கிறீர்களா, அம்மா?" அன்புக்கும் நா
ந்தது.

நினைவிலே வாழ்ந்துகொண்டிருக்கிறேன்" காமாட்சி
சுவிட்டாள்.

குள் மலர் அவர்கள் அருகே வந்தாள். அவள்தான் குழந்தையை
ந்தாள்.

கள் பேரன், அம்மா" அவளிடமிருந்து குழந்தையை வாங்கி,
கையில் கொடுத்தான், அன்பு.

ாட்சி பனிக்கட்டியாக உருகிப்போனாள். "என் பேரனா... என்
..." என்று முத்தமாரிபொழிந்தாள்! உலகையே மறந்து
க் கொஞ்சினாள்!

தை அம்மாவை நோக்கிக் கையை நீட்டினான்.

ப் பெண்தான்..." காமாட்சி மலரைப் பார்த்தாள்.



"உங்கள் மருமகள், அம்மா."

சட்டென்று மலர் காமாட்சியின் காலில் விழுந்து வணங்கினாள்.

"மகராசியா இரும்மா" காமாட்சி வாய்நிறைய வாழ்த்தினாள்.

"அத்தை! உங்கள் பேரனையும் வாழ்த்துங்கள். இன்று அவனுக்கு முதல் பிறந்த நாள். அதுதான் கோவிலுக்கு வந்தோம்" என்று மலர் சொன்னாள்.

"என் தங்கத்துக்குத் தங்கக்கட்டி கொடுக்க வேண்டுமே" என்று அலைமோதிய காமாட்சி, தன் கழுத்தில் கிடந்த சங்கிலியைக் கழற்றி, குழந்தையின் கழுத்தில் போட்டாள். "நூறு வயது வாழவேண்டும்" என்று உச்சிமுகர்ந்தாள்.

"அப்பா நல்லா இருக்கிறாரா, அம்மா?" அன்பு கேட்டான்.

"யாருக்குத் தெரியும்!" பட்டும்படாமல் காமாட்சி பதில் சொன்னாள்.

"என்னம்மா அப்படிச் சொல்லுகிறீர்கள்!"

"உங்களை விரட்டிய அன்றே என்னையும் வெளியே தள்ளி கதவைப் பூட்டிவிட்டார்" காமாட்சி துயரத்துடன் சொன்னாள்.

"ஏனம்மா!" அன்புக்கு ஆச்சரியம்!

"உங்கள் திருமணத்துக்கு நானும் உடந்தையாம். அவரிடம் சொல்லாமல் மூடிமறைத்துவிட்டேனாம்."

"இது தவறு அல்லவா? உங்களுக்கு எதுவுமே தெரியாதே."

"இதை யார் உங்கள் அப்பாவிடம் சொல்ல முடியும்! சொன்னாலும் காது கொடுத்துக் கேட்பாரா?"

"பெரிய அநியாயம் அம்மா! இவள் யார் என்றே உங்களுக்குத் தெரியாதே."

காமாட்சி அமைதியாக நின்றாள்.

"எனக்குக் குடை கொடுத்தாளே, அந்தப் பெண்தான், இவள்."

"நல்ல உள்ளம்! எல்லாம் பெற்று வாழ்க! உன் பெயர் என்னம்மா?"

"மலர், அத்தை."

"பெயரைப் போலவே உனக்கு மலர்ந்த உள்ளம். நீயும் மலர் போலவே இருக்கிறாய்."

மலர் நாணினாள்.

"நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள், அம்மா?"

"லீலாவதி அத்தை வீட்டில்."

"நம் வீட்டில் அப்பா மட்டுந்தான் இருக்கிறாரா?"

"அவருக்குத் துணையாக இருளும் இருக்கிறது!"

"நம்ம குடும்பம் இப்படி சிதைந்துபோய்விட்டதே, அம்மா."

காமாட்சி ஒன்றும் சொல்லவில்லை.

"எங்களோடு வந்துவிடுங்கள், அம்மா" அன்பு அழைத்தான்.

"வேண்டாம். உன் அப்பா சொன்னது உண்மையாகிவிடும். ம்மாவும் பிள்ளையும் சேர்ந்துகொள்ளுவார்கள்' என்று எப்போதும் ால்லிக்கொண்டிருப்பார்."

பிரியா விடை பெற்று வீட்டுக்குத் திரும்பினார்கள்.

வந்ததுமே "என்னங்க..." என்றாள், மலர்.

"சொல்லுங்க" என்றான், அன்பு.

"அத்தையைப் பார்க்க ரொம்பப் பரிதாபமாக இருக்குங்க."

"அந்தப் பரிதாபத்தைச் சொல்ல புதிய வார்த்தை கண்டுபிடிக்க ண்டும்."

"நம்மால்தானே அவர்கள் பிரிந்தார்கள்?"

"அப்பாவின் கோபத்தால்."

"நாம் சேர்ந்து வாழ, அவர்கள் பிரிந்து வாழவேண்டுமா?"

"அதுக்காக?"

"நாம் பிரிந்தால்தான் அவர்கள் சேரமுடியும் என்றால், நாம் ந்துவிடலாமே?"

"என்ன சொல்லுகிறாய், மலர்?"

"அத்தையைப் பார்த்தபின்பு என் மனமே சரியில்லைங்க. அவர்கள் ணீரில் மிதக்கும்போது நாம் பன்னீரில் நீச்சல் அடிக்கலாமா?"

"நாம் வாழவேண்டியவர்கள்."

"நாம் வாழ்ந்துவிட்டோம். அதற்கு சாட்சியாகக் குழந்தை குமரன் நக்கிறான். அத்தையைப் பார்த்தது முதல் நான் பெரிய தவறு ய்துவிட்டது போல உணர்கிறேன். என் நெஞ்சில் ஒரு முள் குத்திக் ாண்டே இருக்கிறது."

"மலர்..."

"நாம் பிரிந்தாவது அவர்களை சேர்த்து வைக்க வேண்டும்."

"நான் எப்படியாவது அம்மாவை நம்முடன் இருக்க அழைத்து துவிடுகிறேன்.'

"அதுவும் பிரிவுதானே? நான் சொல்லுவதைக் கேளுங்கள். என் ாணா அல்லவா... நான் அம்மா வீட்டில் போய் இருப்பேனாம். கள் உங்கள் வீட்டுக்குப் போவீர்களாம்."

"ஊகூம்! முடியாது."



"நான் சொல்லுவதை நீங்கள் கேட்கவேண்டும். இல்லாவிட்டால், உங்களுடன் காய்!"

கொஞ்சியும் கெஞ்சியும் மிஞ்சியும் அவனை சம்மதிக்க வைத்துவிட்டாள், மலர்!

"அப்பா..."

செய்தித் தாளிலிருந்து பார்வையை நகர்த்திப் பார்த்த சுந்தரத்து நம்பமுடியவில்லை!

"நான்தான், அப்பா."

சுந்தரம் பார்வையை எட்ட ஓட்டிப் பார்த்தார்.

"நான் மட்டுந்தான் வந்திருக்கிறேன், அப்பா."

சுந்தரம் எழுந்து வந்தார். "அந்தக் கழுதையை அடித்து விரட்டிவிட்டாய் அல்லவா?"

"என்னை விட்டுவிட்டு அவளே போய்விட்டாள், அப்பா."

"எனக்குத் தெரியுமடா!" சுந்தரம் எக்காளமாகச் சொன்னார். "கண்டவன் பின்னே போகிற எல்லோருமே இப்படித்தான் திரும்பி வந்துவிடுவார்கள்."

"என்னை மன்னித்துவிடுங்கள், அப்பா."

"வா மகனே வா!" மகனை ஆரத் தழுவி அழைத்துப்போனார்.

"அம்மா... அம்மா..." என்று கூவிக்கொண்டு அடுப்படிவரை போனவன், "அம்மாவை எங்கே அப்பா?" என்று கேட்டுக்கொண்டே திரும்பி வந்தான், தெரியாதவன் போல.

"அம்மா வீட்டில் இல்லை" சுந்தரம் அமைதியாகச் சொன்னார்.

"எங்கே, கோவிலுக்குப் போயிருக்கிறார்களா?"

"இல்லை. வீட்டைவிட்டே போய்விட்டாள்."

"என்னப்பா சொல்லுகிறீர்கள்?"

"உன்னோடு சேர்ந்து உன் அம்மாவும் நாடகம் ஆடினாள் அல்லவா? அதனால் அவளையும் வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிட்டேன்."

"அப்பா, அம்மாவுக்கு எதுவுமே தெரியாது, அப்பா."

"அவளும் அப்படித்தான் சொன்னாள். நடந்தது நடந்துவிட்டது, விடு. நடப்பதாவது நல்லதாக இருக்கட்டும்" என்ற சுந்தரம், "பொன் முட்டையிடும் வாத்து இன்னும் இருக்கிறதோ... திருமணமாகி விட்டதோ... அவள் இல்லாவிட்டால், ஆயிரம் பெண் இருப்பார்கள்" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டார்.

காதில் விழாதவன் போல அன்பு தனது அறைக்குப் போய்விட்டான்.

அன்பு கொஞ்சம் கொஞ்சமாக அப்பாவைக் கரைத்தான்.

ம்மா இல்லாமல் நீங்கள் மெலிந்துபோய்விட்டீர்கள், அப்பா."

ம்மா இல்லாமல் வீடே வீடாக இல்லை, அப்பா."

யா சமையலா பண்ணுகிறது? வாயில் வைக்க முடியவில்லை."

னக்குப் பெண் பார்க்கிறீர்கள், சரி. பெண் பார்க்கப் போவது ல், அம்மாவும் வேண்டும் அல்லவா? நீங்களும், அம்மாவும் ருப்பது தெரிந்தால் பெண் கொடுப்பவர்கள் தயங்குவார்களே?"

ரம் பார்த்து இப்படி எதையாவது சொல்லிக்கொண்டிருந்தான்.

ன்தான் வீட்டுக்கு வந்துவிட்டேனே, அப்பா. ஒரு தவறும் ாத அம்மா ஏன் வெளியில் இருக்கவேண்டும்?"

ம்மா எங்கே போனாள் என்றே தெரியவில்லையே?"

லாவதி அத்தை வீட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். நேற்று தான் பேருந்தில் வரும்போது பார்த்தேன்."

ய போய்க் கூட்டிக்கொண்டு வா."

பா சொல்லி வாய் மூடுமுன் சிட்டுக்குருவி போல அன்பு த்துப் பறந்தான்!

## 16

ரில் அடித்த பந்துபோல, போன வேகத்தில் அன்பு திரும்பி ர.

மா எங்கே? வரவில்லையா?" சுந்தரம் கேட்டார்.

லை, அப்பா" அன்பு தலைகுனிந்தான்.

?"

கள் போய்க் கூப்பிட்டால்தான் அம்மா வருவார்களாம்."

க்குத் தெரியுமடா! உங்கம்மா மானி!"

மாவைக் கூப்பிட எப்பப்பா போகிறீர்கள்?"

லந்து நாள் அன்பு நெருக்கியபின்பு சுந்தரம் அசைந்து தார். மனைவியை அழைத்துவரக் கிளம்பினார்.

வர் வருவார் என்று காமாட்சி கொஞ்சமும் எதிர்பார்க்க அவர் லேசியில் கரைகிறவரும் அல்லர்; விட்டுக்கொடுப்பவரும் ஆனால், அவர் வந்ததால் அவள் ஒரேயடியாக மகிழ்ந்து லை. ஒப்புக்கு "வாங்க" என்றாள்.

வதி அவருக்கும் தெரிந்த பெண்தான். இரு குடும்பமும் வீட்டுக்கு



அஞ்சலக எண்:

95

ந்துபோகக்கூடியவர்கள். லீலாவதியும் வந்து "வாங்க அண்ணா" என்று ரல் கொடுத்துவிட்டு, காப்பி கொண்டுவர உள்ளே போய்விட்டாள்.

அவரே மிடுக்காக அமர்ந்துகொண்டார். "பிள்ளை வந்து ப்பிட்டதற்கு 'வரமுடியாது' என்று சொல்லிவிட்டாயாமே?" அதே ம்பீரம்.

"அவனா என்னை வீட்டைவிட்டு வெளியே போகச் சொன்னான்?" மாட்சி இறுக்கமாகப் பேசினாள். அந்த அளவுக்கு அவள் நெஞ்சம் நாந்துபோயிருந்தது.

"சரி, சரி, கிளம்பு, நம் வீட்டுக்குப் போவோம்."

"நான் வரவில்லை."

"ஏன்?"

"நாம் தாலி கட்டிக் கூட்டிவந்த பெண் ஆயிற்றே என்று காஞ்சமாவது நினைத்தீர்களா?"

"அட! ஆத்திரக்காரனுக்கு அறிவு மட்டந்தானே?"

"கணவன்- மனைவி என்ற உறவுக்கே ஒரு அருத்தமில்லாமல் ாய்விட்டதே."

"தப்புத்தான் என்று சொல்லிவிட்டேனே. புறப்படு."

காமாட்சி மரமாக நின்றாள்.

லீலாவதி காப்பி கொண்டுவந்து கொடுத்தாள்.

குடித்துக்கொண்டே "இன்னும் என்ன?" என்று சுந்தரம் மனைவி ப் பார்த்தார்.

"அன்பு தனியாகவா வந்திருக்கிறான்?"

"அவனுக்குத்தான் நல்ல பெண்ணாகப் பார்த்துக்கொண்டிருக் றன்."

"ஏற்கனவே அவன் மணந்துகொண்ட பெண் என்ன ஆனாள்?"

"அவளைப் பற்றிப் பேசாதே!"

"அவளை விட்டுவிட்டா அன்பு வந்திருக்கிறான்?"

"ஆமாம். அவளைத் தலை முழுகிவிட்டு வந்திருக்கிறான்."

"நாம் ஒன்று சேர்ந்து வாழவேண்டும். அவர்கள் மட்டும் பிரிந்து ழவேண்டுமா?"

"அவனுக்குத்தான் வேறு பெண் பார்த்துக்கொண்டு இருக்கிறேனே!"

"இன்னொரு பெண்ணும் சேர்த்துப் பாருங்கள்!"

எதுக்கு?"

உங்களுக்கு! நீங்கள் மட்டும் ஏன் என்னைத் தேடி வருகிறீர்கள்?"

இந்த இடக்குதானே வேண்டாம்! கொஞ்சம் இடம் கொடுத்தால் லக்கு மேல் ஏறிவிடுவீர்களே!"

அவர்கள் இருவரும் சேர்ந்து வாழவேண்டும். அப்போதுதான் நான்



வீட்டுக்கு வருவேன்."

"இதுதான் உன் முடிவா?"

"ஏன் அந்தப் பெண்ணை வேண்டாம் என்று சொல்லுகிறீர்கள்?"

"அந்தப் பெண் யார், எவள், என்ன சாதி, அவள் அப்பன் யார், அவனுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது, ஏதாவது தெரியுமா?"

"மழையில் நனைந்த நம்ம பையனுக்குக் குடை கொடுத்து உதவியிருக்கிறாள். அந்த நல்ல உள்ளம் ஒன்று போதாதா?"

"அந்தப் பெண்தானா?"

"அவளாகத்தான் இருக்க வேண்டும்."

"முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி என்று நினைத்துவிட்டாயா? கேவலம், ஒரு குடை!"

"கொடுத்தாளே- அந்த நல்ல உள்ளத்தைப் பாருங்கள்!"

"அதுக்கு நன்றிக்கடனாக அவளிடம் இவன் உள்ளத்தைக் கொடுத்துவிட்டானாக்கும்."

காமாட்சி ஒன்றும் சொல்லவில்லை. சற்றுக்கழித்து-

"சின்னஞ்சிறு பிள்ளைகள், மனம் ஒன்றிப் போய்விட்டது. அவர்களை வாழ்த்தி வாழ வைக்க வேண்டியதுதான் நமது கடமை."

"சாதிகெட்ட பெண்ணாக இருந்தால்..."

"தன் பெயரோடு சாதியையும் சேர்த்துச் சொல்லுவது அநாகரிகமாக நினைக்கிற காலம், இது."

"அவள் பிச்சைக்காரியாக இருந்தால்..."

"ஒரு காற்றடித்தால் போதும், கோபுர உச்சிக்குப் போய்விடுவாள்."

சுந்தரம் அமைதியாக இருந்தார்.

"நமக்கு இருப்பது ஒரே பையன். இந்தக் கடைசிக் காலத்தில் அவன் பெண்டாட்டி பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்வதைப் பார்ப்பது தான் நமக்கு மகிழ்ச்சி. இந்த வயதுக்குமேல் நமக்கு வேறு என்ன வேண்டும்? கொஞ்சி விளையாடவா போகிறோம்! பையன் ஒரு பேரனைப் பெற்றுக் கொடுத்தால், பேரனோடு கொஞ்சி விளையாடப் போகிறோம். வீடே கலகல என்று நிறைந்திருக்கும்."

"இப்ப நீ என்னதான் சொல்லுகிறாய்?" சுந்தரம் வாய் திறந்தார்.

"நம்ம பிள்ளை அவன் மனைவியோடு சேர்ந்து வாழ வேண்டும். அப்போதுதான் நான் உங்களோடு வருவேன்."

"இல்லாவிட்டால்..."

"பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளித் துள்ளி விளையாண்டானாம்! அந்த விளையாட்டுக்கு நான் வரவில்லை."

சுந்தரம் மீண்டும் அமைதியில் ஆழ்ந்தார்.

காமாட்சி கணவனையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

"சரி, வா, போவோம்."

காமாட்சியின் முகம் மலர்ந்தது. "மருமகள்?"

"நாம் போய் பையனை அனுப்பி அழைத்துவரச் சொல்லுவோம்."

"வாருங்கள், போவோம்" காமாட்சி களிப்புடன் கிளம்பினாள்.

"இப்படியேயா? எதுவும் எடுத்துக்கொள்ளவில்லையா?"

"கட்டிய சேலையோடுதானே என்னை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினீர்கள்? அதுபோல, கட்டிய சேலையோடு உங்களோடு வரவேண்டியதுதான்" காமாட்சி சேலையை சரிசெய்துகொண்டாள்.

"அழைச்சிட்டுப் போங்க, அண்ணாச்சி. உங்கள் பின்னேயே சீர்வரிசை வரும்!" என்று லீலாவதி சொல்ல, மூவருமே சிரித்துவிட்டார்கள்.

**சு**ந்தரமும் காமாட்சியும் ஆட்டோவில் போய் இறங்கினார்கள்.

'ஆட்டோ' ஓசை கேட்டதும் வாசலுக்கு வந்த அன்பு, "கொஞ்சம் நில்லுங்கள், அப்பா."

"ஏன்?" என்று சுந்தரம் புரியாமல் கேட்டார்.

மலர் ஆரத்தித் தட்டோடு வந்தாள்.

"இது யாருடா?" சுந்தரம் கண்களை மலர்த்தினார்.

"இதுக்கே இப்படி ஆச்சரியப்பட்டால் எப்படி அப்பா?" என்ற அன்பு, ஆரத்தித் தட்டைக் கையில் வாங்கிக்கொள்ள, மலர் உள்ளே போய்க் குழந்தை குமரனைத் தூக்கி வந்தாள்.

"உங்கள் பேரன், அப்பா" என்று அன்பு சொல்ல—

"ஆ! என் பேரனா! கொடு! கொடு!" மலர் கையிலிருந்து சுந்தரம் குழந்தையைப் பறித்துக்கொண்டு கொஞ்சத் தொடங்கிவிட்டார்!

குழந்தை அய்யாப்பாவுக்கு "பன்னீர்" தெளிக்க, அதைப் பார்த்து எல்லோரும் 'கொல்' என்று சிரிக்க, வீடு முழுக்க அந்த இனிய ஒலி எதிரொலித்தது!

**(முடிந்தது)**

---

*ராணி பப்ளிகேசன் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.*